விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 06 வியாழக்கிழமை (19.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 031

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# புதிய அரசியலமைப்பில் தவறிழைக்கக்கூடாது!

## 13 ஐ முழுமைப்படுத்துவோம்; அமைச்சர் சரத் பொன்சேகா செவ்வி



(கொழும்பு)

13வது திருத்தச்சட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்லத் தேவையான அனைத்து சட்ட மற்றும் அரசியல் நடவடிக்கைகளையும் அரசாங்கம் பூரணமாக மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்த பீல்ட் மார்ஷலும் அமைச்சருமான சரத் பொன்சேகா, அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளல் மற்றும் அரசியலமைப்பு மாற்ற விடயங்களில் முன்பு இழைத்த தவறுகளை மீளவும் செய்யக்கூடாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(23-ம் பக்.)

## மயங்கி வீழ்ந்த மூதாட்டி மரணம்

(கரணவாய்)

பஸ்சில் பயணிப்பதற்காக ஏறிய மூதாட்டி ஒருவர் பஸ்சில் மயங்கி வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 17-ம் திகதி செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் பயணிப்பதற்கு தயா

24ஆம் பக்கம் பார்க்க....

## மோ.குண்டால் பெரும் பரபரப்பு



(கரணவாய்)

நிலத்தினைப் பண்படுத்திய போது

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி
## 27,162 குடும்பங்களை சேர்ந்த 93,917 பேர் பாதிப்படைவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினால் 27 ஆயிரத்து 162 குடும்பங்களை சேர்ந்த மொத்தம் 93 ஆயிரத்து 917 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களினூடாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ் வரட்சியால் காரைநகர் பிரதேசத்திற்கான குடிநீர் விநியோக நடவடிக்கைகளும் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பிரிவு தெரிவித்துள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிக்க மைத்திரி கடமைப்பட்டுள்ளார்

### மக்கள் ஆணை என அமைச்சர் கிரியெல்ல கருத்து



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க கடமைப்பட்டுள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பெருந்தெருக்கள் அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட

23ஆம் பக்கம் பார்க்க....

## சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மாடி கட்டடத்தில் இருந்து தவறி கீழே விழுந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி யாழ் போதனா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்

சுழிபுரம் வட்டுக்கோட்டையை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சின்னராசா பெனடிற் (வயது 32) என்பவரே மேற்படி உயிரிழந்த

23ஆம் பக்கம் பார்க்க....

## கிழக்கில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த "எழுக தமிழ்" நிகழ்வு 28-ம் திகதிக்கு மாற்றம்

### தமிழ் மக்கள் பேரவை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் மாபெரும் மக்கள் எழுச்சியுடன் நாளை மறுதினம 21-ம் திகதி நடைபெறவிருந்த எழுக தமிழ் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக தமிழ் மக்கள்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகைக்கு நிபந்தனைகள் எதுவுமில்லை

### ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு

(ஜெனிவா)

இலங்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ வரிச் சலுகையை மீள வழங்குவதற்கு 58 நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ஐரோப்பிய ஒன்றியம் நிராகரித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்பட்ட 27 சர்வதேச சாசனங்களும் அங்கீகரிக்கப்பட்டு, அமுல்படுத்துவதே ஜி.எஸ்.பி பிளஸ வரிச் சலுகையை வழங்குவதற்கான ஒரே ஒரு தேவையாக உள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்குங்கள்
## யாழ்.நல்லூரில் இளைஞர்கள் திரண்டு நேற்று பாரிய கவனயீர்ப்பு போராட்டம்



(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்கக் கோரி தமிழ்நாடு எங்கும் பாரியளவிலான போராட்டங்கள் நடத்தப்பட்டு கொண்டிருக்கும் நிலையில், அப்போராட்ட

23ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர் கபீர் ஹாசீமுக்கு எதிராக நேற்று முறைப்பாடு



(கொழும்பு)

அரச நிறுவனங்கள் அமைச்சர் கபீர் ஹாசீமுக்கு எதிராக கூட்டு எதிரக்கட்சி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் ஒன்றின் ஊடாக 150 பில்லியன் நஷ்டத்தை

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### இலங்கை அரசுடனான உடன்படிக்கையில்

# ரூபா 1878 கோடி கடன் வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் விவசாயத்துறையை நவீனமயப்படுத்துவதற்கு 1878 கோடியே 25 இலட்ச ரூபாயை (125 மில்லியன் அமெரிக்க டொலர்) கடனாக வழங்குவதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான உடன்படிக்கையில் அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளதாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வணிக மற்றும் ஏற்றுமதி சார் காய்கறி மற்றும் பழ உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் விவசாய உற்பத்திகளின் வளர்ச்சியை தொடர்ச்சியாக பேணுவதற்கும் இந்த கடன் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி திறனை அதிகரிக்கவும், விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்துவதற்கும் விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புக்களின் கூட்டு முயற்சிகளை ஊக்குவிக்கவும் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த கடன் தொகையானது நாட்டின் விவசாய கொள்கையை அபிவிருத்தி செய்யவும் எதிர்காலத்தில் திட்டங்களை தீர்மானிக்கவும் உதவும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் விவசாயத்துறையை மேலும் செயற்றிறன்மிக்கதாக மாற்றியமைப்பதை இலக்காகக் கொண்டு அரசாங்கம் செயற்படுவதாகவும். நவீன சந்தை மற்றும் நுகர்வோரின் தேவை, காலநிலை மற்றும் சூழலின் தன்மைக்குகேற்ற வகையில் உற்பத்திகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான இயக்குநர் மற்றும் இலங்கை நிதியமைச்சின் செயலாளர் இந்த கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# உடல் உறுப்பு தானம் அமைச்சரவை அனுமதி

வாகன விபத்துக்கள் காரணமாக மூளை சாவு அடைதல் மற்றும் இரத்த ஓட்ட கட்டமைப்பு செயலிழப்பதன் காரணமாக மரணமடையும் சாரதிகளின் உடல் உறுப்புகளை, தேவையான நோயாளிகளுக்கு பொருத்த அவற்றை தானம் செய்ய சாரதிகளின் விருப்பத்தை பெற்றுக் கொள்ள முடியும் வகையில் சாரதி அனுமதிப்பத்திரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

தமது உடல் உறுப்புக்களை தானம் செய்ய விரும்பும் சாரதிகள் தமது விருப்பத்தை தெரிவித்து கடிதம் ஒன்றை வழங்கி சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் சாரதிகளும் உடல் உறுப்புகளை தானம் செய்யும் வகையில் மாற்றங்களை செய்து கொள்ள முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## பொதுக்கூட்டம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்க சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 21.01.2017 சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(C-7292) செயலாளர்

### ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக

# கிளிநொச்சியில் இன்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் பெரும் எழுச்சி கொண்டுள்ள ஜல்லிக்கட்டு தடை நீக்கும் போராட்டத்துக்கு ஆதரவாக கிளிநொச்சியிலும் கவனயீர்ப்பு நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கல்வி கலாசார அமையம் தெரிவித்துள்ளது. இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இந்தக் கவனயீர்ப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

"ஏறுதழுவுதல் எம் உரிமை" என்ற தொனிப்பொருளில் கலாசார உரிமைக்காக காளையாய் வெகுண்டெழுந்திருக்கும் தாய்த் தமிழகத்துக்காக ஈழத் தமிழர்கள் நாம் குரல் கொடுப்போம் என்றும் கல்வி கலாசார அமையம் அழைப்பு விடுத்துள்ளது. (செ-4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் 11.01.2017 அன்று நடைபெற்ற 32ஆவது பட்டமளிப்பு விழாவில்

**மகேசு பங்கயன்**

M.A பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று உயர்வடைய வாழ்த்துவோர்:

**திரு.திருமதி ஆ. மகேசு குடும்பம்**
**திரு.திருமதி ஆ. இராஜநிதி குடும்பம்**
**திரு. ஆ. வடிவேலு குடும்பம்**

(C-7289)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி சிவகுரு செல்வராணி

யா/மல்லாகம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் திருமதி கி. வரதராஜன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி சிவகுரு செல்வராணி அவர்கள் 17.01.2017 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

(7556) பாடசாலைச் சமூகம், யா/மல்லாகம் ம.வி.

ශ්‍රී ලංකා පුස්තකාල සංගමය
ஸ்ரீ லங்கா நூலகச் சங்கம்
SRI LANKA LIBRARY ASSOCIATION

### நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 - 2017

### Walk-in Interview

நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1ற்கு இதுவரை விண்ணப்பிக்காத, கீழே குறிப்பிட்டுள்ள அடிப்படை தகமையுள்ளவர்கள் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் 21.01.2017 (சனிக்கிழமை) காலை 9.30 மணி - மாலை 3.30 மணி வரை நடைபெறவுள்ள நேர்முகத்தேர்வில் பங்குபற்றலாம்.

**தகமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்

அல்லது

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன்,
- க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் கற்கைநெறியை மேற்கொள்ள விரும்பும் மொழியில் திறமைச் சித்தியுடன் கணிதம் / எண்கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

- க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் கற்கைநெறியை மேற்கொள்ள விரும்பும் மொழியில் திறமைச் சித்தியுடன் கணிதம் / எண்கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன்,
- அங்கீகரிக்கப்பட்ட நூலகமொன்றில் மூன்று வருடங்களுக்கு குறையாமல் நிரந்தர ஊழியராக சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

மொழி மூலம் : தமிழ் (யாழ்ப்பாண நிலையத்தில்)
**கற்கைநெறிக் கட்டணம்** : ரூபா 16.000.00
**விண்ணப்பப்படிவக் கட்டணம்** : ரூபா 200.00
விரிவுரைகளுடன் கூடிய வகுப்புக்கள் வாரஇறுதி நாட்களில் நடைபெறும்.

குறிப்பு:
மேற்படி நேர்முகத்தேர்வுக்கு பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதி மற்றும் போட்டோபிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

- தேசிய அடையாளஅட்டை
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
- விவாகப்பதிவு அத்தாட்சிப் பத்திரம் (திருமணமான பெண்களுக்கு)
- கல்வித்தகமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
- சேவைக்காலச் சான்றிதழ் (பணிபுரிவோருக்கானது)

கலாநிதி (திருமதி) க.சந்திரசேகா
ஒருங்கிணைப்பாளர்/யாழ் நிலையம்
இலங்கை நூலகச் சங்கம்

(7555)



## யாழ் மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)

Reg. No : 8232
TP : 021 320 5722
40, முனிஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. **இ. விஜயராசா** அவர்கள் தலைமையில் 18.12.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்று, 2017ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களின் பெயர் பட்டியல் வருமாறு

| | பெயர் | பொறுப்பு |
|---|---|---|
| 01 | திரு. இ. விஜயராசா அவர்கள் | தலைவர் |
| 02 | திரு. பா. றஞ்சித்குமார் அவர்கள் | உப - தலைவர் |
| 03 | திரு. சி. கிரிதரன் அவர்கள் | செயலாளர் |
| 04 | திரு. மா. சிவசுப்பிரமணியம் அவர்கள் | உப செயலாளர் |
| 05 | திரு. சி. நாகேஸ்வரன் அவர்கள் | பொருளாளர் |
| 06 | திரு. த. சுகந்தன் அவர்கள் | நிர்வாக உறுப்பினர் |
| 07 | திரு. பா. மயூரன் அவர்கள் | நிர்வாக உறுப்பினர் |
| 08 | திரு. தே. நிக்கொல்ஸ் யோன்சன் | நிர்வாக உறுப்பினர் |
| 09 | திரு. தி. பிரதீபன் அவர்கள் | நிர்வாக உறுப்பினர் |
| 10 | திரு. செ. யோகநாதன் | போசகர் |

**ஓட்டோ உரிமையாளர்களே!**

01 தங்கள் ஓட்டோவை சங்கத்தில் பதிவு செய்த பின்பே தரிப்பிட சேவையை மேற்கொள்ளவும்.
02 சங்க அங்கத்துவ அட்டையை கைவசம் வைத்திருக்கவும்.
03 தங்கள் தரிப்பிடத்தையும் தங்களையும் தூய்மையாக வைத்திருக்கவும்.
04 மது அருந்திய நிலையில் தரிப்பிடத்துக்கு சமுகம் தரலாகாது.
05 சேவையின் போது மது அருந்திய நிலை, வெற்றிலை சப்புதல், புகைத்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.
06 தரிப்பிடத்திலோ, சேவையின் போதோ கட்டைக் காற்சட்டை போன்ற அநாகரீக உடையணிதல் தவிர்க்க வேண்டும்
07 பயணிகளின் பயணத்துக்கு மானசீகமாக உதவுதல், அவர்களின் பொதிகளுக்கும் பாதுகாப்பாக இருத்தல் வேண்டும்.
08 வாடகை கட்டண அறவீட்டில் கண்ணியமாக செயற்பட்டு, பயணிகள், பொது மக்களின் ஆதரவைப் பெற முடியும்.
09 தங்களது மாதாந்த அங்கத்துவ சந்தாவை மூன்று மாதங்களுக்கு மேல் நிலுவை ஏற்படாத வகையில் செலுத்த வேண்டும்.
10 தாங்கள் 6 மாதங்களுக்கு மேலாக தொடர்பின்றி சந்தா நிலுவை அதிகரிப்பின் ஒரு முன் அறிவித்தலுக்கு பின் தங்கள் தரிப்பிட பதிவு தற்காலிகமாக ரத்துச் செய்யப்படும்.
11 சங்க நிர்வாக அனுமதியுடன் தரிப்பிடத்தில் தங்களை வழிநடாத்தும் தரிப்பிடப் பொறுப்பாளர்களின் ஒழுங்கமைப்பு செயற்பாட்டுக்கு உதவ வேண்டும்.
12 அவர்களின் செயற்பாட்டுக்கு இடையூறு செய்தல், விமர்சித்தல் ஆகாது. (C-7287)

கிளைசங்கங்களுக்கு:- தங்கள் பகுதியிலும் முன் காட்டப்பட்ட நடைமுறைகளைக் கடைப்பிடித்து செயற்படவும்.
நிர்வாகம்

நன்றி

# 21 வயதுக்குக் குறைந்த விண்ணப்பதாரர் பதியவும்

### யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

பாடசாலை விண்ணப்பதாரராகத் தோற்றாது முதற் தடவையாக வெளிவாரிப் பரீட்சார்த்தியாக க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு 2017 ஆம் ஆண்டில் தோற்ற எதிர்பார்க்கும் அல்லது இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றி, தோற்றிய பாடத்துறை அல்லது குறைந்த பட்சம் ஒரு பாடத்தையேனும் மாற்றி மீண்டும் வெளிவாரி விண்ணப்பதாரியாக பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் 2017 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியன்று 21 வயதைவிடக் குறைந்த விண்ணப்பதாரிகள் தமது முகவரிக்குரிய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் 2017 ஆம் ஆண்டுபெப்ரவரிமாதம்28ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் மேற்படி நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வெளிவாரி விண்ணப்பதாரிகள் வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பகுதியில் மாகாணக் கல்வித்திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்க முடியும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மார்ச் மாதத்தில் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்படும் போது மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்தமைக்கான உரிய தகவல்களை அதில் உள்ளடக்கி உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி முறையான விண்ணப்பப் படிவமொன்றினை பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்எனவும் அறிவித்துள்ளார். (இ



கேலிச்சித்திரம்

# மத நல்லிணக்க கோபுரம்




யாழ்.சுழிபுரம் பறாளாய் பகுதியில் அமைந்துள்ள ஈஸ்வர விநாயகர் தேவஸ்தானத்துக்கு அருகில் மத நல்லிணக்க கோபுரம் ஒன்று அமைககப்பட்டுள்ளது.

குறித்த கோபுரத்தை 5 இலட்சம் ரூபாய் சொந்த நிதி ஒதுக்கீட்டில் அமைத்த சோழியூரான் பிறைசூடி குரு இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

எமது மாவட்டத்தில் மதங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இந்து சமயம், பௌத்த சமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாம் சமயம் ஆகிய நான்கு மதங்களையும் பிரதிபலித்து காட்டுகின்ற வகையில் அந்தந்த மதங்களில் சின்னங்களை உள்ளடக்கி இக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

கோபுரத்தின் அடிப்பகுதியில் சுவாமி விவேகானந்தருடைய சிலை அமைக்கப்பட்டுளளது. இதன் மூலம் அனைத்து மதத்தினரிடையே இன ரீதியான ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்ற நோக்குடன் இக்கோபுரம் அமைக்கப் பட்டுள்ளது.

அத்துடன் இக் கோபுரத்துக்கு அண்மையில் வட கதிர்காம ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. கதிர்காமத்துக்கு சென்று தமது வேண்டுதல்களை நிறைவேற்ற முடியாதவர்கள் இங்கு வந்து தமது வேண்டுதல்களை நிறைவேற்றமுடியும் என்ற நோக்குடன் இது அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அடுத்த முறை யாழ்.வருகையின் போது இப் புதிய கோபுரம் மற்றும் ஆலயம் என்பன திறந்து வைக்கபபடும்எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஜி.எஸ்.பி.தொடர்பில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் முற்றிலும் பொய்யானவை

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு



பாராளுமன்றத்திலோ, அமைச்சரவையிலோ, எந்த வித ஒழிவு மறைவுகள் இல்லாத அரசாங்கம் ஒன்றாகவே நல்லாட்சி காணப்படுவதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார.

நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, ரத்ன தேரர் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த ராஜித,

ரத்ன தேரர் குறிப்பிடுவது போல வாக்குறுதிகளை நிறைவேற்றாத நிலையில் அரசாங்கம் இல்லை.அத் தோடு அம்பாந்தோட்டை துறைமுகத்தினால் நாட்டின் வரி அதிகரிப்பதை குறைக்க கூடிய நிலையே காணப்படும்.

இது போன்ற எதிர்ப்புக்கள் நல்லாட்சிக்கு கண்டிப்பாக வேண்டும் எனவும் கூறியுள்ளார்.மேலும் மனித வுரிமைகள் தொடர்பில் அண்மையில் தான் யோசனையொன்று முன்வைக்கப்பட்டது இதனால் ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பில் தெரிவிககப்படும் கருத்துக்கள் பொய்யானதென அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை அதிர்ஷ்ட இலாபச்சீட்டின் விலை அதிகரிப்பது நன்மையான விடயமே. அதனால் பாரிய பிரச்சினைகள் எதுவும் தோன்ற போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-3)

## தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் குறிவைக்கப்படும் முதல் நபர் மகிந்தவே

தகவல் அறியும் உரிமைச் சட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமென அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில், குறித்த சட்டம் நடைமுறைக்கு வந்தபின்முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே முதலாவதாக சிக்குவாரென அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுனாமி நிவாரணத்திற்காக சர்வதேச நாடுகளால் அப்போதைய மகிந்த அரசுக்கு 12,100 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது. அதில் 6,853 கோடி ரூபாவையே மகிந்த அரசு செலவுசெய்துள்ளது. மிகுதி தொகைக்கு என்ன நடந்ததென தெரியாத நிலையில், தகவல் அறியும் உரிமைச்' சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் இத்தொகை குறித்து ஆராய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக கொடுப்பதற்காக மகிந்தவின் நேரடி கண்காணிப்பில் உருவாக்கப்பட்ட ராடா நிறுவனத்தில் பாரிய ஊழல் மோசடி இடம் பெற்றதாக ஏற்கனவே குற்றஞ் சாட்டப்பட்டு அது தொடர்பிலான வழக்கு விசாரணையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-3)

# ரத்ன தேரரின் நடத்தையை வைத்தே சுயாதீனம் தொடர்பில் தீர்மானிப்போம்

### ஜே.வி.பி.தலைவர் அறிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரின் செயற்பாட்டை வைத்தே அவருடைய சுயாதீனத் தன்மை குறித்த தீர்மானத்துக்கு வர முடியும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை வைத்திய சபைக்கு மக்கள் விடுதலை முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் நேற்று முன்தினம் விஜயம் செய்திருந்தனர். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், அத்துரலிய ரத்ன தேரரின் தீர்மானம் அரசியலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என தாங்கள் கருதுகிறீர்கள் என அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கே இவ்வாறு பதிலளித்தார்.

அத்துரலிய ரத்ன தேரர் சுயாதீனமாக செயற் படுவதாக அறிவித்துள்ளார். அவர் பாராளுமன்றத்தில் எங்கு அமரப் போகிறார் எனவும், அவரது நிலைப்பாடுகள் எவ்வாறு அமையப் போகின்றன எனவும், ஜனாதிபதி செயலகத்தில் அவர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளில் அவர் விலகுவாரா என்பது குறித்தும் நாம் அவதானமாக இருக்கின்றோம்.

இவை தொடர்பில் தேரரின் நடவடிக்கைகளைவைத்தே இவருடைய சுயாதீனம் தொடர்பில் தீர்மானிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கிடையில் மோதல்

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு இடையில் நேற்று பிற்பகல் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மாணவர்களுக்கு இடையில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மோதல் சம்பவத்தில் காயமடைந்த ஒரு மாணவன் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பகிடிவதை பிரச்சினை காரணமாகவே மாணவர் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பகிடிவதைக்கு எதிர்ப்பை வெளியிட்ட இரண்டாம் ஆண்டு மாணவர் ஒருவரை கலைப் பிரிவின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் தாக்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


இதேவேளை சம்பவத்தில் காயமடைந்த மாணவர் நீதவான் ஒருவரின் மகன் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களை கைது செய்ய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பேராதனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கமல் ஆரியவன்ச தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (இ-3)

## 10 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கைப்பற்று

### சந்தேக நபர்கள் விளக்கமறியலில்



நெடுங்கேணி வனவள திணைக்களத்தினால் 10 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சேமமடு காட்டுப்பகுதிகளுக்கூடாக கனரக வாகனத்தில் யாழ். மாவட்டத்திற்கு கொண்டு செல்ல முற்பட்ட வேளையில் கடந்த 27 ஆம் திகதி நெடுங்கேணி வனவள திணைக்களத்தின் முற்றுகையில் வாகனமும் மரக்குற்றியும் சந்தேக நபர்களும் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (2-15)

# வேற்றுக்கிரகவாசி விராட் புகழ்ந்து தள்ளிய வோகன்





இந்தியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 350 ஓட்டங்கள் குவித்தும் தோல்வியை தழுவியது.

இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி, கேதர் ஜாதவ் ஆகியோரின் அதிரடியான சதமே இங்கிலாந்தின் தோல்விக்கு காரணமாக அமைந்தது.

இந்த நிலையில் இங்கிலாந்து முன்னாள் தலைவர் மைக்கேல் வோகன் தனது டுவிட்டர் பக்கத்தில் விராட் ஹோலி ஆட்டத்தை வெகுவாக பாராட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது.

டெஸ்ட், ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் ஆட்டம் ஆகிய கிரிக்கெட்டின் 3 நிலைகளிலும் விராட் ஹோலியே சிறந்த துடுப்பாட்ட வீரராக திகழ்ந்துள்ளார். அவர் வேறொரு கிரகத்தில் இருந்து வந்தவர். அவரது துடுப்பாட்டம் அனைவரையும் மெய் சிலிரிக்க வைக்கிறது.இவ்வாறு அவர் கூறினார். மற்றொரு இங்கிலாந்து முன்னாள் தலைவர், டெலிவிசன் வர்ணனையாளருமான நாசிர் உசேன் பிரபல கால்பந்து வீரர் கிறிஸ்டியானா ரொனால்டோவுடன் ஒப்பிட்டு உள்ளார்.

கிரிக்கெட்டின் 3 நிலைகளிலும் தலைவராக இருந்து விராட் ஹோலி துடுப்பாட்டத்தில் மிகவும் சிறப்பாக செயற்படுகிறார்.

63 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டை இழந்த அணி 351 ஓட்ட இலக்கை எடுப்பது என்பது சாதாரணமானது இல்லை. கால்பந்தில் எப்படி ரொனால்டோ ஜாம்பவானாக தற்போது இருக்கிறாரோ அதுபோல கிரிக்கெட்டில் விராட் ஹோலி உள்ளாரென அவர் தெரிவித்துள்ளார். (5)

# டெஸ்ட் போட்டியிலிருந்து விலகவில்லை அதிரடி மன்னன் டி வில்லியர்ஸ் தெரிவிப்பு

தென்னாபிரிக்க அணியின் அதிரடி வீரரான டிவில்லியர்ஸ் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவில்லை என்று அறிவித்துள்ளார்.

டிவில்லியர்ஸ் காயம் காரணமாக கடந்த ஜூன் மாதத்திற்குப் பிறகு சர்வதேச போட்டிகளில் விளையாடவில்லை.

இந்த நிலையில் அவர் விரைவில் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக பரபரப்பாக பேசப்பட்டது.




இந்நிலையில் டெஸ்ட் போட்டிக்கு திரும்புவது பற்றி அவர் கூறுகையில், டெஸ்ட் போட்டிகளுக்கு எப்போது திரும்புவது என்பது பற்றி இதுவரை முடிவு செய்யவில்லை.

இன்னும் உலகக்கிண்ணத்தை நாங்கள் வெல்லவில்லை. எனவே 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வெல்ல வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை 'இப்போதைக்கு 2019 உலகக்கிண்ணம் தான் முக்கியமாகத் தெரிகிறது. அதை வெல்வதை நாங்கள் உறுதி செய்யவேண்டும், நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து விலகியுள்ளேன்.

ஆனால் ஒருநாள் போட்டிகளில் விளையாடுவேன். ஆனால் நிச்சயமாக டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவில்லை என்று கூறியுள்ளார்.

# வீரவிளையாட்டு ஜல்லிக்கட்டு வேண்டும் வீரேந்திர சேவாக் தெரிவிப்பு



ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து தொடர் போராட்டத்தில் தமிழக மக்கள் ஈடுபட்டுள்ளது இந்தியாவை மட்டுமல்ல உலக நாடுகளையும் திரும்பி பார்க்க வைத்துள்ளது.

இந்தப் போராட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் கிரிக்கெட் வீரர் வீரேந்திர ஷேவாக், அமைதியான முறையில் நடக்கும் இந்த போராட்டத்தை கண்டு தனடு டுவிட்டர் பக்கத்தில் பாராட்டியுள்ளார்.

தமிழர்களின் அமைதியான போராட்டத்தை பார்ப்பதற்கு மிகவும் அற்புதமாக இருக்கிறது.

இதே வழியில் நீங்கள் போராட்டத்தை தொடருங்கள். தமிழர்கள் நடத்தும் இந்த போராட்டம் அனைவருக்கும் ஒரு பாடமாக இருக்கும் என கூறியுள்ளார்.

# நான் சாதனைக்காக விளையாடுபவனில்லை நாட்டின் வெற்றிக்காகவே விளையாடினேன்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்கார, ரசிகர்களிடம் பல விடயங்களை பற்றி மனம் திறந்து பேசியுள்ளார்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய ரசிகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு சங்கக்கார வெளிப்படையாக பதிலளித்துள்ளார்.

அந்த ரசிகர், நீங்கள் பல டெஸ்ட் அணிகளுக்கு எதிராக சிறப்பாக விளையாடி வெற்றி தேடித் தந்துள்ளீர்கள், உலகக்கிண்ணம் வென்ற அணியிலும் இடம் பிடித்துள்ளீர்கள், உங்களது கிரிக்கெட் வாழ்க்கை சிறப்பாகவே இருந்தது.



ஆனால் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக வெற்றி பெற்ற இலங்கை அணியில் இருந்ததே இல்லையே, ஏன்? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சங்கக்கார, ஆமாம், அது ஏமாற்றம் அளிக்கும் விடயமாகவே இருந்தது. 2004 ஆம் ஆண்டு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருந்த போது கூட ஷேன் வோர்னே, ஸ்டூவர்ட் மெக்கில் அந்த வாய்ப்பை தட்டி பறித்து விட்டார்கள் என்று தெரிவித்தார்.

மேலும், ஓய்வு பெற்றது குறித்து பேசிய சங்கக்கார, எப்போதும் ரசிகர்கள் என்னிடம் ஏன் நீங்கள் ஒரு 2 ஆண்டு கூடுதலாக விளையாடவில்லை, 15,000 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி நகரவில்லை' என்று பல கேள்விகளை கேட்பார்கள்.

ஆனால் நான் ஓய்வு பெற வேண்டும் என்று மட்டுமே முடிவெடுத்தேன். எனது முன்னால் இருக்கும் எந்தவொரு விடயத்தையும் நான் பார்க்கவில்லை.

நான் எனது தனிப்பட்ட சாதனைகளுக்காக விளையாடி இருந்தால் அந்த கேள்விகளுக்கு எல்லாம் கண்டிப்பாக பதிலளிக்க முடியும். ஆனால் நான் அணியின் வெற்றிகளுக்காகவே விளையாடினேன் என்றார்.

மேலும், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பெற முடியாத வெற்றிகளுக்காக கவலை தெரிவித்த சங்கக்கார, அணிக்காக சிறப்பான பங்களிப்பு அளித்த பிறகு ஓய்வு பெற்றதில் மகிழ்ச்சியடைவதாக தெரிவித்தார்.

# விட்டால்தானே அடிப்பார் விராட் பீதியைக் கிளப்பிய ஜேக்பால்

இந்திய அணித்தலைவர் விராட் ஹோலியை இரண்டாவது ஒருநாள் போட்டியில் செட்டிலாக விடமாட்டேன் என இங்கிலாந்து வீரர் ஜேக்பால் தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, 3 ஒருநாள், 3 இருபது-20 போட்டிகள் என குறுகிய தொடரில் பங்கேற்கிறது. முதல் ஒருநாள் போட்டி புனேவில் நடந்தது.

இதில் இங்கிலாந்து அணி, 350 ஓட்டங்கள் குவித்த போதும் இளம் தலைவர் ஹோலியுடன், கேதர் ஜாதவ் கைகோர்த்து இங்கிலாந்து பந்துவீச்சாளர்களை சுளுக்கெடுக்க, இந்திய அணி அசத்தல் வெற்றி பெற்றது.

இதையடுத்து இரு அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி, நாளை, கட்டாக்கில்



நடக்கவுள்ளது. இம்மைதானத்துக்கு ஒரு தனி வரலாறே உள்ளது.

குறிப்பாக கடந்த 2015இல் இந்தியா சென்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபது-20 தொடரின் இரண்டாவது போட்டியில் இந்திய அணி, 92 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. இதனால் கடுப்பான ரசிகர்கள் மைதானத்துக்குள் தண்ணீர் போத்தலை வீசினர். இதனால் போட்டி தாமதமானது.

இதுபோல இம்முறை நடக்க கூடாது என மைதானத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேக்பால் இந்திய அணித்தலைவர் விராட் ஹோலக்கு சவால் விட்டுள்ளார்.

இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி மிகச்சிறந்த வீரர் தான். ஆனால் இம்முறை அவருக்கு சரியான திட்டம் தீட்டியுள்ளோம். அதிலிருந்து அவர் தப்புவது கடினம் தான். தவிர, போட்டி பகலிரவாக நடப்பதால், அதுவும் ஒரு சாதகம் தான் என்று ஜேக்பால் கூறியுள்ளார்.

# ஆஸி அணியை அடக்கிய இலங்கை வீரர் பெரேரா

அவுஸ்திரேலியாவில் இடம் பெறும் பிக் பேஸ் லீக் கிரிக்கெட் போட்டியில் எடிலைட் ஸ்ட்ரைகருக்கு எதிரான போட்டியில் மெல்பேர்ன் ரெனேகேட்ஸ் அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற எடிலைட் ஸ்ட்ரைகர் களத்தடுப்பாட தீர்மானித்தது.

முதலில் துடுப்பாடிய மெல்பேர்ன் ரெனேகேட்ஸ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பாடிய எடிலைட் ஸ்ட்ரைகர் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களையே பெற்றது.

இந்த போட்டியில் மெல்பேர்ன் ரெனேகேட்ஸ் அணி சார்பில் பந்து



வீசிய திசர பெரேரா 3 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுகளை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இவருடைய சிறந்த பந்துவீச்சானது எடிலைட் ஸ்ட்ரைகர் அணியின் ஓட்டங்களை 165க்கு மட்டுப்படுத்த பெரிதும் உதவியது.

## அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு 120 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

அம்பாறை இறக்காமம் பிரதேசத்தில் 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு 120 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹம்மட் நஷீர் தெரிவித்துள்ளார்.

இறக்காமம்பிரதேச அபி விருத்தி திட்டங்கள் தொட ர்பிலான கலந்துரையாடல். நகரதிட்டமிடல்மற்றும்நீர்வழங்கல்அமைச்சர் ரவூப் ஹகீம் தலைமையில் நேற்று இடம்பெற்ற போது இத்தீர் மானம் எடுக்கப்பட்டதாக அவர்தெரிவித்தார்.

மேலும் குறித்த பிரதேசத்தில் "காப்பெற் வீதி" அமைப்பதற்காக 50 மில்லியனும் மைதானத்தையும் அதனை அண்டிய குளத்தையும் அழகு படுத்த 20 மில்லியனும் ஒதுக்கீடு செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## விசேட நிபுணர் ஒருவருக்கு இலங்கை வந்து ஆலோசனை வழங்குமாறு பிரதமர் அழைப்பு



இலங்கையின் பொருளாதார திட்டமிடல் தொடர்பாக கண்காணித்து விசேட நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கு இலங்கை வருமாறு வெளிநாட்டு பேராசிரியர் ஒருவருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அழைப்பு விடுத்துள்ளார்.

கொலம்பிய பல்கலைக்கழகத்தின் சர்வதேச மற்றும் மக்கள் தொடர்பாடல் பிரிவின் பேராசிரியர் ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் இற்கே இந்த அழைப்பை பிரதமர் விடுத்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெறும் உலக பொருளாதார மாநாட்டில் வைத்து இந்த அழைப்பை பிரதமர் விடுத்துளளதாக பிரதமர் அலுவலகம தெரிவித்துள்ளது.

2030 ஆகும் போது இலங்க்கையை உயர்ந்த வருமானம் பெறும் நாடாக மாற்றுவது அரசாங்கத்தின் இலக்கு எனவும் பிரதமர் அவரிடம் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (இ-3)

## எல்லை நிர்ணய ஆணைக்குழு அறிக்கை இம்மாத இறுதிக்குள் வர்த்தமானியில்

எல்லை நிர்ணய ஆணைக்குழு கையளித்துள்ள எல்லை நிர்ணய அறிக்கை, இம்மாத இறுதிக்குள் வர்த்தமானியில் வெளியிடப்படும். அது தொடர்பிலான முழுப் பொறுப்பும் எமது அமைச்சுக்கே உள்ளது என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார். எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கை. உள்ளூராட்சி மறறும் மாகாண சபை அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.அமைச்சின் அலுவலகத்தில் வைத்து அறிக்கையை ஆணைக்குழுவின் தலைவர் அசோக பீரிஸ். உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

அறிக்கையை ஏற்றுக்கொண்டு கருத்து தெரிவித்த அமைச்சர். எல்லை நிர்ணய ஆணைக்குழுவில் உள்ள 5 உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ள நிலையில் அறிகைகயைப் பெற்றுக்கொண்டேன். 3 பேரின் கையெழுத்துடன் இம்மாத ஆரம்பத்தில் என்னிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு அன்று நான் அதனை ஏற்றுக்கொண்டிருந்தால் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டவனாகியிருப்பேன். அறிக்கை கிடைத்ததும் அடுத்த நாள் வர்த்தமானி வெளியிடப்படும் என்று கூறியிருந்தேன். எனினும். அறிக்கையில் உள்ள தட்டச்சுப் பிழைகள் உள்ளிட்டவற்றை சரி செய்ய கால அவகாசம் தேவை. அறிக்கை கிடைதது விட்டால் எமது அமைச்சின் அதிகாரிகளை இணைத்து இரவு பகல் பாராது அறிக்கையை சரி பார்த்து இந்த மாத இறுதிக்குள் வர்த்தமானி அறிக்கை வெளியிடப்படும்.

இந்த அறிக்கையை சகல கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. முன்னைய ஆட்சியில், உரிய முறையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படாமை காரண மாக. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த முடியவில்லை. எந்தக் கட்சிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். இதே வேளை. முதற்கட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில். ஏனைய பணிகள் இந்த மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படுவதுடன். ஜனவரி 31ஆம் திகதியுடன் ஆணைக்குழுவின் கடமை நிறைவுக்கு வரும் என்று ஆணைக்குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.

இந்த அறிக்கை 3 மொழிகளிலும் 3 பகுதிகளாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 45 புத்தகங்களில் இந்த அறிக்கை அச்சிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரண்டு 3 முறை இந்த அறிக்கையை சரிபார்த்துள்ளதால், அதனை மீள் சரி பாரக்க அமைச்சின் செயலாளருக்கு அதிக காலம் தேவைப்படாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(7539)



பிறப்பு 1938 09 14

இறப்பு 2016 01 19

அமரர் செல்லப்பா மகாதேவன்(காந்தி)

அன்பின் சொரூபமாக வாழ்ந்த
எங்கள் அன்பான தந்தையே
ஆன்மீகத்தின் ஞான ஒளியாக
வழி காட்டியாக இருந்த
சொரூபமே ஆண்டு ஒன்று
என்ன ஆயிரம் ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும்
உங்கள் அன்பை மறவாத
அன்பு மனைவி,
பிள்ளைகள் , மருமக்கள் ,
பேரப்பிள்ளைகள்.

நவாலி வடக்கு, வாய்க்காலடி, மானிப்பாய்.

உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்.

## இராசி பலன்

19.01.2017
(தை 06, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சப்தமி மாலை 5.31 மணிவரை
சித்திரை முழுவதும்
சுபநேரம் 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| கேது சுக் | கிரகநிலை சந்திராஷ்டமம் புரட்டாதி மாலை 6.08இற்கு துலா-சந் | | |
| சூரி | | | ராகு |
| புத | சனி | குரு | சந் |

**மீனம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கனவு பலிதமுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள் , போசன நன்மையுண்டு.

**மேடம்** தொழிலில் உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, உடல் நலன் சீராகும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், தனவரவு திருப்தி தரும், எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மிதுனம்** மற்றவர்கள் போற்றும் வகையில் காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், வாகன பழுதுச் செலவுகள் குறைவடையும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, பிரயாண பயமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** பெரியோர்களின் ஆசி கிடைக்கும், அடுத்தவர் நல்னில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மகரம்** தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தேகநலனில் தெளிவு பிறக்கும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப செய்தியொன்று சுற்றத்தார் மூலம் வந்து சேரலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**தனுசு** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தனவரவுகள் திருப்திகரமானதாக அமையலாம், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையலாம்.

**விருச்சிகம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், போசன சுகமுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**கன்னி** உடல் நலன் சீராகும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்பத்தில் சுமையும் பொறுப்புக்களும் கூடலாம், போசன சுகமுண்டு.



கரவெட்டி பிரதேச செயலகத்தில் நேற்று இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு யு.என்.டி.பி.யினால் வழங்கப்பட்ட உதவித்திட்டங்களை பார்வையிடுவதற்காக நோர்வே நாட்டு பல்கலைக்கழகத்தில் இருந்து வருகை தந்த விரிவுரையாளர்களையும் மாணவர்களையும் பிரதேச செயலகர் ச.சிவசிறி வரவேற்று இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான திட்டம் குறித்து விளக்கமளித்தார்.

(படங்கள்:-மகாலிங்கம்)

# மருத்துவ பீட மாணவர்களின் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்தது




படங்கள்:- பொ.சோபிகா

மாலபே சைற்றம் தனியார் மருத்துவக்கல்லூரியை தடை செய்யக்கோரி யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்றைய தினம்மூன்றாவது நாளாக தமது வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தினை தொடர்ந்து சமூகமட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

மாலபே பகுதியல் அமைந்துள்ள சைற்றம் (SAITM) தனியார் மருத்துவக்கல்லூரிக்கு எதிரான சில கோரிக்கைகளை அரசிடம் முன்வைத்து இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவர்கள் நாடு முழுவதும் வகுப்பு புறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றனர்

அந்த வகையில் கடந்த திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இப் போராட்டத்தில் குறித்த தனியார் மருத்துவக்கல்லூரியினால் நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் எவ்வாறான பாதிப்புக்கள் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள விளைவு என்னவென்றும் குறித்த விடயம் திட்டமிட்டு மக்கள் மத்தியில் மறைக்கப்பட்டு வருகின்றது என்பதையும் தெரிவித்து பாடசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பிரதேச செயலகம், சமூக அபிவிருத்தி திணைக்களங்கள், மக்கள் கூடும்பொது இடங்கள் போன்றவற்றிற்கு சென்று விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அரசால் உரிய தீர்வு வழங்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் அறிவித்துள்ளனர். (இ-9)

# குத்துவிளக்கு தீ பரவி கடை எரிந்து நாசம் !



(யாழ்ப்பாணம்)

சுவாமித்தட்டில் ஏற்றிவைக் கப்பட்டிருந்த குத்துவிளக்கு தீ பரவியதில் பலசரக்குக் கடை ஒன்று எரிந்து நாசமாகியுள்ளது. தீ பரவும் போது கடையில் ஆட்கள் இருந்தமையால் பாரிய அனர்த்தம் தடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள கடை ஒன்றில் இடம்பெற்றுள்ளது. நேற்று காலை குறித்த வியாபார நிலையத்தின் உரிமையாளர், தனது வியாபார நிலையத்தை திறந்துள்ளார்.

திறந்த பின்னர் வழமை போன்று ஏற்பாடுகளை செய்துவிட்டு வியாபார நிலையத்தில் சுவாமி தட்டில் குத்துவிளக்கை ஏற்றிவிட்டு, தனது வியாபார நடவடிக்கைகளை கவனித்துள்ளார்.

எதிர்பாராத விதமாக குத்துவிளக்கில் ஏற்றப்பட்ட தீ மேலே காணப்பட்ட சீற் பகுதியினூடாக பரவ ஆரம் பித்துள்ளது. இதனை உடனடியாக யாரும் கவனிக்காத காரணத்தினால், தீ மேலும் பரவியுள்ளது. இதன் போது வியாபார நிலையத்தில் பணிபுரிந்தவர்கள் தீ பரவுவதை கண்டு கூக்குரல் இட்டுள்ளனர்.

இதன் பின்னர் வியாபார நிலையத்தினர் மற்றும் அருகில் உள்ள வியாபார நிலையத்தினர் அனைவரும் சேர்ந்தது தீயை அணைக்க முயன்றனர். இதற்கிடையில் தீ பரவல் தொடர்பில் யாழ். மாநகர சபையின் தீயணைப்பு பிரிவிற்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு தீயணைப்பு வாகனத்துடன் வருகை தந்த தீயணைப்பு படையினர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இதன்பின்னர் வியாபார நிலையத்தினர் தீயால் சேதமடைந்தவற்றை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த யாழ்.பொலிஸார் தீ பரவலுக்கான காரணம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தனர். சுவாமித் தட்டில் ஏற்பட்ட தீ பரவலும், அந்த தீ மின்சார வடங்களை எரித்தமையாலுமே தீ அனர்த்தம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கின்றனர்.

குறித்த விபத்து சம்பவத்தில் 50 ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமாக இழப்பு ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-4)




## மெய்வல்லுநர் போட்டி

(க்ரணவாய்)

யாழ்.வல்வெட்டித்துறை இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெல்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி. புஷ்பலிங்கம் கலந்து கொள்வார். (இ-60)

# யாழ். மாற்றுத்திறனாளிகள் ஒன்றியம் அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் நலன்களுக்காக இயங்கி வரும் 19 நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி மேற்குறித்த மாற்று திறனாளிகள் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஒன்றியத்தின் தலைவராக கனகசபை விஸ்வலிங்கம், செயலாளாராக அருட்சகோதரி அன்ரன் அன்ரனிற்றா, உட்பட ஒன்றியத்தின் உறுப்பினர்களாக 19 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல மாற்றுத்திறனாளிகளின் நலன்களை கருத்தில் கொண்டு யாழ்.மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் நலன்களுக்காக இயங்கி வரும் நிறுவனங்கள் இனி வரும் காலங்களில் இந்த ஒன்றியத்தின் ஊடாக அவர்களின் ஆலோசனைகளை பெற்று இயங்குவார்கள் என்றும் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை உரிய முறையில் வெளிப்படுத்தவும் நிறைவேற்றவும் இந்த ஒன்றியம் செயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## நீண்ட இழுபறிக்குப் பின்னர்
# எல்லை நிர்ணய அறிக்கையை ஏற்றுக்கொண்டார் அமைச்சர்



உள்ளூராட்சி எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் நேற்று முன்தினம் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் கையளிக்கப்பட்டது.

அசோக பீரிஸ் தலைமையிலான இந்தக் குழுவின் ஐந்து உறுப்பினர்களும் அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். அறிக்கையை கையளிக்கும் நிகழ்விலும் அவர்கள் பங்கேற்றனர்.

இந்த அறிக்கையில் சில திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர், உள்ளூராட்சி வட்டாரங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வரும் ஜனவரி 31 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையில் அதன் உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்திடுவதில் இழுபறிகள் காணப்பட்டன. இதனைக் காரணம் காட்டி அமைச்சர் பைசர் முஸ்தபா இந்த அறிக்கையை கையேற்காமல் இழுத்தடித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லை நிர்ணயக்குழுவின் பரிந்துரைக்கு அமைய, வட்டார எல்லைகள் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட பின்னர், விரைவில் உள்ளூராட்சித்தேர்தல் நடத்தப்படும் எனறு எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# பெருந்தொகை கடல் கனிய வளங்களை கொள்ளையிட்டு சென்ற நபர் கைதானார்



பெருந்தொகை கடல் கனிய வளங்களை கொள்ளையிட்டு சென்ற நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று சட்டவிரோதமாக கொண்டு செல்லப்படும் பொருட் களின் மீதான பரிசோதனையின் போது குறித்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்களில் மாடுகளின் கொம்புகள், சிப்பிகள், சங்குகள் போன்றவை அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 19<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/கடை<br>தொ.இ: B/6772 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 79<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/3817 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 178cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/6776 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 28 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/3818 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc QS/கட்டார்<br>தொ.இ: B/6777 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 33 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/3827 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'8''<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/6778 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: G/3834 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதை அறியத்தருகின்றோம்.

உ
சிவமயம்



"WORLD SAIVA MISSION" - SRILANKA
"Excellent Service Mission For Humanity"

World Saiva Mission
Unity in diversity

உலக சைவத் திருச்சபை - இலங்கை
மாபெரும் சிவ மகாமந்திர மகாயாகம்

இலங்கை மணித் திருநாட்டில் சாந்தி, சமாதானம் நிரந்தரமாக அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டி உலக சைவத் திருச்சபை- இலங்கை மேற்கொள்ளும் மகாயாகம் பங்குபற்றுவோர்களுக்கு

1. சகல காரிய சித்தியும் கைகூடும்
2. வல்வினைகள் அகலும்
3.கொடிய நோய்களைத் நீக்கும்
4.வேண்டியவை கைகூடும்
5.ஆபத்துக்கள் அகலும்
6. ஊர் மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லது

சர்வ மங்களங்களையும் தரும் "சிவ" நாமத்தின் மகிமையை உணர்வோம்
சிவ மகாயாகம் செய்வோம் பெறுதற்கரிய பேறைப் பெறுவோம்.

சகல அன்பர்களையும் அழைக்கின்றோம். அனைவரும் வருகை தந்து இந்த மகாயாகத்தில் கலந்து கொள்ளவும்.

காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை நடைபெறும்.
மகேஸ்வர பூசை இடம்பெறும்.

| | | | |
| --- | --- | --- | --- |
| 21.01.2017- சனிக்கிழமை<br>பெரிய கடை மன்னார்<br>அருள்மிகு சிவபூமி ஞானவைரவர் திருக்கோயில் | 22.01.2017- ஞாயிற்றுக்கிழமை<br>வவுனியா அருள்மிகு திருநாகேஸ்வரம் சிவாலயம்<br>யூனிற் 01- பாவற்குளம், வவுனியா. | 29.01.2017- ஞாயிற்றுக்கிழமை<br>பூநகரி முழங்காவில் சின்னக்கதிர்காமம்<br>அருள்மிகு ஸ்ரீமுருகன்தேவஸ்தானம்<br>மன்னார் வீதி | 30.01.2017- திங்கட்கிழமை<br>அருள்மிகு ஞானலிங்கேஸ்வரர் திருக்கோயில்,<br>இணுவில், யாழ்ப்பாணம். |

அனுசரணை: உலக சைவத் திருச்சபை- கனடா பெரிய சிவன் ஆலயம்.

(வி-7285)

திருச்சபைநாயகர் உலக சைவத் திருச்சபை, இலங்கை. 077 583 5372

# ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி காணி இராணுவத்தினரால் அரச அதிபரிடம் கையளிப்பு



(மல்லாவி )

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் ஏ-9 வீதியில் அமைந்திருந்த ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடி அங்கிருந்து முழுமையாக அகற்றப்பட்ட நிலையில் அது அமைந்திருந்த காணியை இராணுவத்தினர் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமாரவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தனர்.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையில் வடக்கில் இருந்து தெற்கிற்கும், தெற்கில் இருந்து வடக்கிற்குமான, நுழைவாயிலாகவும் மக்களையும் பொருட்களையும் சோதனையிடும் பிரதான சோதனைச் சாவடியாகவும் சுமார் 23 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வந்த இந்த இராணுவ சோதனைச் சாவடியின் ஊடாக பயணித்த பலரும் பல்வேறு துன்பங்கள், துயரங்களில் சிக்கிய நிலையில் காணப்பட்டனர்.

இந்தச் சோதனைச்சாவடி அமைந்திருந்த 24 ஏக்கர் காணியின் உரிமையாளர்கள் 21 பேர் தமது காணிகளை தம்மிடம் கையளிக்குமாறு பலதரப்பட்டவர்களிடமும் கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் வவுனியா மாவட்ட செயலகத்தில் காணி உரிமையாளர்கள், ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடி இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடி அமைந்திருக்கும் பகுதியில் விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடிய நிலையில் இந்த காணியை விடுவதாயின் ஏ- 9 வீதியில் உள்ள அரச காணியில் 6 ஏக்கர் காணியை தமக்கு வழங்குமாறு இராணுவ தரப்பால் கோரப்பட்டிருந்தது.

இதன்போது வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஏ-9 வீதியில் 6 ஏக்கர் அரச காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில், கடந்த சில நாட்களாக சோதனைச் சாவடியில் அமைந்திருந்த கட்டடங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை அகற்றி வந்த நிலையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 22 ஏக்கர் காணியை இராணுவம் கையளித்துள்ளது.

இன்னமும் இராணுவத்தினர் மிகுதி 2 ஏக்கர் காணியையும் தம்வசம் வைத்துள்ளார்கள்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததை அடுத்து குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் இராணுவம் அப்பகுதியில் நிலை கொண்டிருந்தது.

இக் காணி கையளிப்பு நிகழ்வில் இராணுவ பொறுப்பதிகாரிகள், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, ஓமந்தைப் பகுதி கிராம அலுவலர், காணி உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

சி.ஐ.டியினர் என தம்மை அறிமுகப்படுத்தி

# வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாதோர் சல்லடைபோட்டு நகைகளை திருடினர் செட்டிகுளம் பகுதியில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு சி.ஐ.டி என தம்மை தெரியப்படுத்தி சென்ற இருவர் வீட்டை சோதனை செய்வதாகக் கூறி 5 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளை திருடிச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் செட்டிகுளம், முகத்தான்குளம், பாம்-2 பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வீடு ஒன்றுக்குச் சென்ற இருவர் தாம் சி.ஐ.டி எனவும் உங்களது வீட்டில் கசிப்பு மற்றும் டைனமேற் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. வீட்டைச் சோதனை செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

அப்போது அவர்கள் கைத்துப்பாக்கி வைத்திருந்ததாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வீட்டு உரிமையாளர்கள் சோதனையிட அனுமதித்த போது வீட்டில் இருந்த 5 இலட்சத்து 20 ஆயிரம் பெறுமதியான சங்கிலி, காப்பு, மோதிரம் உள்ளிட்ட நகைகளை திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பான விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.(2-250)

# நூல்நிலையத்தில் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கமராக்கள் திருட்டு

(வவுனியா)

வவுனியா நகரசபைக்கு சொந்தமான நூல் நிலையத்தில் வெளிப்புறத்தில் பூட்டப்பட்டுள்ள இரகசியக் கண்காணிப்பு கமராக்கள் நான்கு திருட்டுப் போயுள்ளன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நகர சபை பொது நூலகத்தின் முன் பகுதியின் வெளிப்புறத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராக்கள் நான்கு திருட்டுப் போன நிலையில் இது குறித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)




# வவுனியா மத்திய பேருந்து நிலையத்திலிருந்து சேவைகள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது

வவுனியாவில் திறந்து வைக்கப்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் வெளி மாவட்டங்களுக்கான இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்து சேவைகள் ஆரம்பித்து வைகப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே குறித்த சேவைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த கலந்துரையாடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலவரம் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், புதிய பேருந்து நிலையத்தில் வெளி மாவட்டங்களுக்கான போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபட முடிவு எடுக்கப்பட்டது.

அமுல்படுத்தப்பட்ட திட்டத்திற்கு அமைவாக நேற்று காலை முதல் தனியார் மற்றும் இ.போ.ச. பேருந்துகள் இணைந்த நேர அட்டவணையில் ஒரு வாரத்திற்கு சேவை மேற்கொள்வதற்கும் இணங்கியுள்ளன.

இருப்பினும், நேற்று முன்தினம் அரசாங்க அதிபருடன் கலந்துரையாடலுக்குச் சென்ற வவுனியா வர்த்தகர் சங்க உறுப்பினர்களை கலநதுரையாட அனுமதிக்காமல் தனியார பேருந்து சங்க உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.பழைய பேருந்து நிலையத்தில் இ.போ.ச.மற்றும் தனியார் பேருந்துகள் உள்ளூர் சேவைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# பால் சேகரிக்கும் கொள்கலன்கள் 76 பண்ணையாளர்களுக்கு வழங்கல்

(மல்லாவி)

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரத்தையொட்டி கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 76 பண்ணையாளர்களுக்கு பால சேகரிக்கும் கொள்கலன்கள், இரண்டு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆட்டோக்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் நிதியொதுக்கீட்டில் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்திற்கு கிடைக்கப்பெற்ற 41 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மேற்படி கால்நடை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 76 பயனாளிகளுக்கு பால் சேகரிக்கும் கொள்கலன்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் தெரிவு செய்யப்பட்ட பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய இரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்களுக்கு தலா ஒரு ஆட்டோ வீதம் இரண்டு ஆட்டோக்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி ஆட்டோ மற்றும் 76 பண்ணையாளர்களுக்கான பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி பரமோதயன், கால்நடை சுகாதார திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் வசிகரன், கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.கௌரிதிலகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இதேவேளை கிளாலி வித்தியாலயத்திற்கு கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கணனி மற்றும் ஆய்வுகூட உதவிப்பொருட்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன. (2-15)

# ஆட்டோ-கப் வாகனம் விபத்து; 5 சிறுவர்கள் வைத்தியசாலையில்



(மல்லாவி)

கிளிநொச்சி ஏ-9 வீதி 156 ஆம் கட்டை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் 5 சிறுவர்கள் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாலைநேர வகுப்பிற்கு சிறுவர்களை ஏற்றிச் சென்ற ஆட்டோவும் வீதியில் பயணித்த கப் வாகனமும மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த சிறுவர்களில் இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# கிளிநொச்சி மாவட்டத்தில் பொருத்து வீடுகளை பெற்றுக்கொள்ள 5,000 பேர் விண்ணப்பிப்பு

## விண்ணப்ப முடிவுத் திகதி 20 ஆம் திகதி -அரசாங்க அதிபர் அறிவிப்பு

(மல்லாவி)

**மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்படவுள்ள பொருத்து வீட்டுத் திட்டத்தின் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்தில் பொருத்து வீடுகளை பெற்றுக் கொள்வதற்கு 5 ஆயிரத்து 3 பேர் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தமது விருப்பங்களைத் தெரிவித்து விண்ணப்பித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடப் பெயர்வின் பின்னரான மக்கள் மீள் குடியேற்றத்தின் போது குடியமர்ந்துள்ள குடும்பங்களில் இன்னமும் 16 ஆயிரத்து 119 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டத்தின் ஊடாக புதிய வீடுகள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இந் நிலையில் மீள் குடியேற்ற அமைச்சின் பொருத்து வீட்டுத்திட்டத்தில் பயனாளிகளை இணைந்து கொள்வதற்கு எமது மாவட்டத்திற்கு 11 ஆயிரம் வீண்ணப்பப்படிவங்களை மீள் குடியேற்ற அமைச்சு வழங்கியுள்ளது.

இதனை நாம் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 16 கிராம அலுவலர்கள் பிரிவுகளின் கிராம அலுவலர்கள் ஊடாக 2 ஆயிரத்து 300 விண்ணப்பங்களை பயனாளிகளுக்கு வழங்கிய நிலையில், பயனாளிகளிடம் இருந்து ஆயிரத்து 294, பூரணப்படுத்திய படிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேபோன்று பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 19 கிராம அலுவலகா் பிரிவுகளின் கிராம அலுவலர்கள் ஊடாக ஆயிரத்து 340 விண்ணப்பங்களை பயனாளிகளுக்கு வழங்கிய நிலையில் மீளவும் பயனாளிகளிடம் இருந்து 957 பூரணப்படுத்திய படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 18 கிராம அலுவலகப் பிரிவுகளின் கிராம அலுவலர்கள் ஊடாக 520 விண்ணப்பங்களை பயனாளிகளுக்கு வழங்கிய நிலையில் மீளவும் 420 பூரணப்படுத்திய படிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை கரைச்சி பிரதேச செயலகர் பிரிவுக்குட்பட்ட 42 கிராம அலுவலகப் பிரிவுகளின் கிராம அலுவலர்கள் ஊடாக 5 ஆயிரத்து 550 விண்ணப்பப் படிவங்களை பயனாளிகளுக்கு வழங்கிய நிலையில் , மீளவும் பயனாளிகளிடம் இருந்து 2 ஆயிரத்து 232 பூரணப்படுத்திய படிவங்கள் இதுவரையில் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதுவரை ஒட்டுமொத்தமாக 4,பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 95 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் 8 ஆயிரத்து 410 விண்ணப்பப்படிவங்கள் பயனாளிகளுக்கு வழங்கிய நிலையில், மீளவும் பயனாளிகளிடம் இருந்து பொருத்து வீட்டுத் திட்டத்தில் இணைய விருப்பம் தெரிவித்து பூரணப்படுத்திய 5 ஆயிரத்து 3 படிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை விண்ணபங்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்குள் விடுமுறை தினங்கள் அதிகம் வந்துள்ளமையால் தம்மால் விண்ணப்படிவங்களைசமர்ப்பிக்க முடியவில்லை. எனவே கால நீடிப்பு வழங்குமாறு அனைத்து மாவட்ட பயனாளிகளும் முன் வைத்த கோரிக்கைக்கு அமைய மீள்குடியேற்ற அமைச்சினால் நாளை வெளளிக்கிழமை வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே பொருத்து வீட்டுத் திட்டத்தில் இணைய விரும்புபவர்கள் கால நீட்டிப்பு முடிவடைவதற்கு முன்னர் தமது ப்குதி பிரதேச செயலக பிரிவுகள் ஊடாக பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்." (2-15)






வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப் பட்ட நிதியில் புதுக்குடியிருப்பு பகுதியில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலை கடந்த 16 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் திறந்து வைக்கப்பட்டபோது...

(படங்கள்:- வற்றாப்பளை, பனிக்கன்குளம் செய்தியாளர்கள்.)

# வாகனங்கள் மோதுண்டு விபத்து; பயணித்த மூன்று பேர் காயம்

வவுனியா பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள வைரவப் புளியங்குளம் பகுதியில் வைரவர்வீதிஒழுங்கையில் ஆட்டோவும் பிக்கப் வாகனமும் மோதி வபத்துக்குள்ளானதில் மூன்று பேர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ்நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வைரவர் கோவில் வீதி ஊடாக வவுனியா நோக்கி பயணித்த ஆட்டோ மீது வீதியில் நின்ற பிக்கப் வாகனம் திடீரென பின்னோக்கி நகர்ந்த போது பிக்கப் வாகனத்துடன் ஆட்டோ மோதுண்டு விபத்துக்குள்ளாகியதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில், ஆட்டோவில் பயணித்த சிறுவன் ஒருவன் உட்பட மூவர் காயமடைந்த நிலையில் வீதியால் சென்ற பொது மக்களினால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் சிறிது நேரம் தடைப்பட்டிருந்த வீதிப்போக்குவரத்தை சீர்படுத்தியதுடன் விபத்துக்குள்ளான வாகனங்களையும் மீட்டு வவுனியா பொலிஸ நிலையத்திற்கு எடுத்துச் சென றதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 46,000 ஏக்கர் வயல் நிலங்கள் நீரின்றி கருகும் நிலையில்

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை

பருவ மழை பொய்த்து போனதனால் அதனை நம்பி வயல் விதைப்பில் ஈடுபட்டவர்களின் வயல்கள் அழிந்து விடும் நிலையில் காணப்படுகிறது.குறிப்பாக 46 ஆயிரம் ஏக்கர் வயல்களுக்கும் இன்னும் சில நாட்களுக்குள் மழை பெய்யாது விட்டால் அழிந்து விடும் நிலையில் காணப்படுகிறது என கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.



இரணைமடுக்குளத்தின் அபிவிருத்தி காரணமாக குளத்திலும் நீர் முற்றுமுழுதாக திறந்துவிடப்பட்டுள்ளமையால் இரணைமடுவிலிருந்தும் வயல்களுக்கு நீர் வழங்க முடியாத நிலையே காணப்படுகிறது. இதுவே பெரும் நெருகடிக்கு காரணமாக அமைந்துள்ளது

இதனால் ஏனைய சிறு குளங்களிலிருந்து நீர் பெறப்பட்டு பல்வேறு மாற்று வழிகளில் இரணைமடு குளத்தின் கீழான வயல்களுக்கு வழங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேவேளை கிளிநொச்சியில் எஞ்சிய தங்களுடைய வயல்களை பாதுகாத்துக் கொள்ள விவசாயிகள் என்னென்ன வழிகளில் நீரைப் பெற்று பயிர்களை பாதுகாத்துக்கொள்ள முடியுமோ அவற்றையெல்லாம் மேற்கொள்கின்றனா். குறிப்பாக வயல் நிலங்களில் குழாய் கிணறுகள் அமைத்தல், கிணறுகளில் இருந்து நீர்ப்பம்பி மூலம் நீர் இறைத்தல் போன்ற நடவடிககைகளில் ஈடுபட்டு வருகினறனா். அந்த வகையில்இரணைமடுவுக்கு கீழ் காணப்படுகின்ற மருதநகர் வயல்களுக்கு கனகாம்பிகை குளத்திலிருந்து நூற்றுக்கணக்கான குழாய்கள் மூலம் வான பாயும் வழி ஊடாக நீர் பெறப்பட்டு கிளிநொச்சி குளத்திற்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து மருதநகர் வயல்களுக்கு வழங்கும் மற்றொரு நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

முடிந்தளவுக்கு வயல்களை காப்பாற்றுவதற்காக கிளிநொச்சி விவசாயிகள் போராடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.(2-312)

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2017-12.02.2017

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## வழிபாட்டால் நினைத்தது நிறைவேறும்!



*இனிமையாக பேசிக் காரியங்களைச் சாதிக்கும் கும்ப இராசி அன்பர்களே!*

உங்களின் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் குருபகவான் வக்ர இயக்கத்தில் 9ஆம் இடத்திற்கு வந்து உங்கள் இராசியைப் பார்க்கப் போகின்றார். எனவே சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பாகவே அமையும். தொழிலில் முன்னேற்றம் உண்டு. துணையாக இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பணியில் இருக்கும் தொய்வு அகலும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

ஜென்ம இராசியில் கேதுவும், சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள். ஒரு சில நேரங்களில் தடை, தாமதங்கள் வந்து கொண்டேயிருக்கும். ஒரு தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை வந்துசேரும். சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் சர்ப்ப கிரக வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

இராசிநாதன் சனி 10ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். பரந்த மனம் பெற்றவர்கள் உங்களுக்கு உறுதுணையாக விளங்குவர். மூடிக்கிடந்த தொழிலை திறப்புவிழா செய்ய முன்வருவீர்கள். முக்கியப் புள்ளிகளின் உதவி கிடைக்கும்.

உங்கள் இராசியிலேயே கேதுவுடன் சுக்ரன், செவ்வாய் இணைந்து சுக்ர மங்கள யோகத்தை ஏற்படுத்துகிறார்கள். எனவே மங்கள ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். பூர்வீக சொத்துகளை விற்று, அதில் வரும் தொகையைத் தொழிலுக்கு முதலீடு செய்வீர்கள். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வருங்கால முன்னேற்றம் கருதி செய்த முயற்சிகளுக்கு, மாற்று இனத்தவர்கள் உறுதுணையாக இருப்பர். சனிக்கிழமை தோறும் வடக்குப் பார்த்த விநாயகப்பெருமானை வழிபடுவது நல்லது. மேலும் பிரதோஷ விரதமிருந்து நந்தியெம்பெருமானை வழிபடுவதன் மூலம் வந்த துயரங்கள் விலகும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

செவ்வாய் உங்கள் இராசிக்கு 2,10இற்கு அதிபதியாவார். அவர் ஜனவரி 16ஆம் திகதி மீன இராசிக்கு செல்கிறார். சகோதர ஸ்தானம மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய், தனஸ் தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். உடன்பிறப்புகளைக் கூட பங்குதாரர்களாக சேர்த்துக் கொண்டு ஏதேனும் தொழில் செய்யலாமா? என்று சிந்திப்பீர்கள். அலுவலகப் பணிகள் துரிதமாக முடியும். அத்திவாரத்தோடு நின்ற கட்டடப் பணி மீதியும் தொடரும். நிலையான வருமானம் வந்து நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும். விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய தொழில் செய்ய முன்வருவீர்கள்.

**குரு பார்க்கும் நேரம்!**

ஜனவரி 16ஆம் திகதி குரு, துலா இராசிக்கு வக்ர இயக்கத்தில் செல்கின்றார். அதன் பார்வை உங்கள் இராசியில் மட்டுமல்லாமல் 3,5 ஆகிய இடங்களிலும் பதிவாகின்றது.




எனவே ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்கும் வாய்ப்பு உண்டு.

**மீன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜனவரி 27ஆம் திகதி மீன இராசிக்கு, சுக்ரன் செல்கிறார். 4,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் உச்சம் பெறுவது யோகம் தான். அதிலும் குறிப்பாக தன ஸ்தானத்தில் உச்சம் பெறும் பொழுது தனவரவு திருப்திகரமாக இருக்கும். தடைகள் அகலும். குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளைத் தீர்க்க முன்வருவீர்கள். கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

மகர இராசிக்கு ஜனவரி 30ஆம் திகதி புதன் செல்கிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் 12இல் சஞ்சரிப்பது யோகம்தான். மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கூட்டு முயற்சியில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வந்துசேரும்.

இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்தை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் மாதம் இது. வளர்ச்சி கூடும். சேமிப்பு உயரும். கணவன்,மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும். தாய்வழி ஒத்துழைப்பும், சகோதரர்களின் பாசப்பிணைப்பும் கிடைக்கும். பிள்ளைகள் மனமாற்றம் ஏற்பட்டு, உங்கள் கருத்துக்கு ஒத்து வருவர். அவர்களுக்கு நல்ல வேலை கிடைத்து வருமானம் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய தகவல் வந்து சந்தோசத்தை வழங்கும். ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். அலுவலகப் பணிகளில் இருந்த இடையூறுகள் அகலும். விஷ்ணு வழிபாடு உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும். வராஹி வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

## அலைச்சல் அதிகரிக்கும் நேரம்!



*எதையும் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருக்கும் மீன இராசி அன்பர்களே!*

உங்களின் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் குரு பகவான் அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கப் போகிறார். எனவே திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு திகைக்க வைக்கலாம். விரயங்கள் கூடுதலாக இருக்கும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று ஒவ்வொரு நாளும் அங்கலாய்த்துக் கொள்வீர்கள். களைப்பின்றி உழைத்தாலும் காசு பணம் எதிர்பார்த்த அளவிற்கு கிடைக்காது.

குருவின் வக்ர இயக்கம் சில மாதங்கள் வரை உள்ளன. அதுவரை கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. பிறரை விமர்சனம் செய்வதன் மூலம் வீண் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடலாம். 24 மணி நேரமும் விழிப்புணர்ச்சியுடன் இருந்தால் எதையும் சமாளிக்க இயலும்.

மாதத் தொடக்கத்தில் 9இல் சனி இருக்கிறார். எனவே பெற்றோர் வழியில் மனக்கசப்புகள் ஏற்படலாம். வாகனப் பழுதுகளால் மனவாட்டங்கள் உருவாகலாம். புதிய வாகனங்களை வாங்கும் முயற்சியில் தாமதங்கள் ஏற்படலாம். வங்கிகளில் சலுகைகளை எதிர்பார்த்துக் காத்திருக்க நேரிடும். விரய ஸ்தானத்தில் செவ்வாய், சுக்ரன், கேது ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றன.

எனவே உடன்பிறப்புகள் வழியிலும் ஏதேனும் விரயம் ஏற்பட வாய்ப்பு உண்டு. அவர்களின் இல்லத்தில் நடைபெறும் மங்கள விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். சகோதரர்கள் செய்யும் தொழிலுக்கு பண உதவி செய்வீர்கள். இதுபோன்ற காலங்களில சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. குறிப்பாக திசைமாறிய தெனமுகக்கடவுள் வழிபாடு நல்ல மாற்றங்களை வழங்கும். பிரம்மபுரீஸ்வரர் வழிபாடும் உங்கள் பிரச்சினைகளுக்கு வடிகாலாக அமையும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜனவரி 16ஆம் திகதி மீனத்திற்கு செவ்வாய் வருகிறார். தனாதிபதியாகவும், 9ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் செவ்வாய், உங்கள் இராசியில் சஞ்சரிப்பது யோகம்தான். மோதல்கள் அகலும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆதரவுக்கரம் நீட்ட அருகில் இருக்கும் வங்கிகள் அனுகூலமாக இருக்கும். சோதனைகளில் இருந்து விடுபடுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்தபடியே லாபம் கிடைக்கும். தந்தை வழி ஒத்துழைப்போடு தகுந்த முன்னேற்றம் காண்பீர்கள்.

**அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைக்கும் நேரம்!**

ஜனவரி 16ஆம் திகதி குரு வக்ர இயக்கத்தில் துலாம் இராசிக்குச் செல்கிறார். அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கும் குருவால் பிரச்சினைகள் உருவாகத்தான் செய்யும். இருப்பினும் உங்கள் தைரியமும்,




தன்னம்பிக்கையும், தெய்வ வழிபாடும் அதை ஓரளவேனும் முறியடித்து முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்பட்டு கவலையை அதிகரிக்கச் செய்யும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் எவ்வளவு பாடுபட்டாலும் மேலதிகாரிகள் கண்டுகொள்ள மாட்டார்கள். ஓரிரு மாதங்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பது தான் நல்லது.

**மீன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜனவரி 27ஆம் திகதி மீன இராசியில் சுக்ரன் உச்சம் பெறப்போகிறார். அஷ்டமாதிபதி உச்சம் பெறுவதால் சிலரை நம்பி ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பெண் வழிப் பிரச்சினைகள் தலை தூக்கலாம். ஊர் மாற்றங்கள், வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் உருவாகும் வாய்ப்பு உண்டு. உறவினர்களின் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**மகர புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 30ஆம் திகதி மகர இராசிக்கு, புதன செல்கிறார். அங்கு சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். 4,7இற்கு அதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து வரவு கூடும். தாய் வழி உறவினர்களாலும் தன வரவு கிடைக்கும்.

இம்மாதம் வியாழன் தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. சதுர்த்தி விரதம் சங்கடங்களைப் போக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

குடும்பச்சுமை கூடும் மாதம் இது. குடும்பத்தில் உள்ளவர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அலைச்சல் கூடும். ஆதாயம் குறையும். கணவன்,மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் மூன்றாம் நபர் தலையீட்டால் பிரச்சினைகள் உருவாகலாம். சகோதர வழியில் உதவி கிடைக்கும். வாகனங்கள் வாங்க கடன் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும். அலுவலகத்தில் பணிபுரிபவர்கள், மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற முயற்சிப்பது நல்லது. பிள்ளைகளால் விரயம் ஏற்படும். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளில் திடீர் மாற்றம் ஏற்படலாம். வியாழக்கிழமை விரதமும், தென்முகக் கடவுள் வழிபாடும் நன்மையை வழங்கும்.

(முற்றும்)

# கலைத் தரிசனம்

## ஓவியர் க.பாஸ்கரன் அவர்களுடனான சந்திப்பு



*சென்னை நுண்கலை பாடசாலையில் முறைப்படி ஓவியத்தைப் பயின்ற கே.குமாரசாமி அவர்களிடம் 1982 ஆம் ஆண்டு தனது 14 ஆவது வயதில் ஓவியத்தை முறைப்படி பயின்றார். 2009 ஆம் ஆண்டு தனது சொந்தக் குருதியினால் சிலுவையில் அறையப்பட்ட யேசுநாதரின் ஓவியத்தையும் இதே ஆண்டில் முட்டைக்கோதுக்குள் காந்தி அடிகளின் ஓவியத்தையும் 2000 ஆம் ஆண்டில் புலி வெள்ளைக்குடை பிடித்துக் கொண்டு சமாதானத்தை நோக்கிச் செல்கின்ற ஓவியத்தையும் 2012 இல் முத்திரைவடிவில் நீல் ஆம்ஸ்ரோங்கின் ஓவியத்தையும் வரைந்தார். இவை இவரின் புகழ்பூத்த ஓவியங்களாகும். 1968 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20 ஆம் திகதி பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை தண்ணீரூற்று இலங்கைத் திருச்சபை த.க.பாடசாலையில் பயின்றார். மாணவர்கள் மத்தியில் பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலிக்கின்ற ஓவியங்களையும் புத்தாக்க ஓவியங்களையும் வரைந்து காண்பித்து ஓவிய மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றார். முல்லைத்தீவில் வன்னி ஓவியக்கலாமன்றம் அமைய வேண்டும் என்பது அவரின் அவா ஆகும். தண் ணீரூற்று மேற்கில் இலைமறையாக இச்சிறந்த ஓவியர் வாழ்ந்து வருகின்றார். ஓவியர் கனகசபை பாஸ்கரன் அவர்கள் வலம்புரிக்கு தன்னைப்பற்றியும் ஓவியம் பற்றியும் கூறியவற்றை இங்கே தருகின்றோம்*

**➢ ஓவியத் தத்ரூபத்தை கற்றுக் கொண்ட அந்த நாள்**

இயல்பாகவே ஓவியத்தில் நாட்டமிருந்தது. தண்ணீரூற்று இலங்கைத் திருச்சபை தீ.க.பாடசாலையில் தரம் ஒன்றில் கற்றுக் கொண்டிருந்தபோது உழவு இயந்திரமும் குதிரை ஓவியத்தையும் வரைந்து வீட்டுக்கு கொண்டுவந்தேன். அதனை எனது அண்ணா வாங்கிச் சுவரில ஒட்டினார். இதுதான் நான் கீறிய முதல்படம். தரம் ஐந்தில் ஓவியப் போட்டியில் பங்குபற்றி சூழல் மாசடைதல் தொடர்பான ஓவியத்தை வரைந்து அகில இலங்கை ரீதியாக 2ஆம் இடத்தைப் பெற்றேன். அதன்பின்னர் தரம்-06 இல் சித்திரப்பாடத்தை ஒரு பாடமாகக் கற்றேன். அப்பாடத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றேன். கே.குமாரசாமி அவர்கள் புகையிரத நிலைய அதிகாரியின் படத்தை வரைந்திருக்கிறார். அதனை ஒருமுறை பார்வையிடும்படி எனது அண்ணா கூறினார். நானும் அவ் ஓவியத்தைச் சென்று பார்வையிட்டேன். மிகவும் தத்ரூபமாக இருந்தது. அப்பொழுது அவரிடம் ஓவியத்தை எனக்கு கற்பிப்பீர்களா? என்றேன். அவரும் என்னை விசாரித்து விட்டு நீங்கள் பாடசாலை முடிவடைந்த பின்னர் ஒருநான்கு மணிக்கு வாருங்கள் பழக்குகிறேன் என்றார். நானும் தொடர்ச்சியாகச் சென்றும் சனி-ஞாயிறு தினங்களிலும் சென்று ஓவியத்தைக் கற்றேன். 1982 இல் கே.குமாரசாமி அவர்களுடன் இணைந்து முறைப்படி ஓவியத்தைப் பயின்றேன். இவரே எனது குரு. இவ்வாறாக ஓவியத்திற்குள் நுழைந்தேன்.

**➢ மனிதற்காய் குருதி சிந்திய யேசுவிற்காய் எனது குருதியால் அவரை வரைந்தேன்.**

நான் இந்துவாக இருந்தாலும் இயல்பாகவே யேசுநாதரில் சரியான விருப்பம். அதன் காரணமாக சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதர் ஓவியத்தை வரைய வேண்டுமென்று முடிவெடுத்தேன். முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கு அருகில் தற்காலிகமாக பிரசவ விடுதி இயங்கி வந்தது. அங்கிருந்த தாதியர் ஈஸ்வரி அவர்களிடம் எனது உடம்பிலிருந்து இரத்தம் தேவை எடுத்துத் தருவீர்களா? என்றேன். அவரும் அதற்கென ஓர் ஒழுங்கு முறைகள் இருக்குது. கஷ்டம் எடுக்க முடியாது என மறுத்துவிட்டார். பின்னர் தேவையை தெளிவாகவிளக்கி இரங்கிக் கேட்டவுடன் ஊசி மருந்துக் குப்பிக்குள் எடுத்துத் தந்தார். உடனே சந்தோசத்துடன் வேகமாகச் சைக்கிளில் இரத்தம் உறையாத வண்ணம் இடையிடையே குலுக்கியபடி வீடு சேர்ந்து வரையத் தொடங்கினேன். A4 தாளில் தான் வரைந்தேன். மிக விரைவாக வரையத் தொடங்கினேன். இந்த ஓவியத்தை வரைந்து முடிக்க 6நிமிடங்கள் எடுத்தன. இந்த ஓவியத்தை 2000. 05.07 இல் வரைந்தேன். வரைந்த பிற்பாடு எனக்கு ஓர் ஆத்ம திருப்தி ஏற்பட்டது. மிகவும் சந்தோசமாக இருந்தது. சிலுவையில் அறையப்பட்ட யேசுநாதரை எனது சொந்தக் குருதியினால் வரைந்தேன் என்ற அனுபவம் எனது வாழ்வில் என்றும் மறக்க முடியாதவை.

**➢ முத்திரை அளவில் வரைந்த நிலாவில் கால் பதித்த நீல் ஆம்ஸ்ரோங்**

நான் Acted நிறுவனத்தில் வேலை செய்த போது Acted நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்டத் திட்டமிடல் அதிகாரியான அமெரிக்காவைச் சேர்ந்த இவான் பீஸ் அவர்கள் ஒரு படம் வரைந்து தரும்படி கேட்டுக் கொண்டார். அதனை வரைந்து கொடுக்கும்படி ஏனைய சக உத்தியோகத்தர்களும் வற்புறுத்தினார்கள். அதன்படி நானும் படத்தை வரைந்து கொடுத்தேன். அவரும் என்னைப் பாராட்டி நன்றி தெரிவித்தார். அப்போது நான் அவருக்கு பின்னாளில் நீல் ஆம்ஸ்ரோங்கின் படத்தினை வரைந்து அனுப்புகின்றேன் என்றேன். அவரும் சந்தோசப்பட்டு கட்டாயம் வரைந்து அனுப்புங்கள் என்றார். நானும் மனம் வைத்து முத்திரை அளவில் நீல் ஆம்ஸ்ரோங்கின் படத்தினை வரைந்து அனுப்பினேன். இப்படம் இணையத்தளத்திலும் ஏனைய சமூக வலைத்தளங்களிலும் பதிவாகி பல பாராட்டுக்களைத் தந்தது. நான் அனுப்பிய இந்தப்படத்தினை இவான் பீஸ் அவர்கள் பிறேம் செய்து தனது காரியாலயத்தில் தொங்க விட்டார். 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21இல் நீல் ஆம்ஸ்ரோங் நிலவில் காலடி எடுத்துவைத்த நாளன்று வெளியிட்ட நியூயோர்க் ஆங்கில நாளிதழையும் அமெரிக்கத் தேசியக் கொடியையும் ஒரு டொலர் பணத்தையும் வாழ்த்துமடலையும் அனுப்பினார். மிகவும் சந்தோசப்பட்டேன். ஏனெனில் நன்றி பாராட்டி எழுதிய கடிதத்தில் அப்படம் சார்ந்த உண்மை நிலையை வெளிக்காட்டிப் பாராட்டியிருந்தார். இப்படத்தை 2014 ஆம் ஆண்டு வரைந்தேன்.



பாஸ்கரனால் வரையப்பட்ட நீல் ஆம்ஸ்ரோங்

**➢ முட்டைக் கோதுக்குள்ள காந்தி அடிகளாரின் உருவம்**

2009ஆம் ஆண்டு இப்படத்தை வரைந்தேன். அது ஒரு சாதாரண வேலையல்ல. மிகவும் கஷ்டமான வேலை. மாமூலையில் எனது சின்னம்மா கோழி வளர்த்து வந்தா, நான் அவரிடம் போய் முட்டை வாங்கி முட்டைக்குள்ளிருக்கும் மஞ்சள் கரு, வெள்ளைக்கரு இரண்டையும் வெளியில் எடுத்துவிட்டு ஒரு பென்சிலின் சுற்றத்தின் ஐந்து மடங்களவு கோதினில் துவாரம் இட்டு அதற்குள் காந்தியடிகளை வரைந்தேன். இப்படி வரைந்து கொண்டிருக்கின்றபோது பென்சில் கூர் அழுத்துதல், துவாரம் போடுகின்ற போது கோது உடைதல் போன்ற பல காரணங்களால் 14 முட்டைகள் உடைந்து விட்டன. இறுதியாக 15ஆவது முட்டையினில் வரைந்த போதுதான் வெற்றியளித்தது. 14 முட்டைகளில் பல முட்டைக்கோதுகள் [illegible] இறுதிநிலையை அடை[illegible] உடைந்ததும் உண்டு. [illegible] நான் சோர்வடையாமல் [illegible] களுக்கு மேலாகக் காத்திரு[illegible] வரைந்தேன். இவ் ஓவியத்தை கலர் பென்சிலில் தான் வரைந்தேன். பலரும் எனது வீடு தேடி வந்து இவற்றினைப் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள். அவ்வளவிற்குத் தத்ரூபமாக இருந்தது. இந்த ஓவியத்தை வரைவதற்கான வாய்ப்பு, எவருமே வெளியில போக முடியாத, போர்ச் சூழல், அதனால் பொறுமையாக வரைந்து முடித்தேன்.

**➢ தொடர்ச்சியான பயிற்சிகளே நல்ல ஓவியனாக்கும்**

ஓவியத்துறையில் முதலில் விருப்பம் இருக்க வேண்டும். பார்த்து வரைகின்ற திறனை வரைந்து, வரைந்து பெற வேண்டும். தொடர்ச்சியான பயிற்சிகள் மூலம் நல்ல கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்களை வரைய வேண்டும். தூரிகைகள், வர்ணங்கள், கலவைகள் போன்ற ஓவிய ஊடகங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கற்பனை சக்திகளை உருவாக்க வேணடும். எல்லாவற்றிற்கும் மேலாக பொறுமையை வளர்க்க வேண்டும். ஓவியம் ஒரு கலைத்துவம் என்பதை நினைவில்வைத்திருத்தல்வேண்டும்.

**➢ இனி எடுக்கும் புதிய முயற்சிகள்**

பொறிசார் ஓவியங்களை வரையவுள்ளேன். உலகில் யுத்த ராங்கிகளைக் காவிச் செல்லக்கூடிய மிகப் பிரமாண்டமான விமானங்களையும் வரையவுள்ளேன்.

மின்கல மரம் அதாவது பெரிய மரம் ஒன்றினைத் தயார் செய்து அந்த மரத்தின் இலைகள் முழுவதிலும் சூரியப்படலம் பொருத்தப்பட்டு சூரியஒளி மூலம் மின்கலத்திற்கு மின்சாரத்தைப் பெற்று ஒரு ஊரிற்கே போதுமானதான மின்சாரத்தை வழங்கக்கூடியதான மின்கலமரத்தை வரையவுள்ளேன்.

[illegible] விவசாயிகள் முக்கிமானவர்கள். அந்த வகையில் விவசாயிகளைக் கௌரவிக்கும் முகமாகவும் அவர்களைப் பிரதிபலிக்கும் முகமாகவும் ஆயிரம் ரூபா நாணயத்தாளை வரைந்து இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பவுள்ளேன்.

அழிவுக்குப் பயன்படுகின்ற ஏவுகணைகளைப்பயன்படுத்திஅதில் இரசாயனப் பதார்த்தங்களை உள்ளடக்கி செயற்கை மழையைப் பெறுதல் தொடர்பான ஓவியத்தை வரையவுள்ளேன்.

நீர் உருளைகள் அதாவது துடுப்பாட்ட பந்தளவு பந்துக்குள் நீர் அடைக்கப்பட்டு ஆயிரம், இரண்டாயிரம் நீர்ப்பந்துகளை விமானத்தின் மூலம் வயல் நிலங்களுக்கு போடுகின்றபோது அவை தரையை அண்மிக்கின்ற மூன்று அடி தூரத்தில் வெடித்துச் சிதறி பயிர்ளுக்கு நீர் பாய்ச்சப்படும். இதனைக் கீறவுள்ளேன். விவசாயிகளின் நாணயத்தாள் தவிர்ந்த ஏனைய ஓவியங்கள் யாவற்றையும் வரைந்து அமெரிக்காவிற்கு அனுப்பப் போகின்றேன்.

**➢ புலி பிடித்த வெள்ளைக் கொடி**

2000 ஆம் ஆண்டு சமதானத்தை நோக்கி என்கின்ற தலைப்பில் ஓவியப் போட்டியொன்றினை இயக்கம் நடத்தினார்கள். அதில் நான் வரைந்தது புலி வெள்ளைக் குடைபிடித்துக்கொண்டு ஒரு பிரதான காப்பெற் வீதியால் நடந்து கொண்டு வருகின்றது. அதில் சந்தியொன்று உள்ளது. அந்தச் சந்தியில் இரண்டு வீதிகள் பிரிகின்றன. இடது வீதியில் போர் என்றும், வலது வீதியில் சமாதானம் என்றும் எழுதப்பட்டிருந்தது. இதில் புலி சமாதான வீதியை நோக்கிச் சமாதானமாகச் செல்கின்றது என கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமாக வரைந்தேன். இவ் ஓவியம் பரிசினைப் பெற்றது.

**➢ வன்னி ஓவிய கலாமன்றம் உருவாக்கப்பட வேண்டும்.**


சாதாரண படங்களை வரைவதற்கு அப்பாலே புத்தாக்கப் படைப்புள்ள ஓவியங்களைவரைய வேண்டும். அதற்காக மாணவர்களை வழிப்படுத்த வேண்டும். ஓவியத்தை மாணவர்களுக்குச் சரியாக ஊட்ட வேண்டும். ஓவியம் சார் போட்டிகளை வினைத்திறனுடன் நடத்த வேண்டும். ஓவியத்தை நேசிக்க வேண்டும். முல்லைத்தீவில் வன்னி ஓவியக் கலாமன்றம் உருவாக வேண்டும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# ஜல்லிக்கட்டுக்காக

(சென்னை)

**ஜல்லிக்கட்டு நடைபெறவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் ஒன்றுகூடி இரவு பகலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.**



ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக சென்னை மெரினா கடற்கரையில் இரண்டு நாட்களுக்கு மேலாக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போராடி வருகின்றனர்.

மெரினா கடற்கையில் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு இளைஞர்களின் வருகை அதிகரித்து வருவதால் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது.

போராட்டத்தின் நடுவே இளைஞர்கள் குழுவை தமிழக அமைச்சர்கள் ஜெயகுமார் மற்றும் பாண்டியராஜன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஆனால், முதல்வர் நேரில் வர வேண்டும் அல்லது அறிக்கை மூலம் உரிய பதில் அளிக்க வேண்டும் என்று இளைஞர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனிடையே, மதுரை அலங்காநல்லூரில் இரண்டாவது நாளாக நேற்றும் இளைஞர்கள் மற்றும் பொது மக்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. பொது மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளதால் போராட்டம் மேலும் தீவிரம் அடைந்துள்ளது.

நெல்லை பாளையங்கோட்டையில் உள்ள வா.உ.சி மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் போராட்டம் நடைபெற்றது.

புதுச்சேரி ஏ.எப்.டி.மைதானத்தில் இளைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டும் என்று நேற்று முன்தினம் மாலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பீட்டாவை தடை செய், ஜல்லிக்கட்டு நடத்தும் வரை ஓயமாட்டோம் உள்ளிட்ட முழக்கங்களை கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் இருந்தனர்.

கொட்டும்பனியிலும்மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் இரவு முழுவதும் போராடி வருவதும் பெரும் தன்னெழுச்சியை ஏற்படுத்தி வருகிறது.

அதேபோல் அமெரிக்காவில் பல்வேறு இடங்களில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டங்கள் நடைபெற்று வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

பாடசாலை மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதால் போராட்டமானது மேலும் தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

## மெரினாக் கடற்கரையில் தொடர்கிறது போராட்டம்



ஜல்லிக்கட்டு விவகாரம் தொடர்பில் சென்னை மெரினா கடற்கரையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள், மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் தொலைபேசி வெளிச்சத்தில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஜல்லிக்கட்டை நடத்த வலியுறுத்தி, அலங்கா நல்லூரில் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் உட்பட 240 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும் சென்னை மெரினா கடற்கரை பிரதேசத்தில் இளைஞர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பொலிஸார் சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டனர். எனினும், பொலிஸாரின் வாக்குறுதிகளை போராட்டக்காரர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. முதலமைச்சர் வந்து பேசும் வரையில் போராட்டம் தொடரும் என்று தெரிவித்தனர்.


இருள் சூழ்ந்த நிலையிலும் போராட்டம் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில், குறித்த பிரதேசத்தில் மின்சாரம் துண்டிப்பு ஏற்பட்டிருந்தது.

இருப்பினும், கைத்தொலைபேசிகளின் வெளிச்சம் மற்றும் ரோச்லைற் வெளிச்சம் ஆகியவற்றை பயன்படுத்தி போராட்டம் தொடர்ந்தது. (இ-7)




## மோதாதே மோதாதே தமிழகத்துடன் மோதாதே ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக பிரிட்டன் தமிழர்கள்!



ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து பிரித்தானியா நாட்டின் லண்டனில் வாழும் தமிழர்கள் நேற்று போராட்டம் நடத்தியுள்ளனர்.

ஜல்லிக்கட்டுக்கான தடைகளை நீக்க வேண்டும் என தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் மாணவர்கள், இளைஞர்கள்என அனைத்து தரப்பினரும் ஒன்று கூடி நேற்று போராட்டம் நடத்தினர்.

இதனிடையில் எங்களுக்கும் தமிழ் கலாசாரம் மீது பற்று உள்ளது என உறுதியாக நிரூபிக்கும் வகையில் லண்டன் வாழ் தமிழர்களும் ஜல்லிக்கட்டுக்காக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

லண்டனில் உள்ள இந்தியத் தூதரகம் முன்பு திரண்ட பலர் அமைதியான முறையில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்தும், தடை அதை உடை, மோதாதே மோதாதே தமிழகத்துடன் மோதாதே போன்ற கோஷங்களை எழுப்பியும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர். மேலும் பீட்டா அமைப்பை எதிர்த்தும் லண்டன் வாழ் தமிழர்கள் முழக்கமிட்டனர்.

தமிழர்கள் ஒன்று கூடி நடத்திய போராட்டத்தால் அந்தப் பகுதி பரபரப்பாக காணப்பட்டது. (இ-3)

## ஜல்லிக்கட்டுக்கு நடிகர்களும் ஆதரவு



ஜல்லிக்கட்டுக்கு நடிகர் விஜய், சூர்யா போன்றவர்கள் ஆதரவு அளித்துள்ள நிலையில் மற்றொரு முன்னணி நடிகரான தனு ஷும் தனது ஆதரவை டுவிட்டர் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழகத்தில் தொடர்ந்து ஜல்லிக்கட்டு நடத்த வலியுறுத்தியும் பீட்டா அமைப்பின் தலையீட்டினை கட்டுப்படுத்தக் கோரியும் மதுரை அலங்கா நல்லூர் மற்றும் சென்னை மெரினா உள்ளிட்ட பகுதிகளில் இளைஞர்கள், பொது மக்கள் என திரளானோர் அறவழியில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் திரைத்துறை பிரபலங்கள் மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள் பலர் ஜல்லிக்கட்டு போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

அந்த வழியில் நடிகர் விஜய்வீடியோ செய்தி ஒன்றை வெளியிட்டு தனது ஆதரவை தெரிவித்துள்ளார். தொடர்ந்து தற்போது நடிகர் தனுஷ் தனது டுவிட்டர் பக்கத்தில் ஜல்லிக்கட்டுக்கான ஆதரவை தெரிவித்து பதிவிட்டுள்ளார். (இ-7)

## 21ம் திகதி அ


ஜல்லிக்கட்டுக்
டங்கள் வெடித்
தங்கள் ஆதரவ
யில் நாம் தமி
இயக்குநர்அமீர
பட்டனர். அப்போ
ஒடுக்குவது சர்வ
பளிக்க வேண்டி
ஜல்லிக்கட்டு
அலங்காநல்லூரி
சஸ்பென்ஸ் கா



மக்கள் மூன்று
மேலாக போரா
தும் போராட்டத்
மேலும் உச்
என நீதிபதி கவு
போராட்டம் குறி
ஓ.பன்னீர்செல்

# திரண்டது தமிழகம்










## 1ம் திகதி அலங்கா நல்லூரில் ஜல்லிக்கட்டு! சீமான் அதிரடி அறிவிப்பு



ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக தமிழகம் எங்கும் போராட் ங்கள் வெடித்துள்ளன, இதற்கு பல்வேறு பிரபலங்களும் ங்கள் ஆதரவினை தெரிவித்து வருகின்றனர். இந்நிலை ல் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், யக்குநர் அமீர் அலங்கா நல்லூர் வந்து போராட்டத்தில் ஈடு டனர். அப்போது சீமான் பேசுகையில், மக்கள் போராட்டத்தை டுக்குவது சர்வாதிகாரம், மக்களின் உணர்வுகளுக்கு மதிப ளிக்க வேண்டிய நிலையிலிருந்து அரசு விலகி நிற்கிறது.

ஜல்லிக்கட்டுடை என்பது எமது பண்பாட்டு மீது தொடுக்கப்பட்ட போர், 21ம் திகதி லங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடைபெறும், எந்த இடத்தில் எப்படி நடக்கும் என்பது ஸ்பென்ஸ், காளைகள் சீறுவது மட்டும் உறுதி என தெரிவித்தார். (இ-3)



## போராட்டத்தில் தலையிட முடியாது உயர் நீதிமன்ற நீதிபதி அறிவிப்பு

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்க கோரி மாநிலம் முழுவதும் மாணவர்கள், பொதுமக்கள் போராட டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை, சேலம் என பல மாவட்டங்களில் போராட்டம் தீவிர மடைந்து வருகிறது. சென்னை மெரினாவில் போராடி வரும் க்கள் மூன்று கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து 24 மணிநேரத்திற்கும் மலாக போராடி வருகின்றனர். இந்நிலையில், தமிழகத்தில் மாணவர்கள் நடத் ம் போராட்டத்தில் தலையிட முடியாது என உயர்நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

மேலும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் தலையிட முடியாது ன நீதிபதி கவுல் தெரிவித்துள்ளார். இந்நிலையில், ஜல்லிக் கட்டுக்கு ஆதரவாக நடகும் பாராட்டம் குறித்து தலைமைச் செயலகத்தில் டி.ஜி.பி ராஜேந்திரனுடன் முதல்வர் பன்னீர்செல்வம் நேற்று விசேட ஆலோசனை நடத்தினார். (இ-3)

## ஜல்லிக்கட்டு நடத்த உடன் அவசர சட்டம் இயற்ற வேண்டும்

### முதலமைச்சர் நாராயணசாமி பேட்டி

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்த மத்திய அமைச்சரவையைக் கூட்டி அவசர சட்டத்தை இயற்ற வேண்டும் என்று புதுச்சேரி முதலமைச்சர் நாராயணசாமி வலியுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி முதலமைச்சர் நாராயணசாமி டில்லியில் இருந்து விமானம் மூலம் நேற்றுக்காலை சென்னை வந்தார். விமான நிலையத்தில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

தமிழகத்தின் பல பகுதிகளில் ஜல்லிக்கட்டு நடத்த வலியுறுத்தி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த போராட்டத்தில் மாணவர்களும், இளைஞர்களும் ஈடுபட்டு உள்ளனர். ஜல்லிக்கட்டு தமிழர்களின் வீரவிளையாட்டு. தமிழகத்தின் கலாசாரத்தை விளக்கக் கூடியது.

உச்சநீதிமன்றம் ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்தது வருத்தத்துக்குரியது. உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கினாலதான் ஒரு முடிவு காண முடியும் என ஜல்லிக்கட்டு விவகாரத்தில் மத்திய அரசு பாராமுகமாக இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஜல்



லிக்கட்டு விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு ஏதுவாக பிரதமர் மோடி தனது அமைச்சரவையை கூட்டி அவசரசட்டத்தைகொண்டு வர வேண்டும். பாரம்பரியமான ஜல்லிக்கட்டை நடத்த பிரதமர் உதவிபுரிவார் என நம்புகிறேன். ஜல்லிக்கட்டு நடக்க வேண்டும் என போராட்டங்கள் வலுப்பெறுவதால் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் நிலை உள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து ஜல்லிக்கட்டை நடத்த வேண்டும் என விரும்புகின்றனர். தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மத்திய அரசு மதிப்பு அளிக்கும் என நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (இ-7)

## ஜல்லிக்கட்டு ஆதரவான போராட்டக்காரர்களுக்கு தமிழக அரசு வாக்குறுதி

மெரினா ஜல்லிக்கட்டு போராட்டக்குழுவின் பிரதிநிதிகளுடன் பேசிய பிறகு தமிழக அமைச்சர்கள் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக வாக்குறுதி அளித்தனர்.

மெரினா கடற்கரையில் ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி இளைஞர் பட்டாளத்தினர் பெரும் திரளாகக் கூடி போராட்டம் நடத்திவருகின்றனர். அவர்களின் பிரதிநிதிகள் 10 பேரை தமிழக அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்தது.

இதனையடுத்து, நேற்று முன்தினம் இரவு அமைச்சர்கள் ஜெயக்குமார் மற்றும் பாண்டியராஜன் ஆகியோர் போராட்டக்குழுவின் பத்து பிரதிநிதிகளுடன் சுமார் அரைமணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, போராட்டக்குழு சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பின்வருமாறு,

முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக அறிக்கை வெளியிட வேண்டும்.

காட்சிப்படுத்தக்கூடாத விலங்குகள் பட்டியலிலிருந்து காளையை நீக்க மத்திய அரசுக்கு நெருக்கடி அளிக்க வேண்டும்.

ஜல்லிக்கட்டு நடத்த அவசரச்சட்டம் கொண்டுவர மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும்.

நாடாளுமன்றத்திலும் குடியரசுத் தலைவரிடமும் எம்.பி.க்கள் மூலம் அவசரச் சட்டம் கொண்டுவர அனைத்து முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பீட்டா அமைப்பை குறைந்தபட்சம் தமிழகத்தில் மட்டுமாவது தடை செய்ய வேண்டும்.

பேச்சுவார்த்தைக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர்கள் தமிழக அரசு சார்பில் அளித்த வாக்குறுதிகள்,

முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக அறிக்கை வெளியிடுவார்.

காட்சிப்படுத்தக்கூடாத விலங்குகள் பட்டியலிலிருந்து காளையை நீக்க அழுத்தம் கொடுக்கப்படும்.

ஜல்லிக்கட்டு நடத்த ஏதுவாக அவசரச்சட்டம் கொண்டு வர மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

நாடாளுமன்றத்திலும் குடியரசுத்தலைவரிடமும் எம்.பி.க்கள் மூலம் அவசரச்சட்டம் கொண்டு அனைத்து முயற்சியும் மேற்கொள்ளப்படும்.

பீட்டா அமைப்பை தடை செய்ய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றனர். (இ-7)

# பூஜிதவிற்கு பதிலாக சீ.டி.விக்கிரமரத்ன

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிற்கு பதிலாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்கிரமரத்ன கடமையாற்றவுள்ளார் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஆசிய பிராந்திய பொலிஸ அதிகாரிகளின் 23 ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர சென்றுள்ளார்.

இதன் காரணமாகவே, பூஜிதவிற்கு பதிலாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்கிரமரத்ன கடமையாற்றவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தின் தலைநகரம்காத்மண்டுவில்இந்த மாநாடு இடம்பெறவுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

# ரத்ன தேரரின் தீர்மானம் தெளிவில்லை - டளஸ்

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் அத்து ரலிய ரத்ன தேரரின் தீர்மானம் நல்லதாக இருப்பினும், அரசாங்கத்துக்கு எதிரான சக்திகளின் போராட்டத்துக்கு அது ஒரு உத்வேகத்தை வழங்காது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டு எதிர்க்கட்சி சார்பு எம்.பி. டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இவரின் தீர்மானம் தொடர்பில் மக்களிடத்தில் இன்னும் தெளிவில்லாத ஒரு நிலைமை காணப்படுவதாகவும் இன்னும் தேரரின் நடவடிக்கை தொடர்பில் அவதானித்த பின்னரே தீர்மானிக்க வேண்டியுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இருப்பினும், ரத்ன தேரர் வரலாற்று நெடுகிலும் மோசமான செயற்பாடுகளில் ஈடுபட்ட ஒருவர் அல்ல எனவும் டளஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார். (இ-3)

# முழு இனத்திற்கும் இரத்த அழுத்தம்

## காரணம் கூறுகிறார் ஞானசாரர்

(கொழும்பு)

விமல் வீரவன்சவுக்கு இரத்த அழுத்தம் ஏற்பட்டுள்ளது போன்று இந்த நாட்டின் முழு இனத்துக்கும் இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு நீண்ட நாட்கள் செல்லாது என பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

சிறையிலுள்ள விமல் வீரவன்ச எம்.பி.யின் சுகதுக்கங்களை விசாரிக்க சென்றபோது ஊடகங்களுக்கு ஞானசார தேரர் கருத்துத் தெரிவித்தார். இதன்போதே தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விமல் வீரவன்ச போன்ற தேசிய வீரர்களை சிறையில் அடைத்தாலும், அவரது வீரத்தைச் சிறைப்படுத்த முடியாது. அவருக்கு தற்பொழுது இரத்த அழுத்தம் ஏற்பட்டுள்ளது. இவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

ஏனெனில், அதனையும் சில ஊடகங்கள் அவரது குறையாகக் காட்ட முழுக் கவனத்தையும் செலுத்தியுள்ளதாகவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# அரசு திணிக்கும் தீர்வை நாம் ஏற்கத் தயாரில்லை

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.சிறிதரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசு திணிக்க முயலும் பௌத்த மேலாதிக்க தீர்வினை ஏற்றுக் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இல்லை என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் அமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் முன் வரைபு இந்த வருடம் முன்வைக்கப்படும் என்று அரசாங்கத்தினால் கூறப்பட்டிருந்தாலும் இதுவரை அந்த முன்வரைபு முன்வைக்கப்படவில்லை.

6 உப குழுக்களின் அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு கடந்த 10.11.12 ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுக்கப்பட இருந்தது. இருப்பினும் அரசியல் அழுத்தங்கள், சிங்கள தலைவர்களுடைய அதிவேகமான இனவாத கருத்துக்கள் அந்த விவாதங்கள் கூட முடக்கப்பட்டது.

ஜனாதிபதிகூட சமஷ்டி என்ற சொல்லுக்கே இடமில்லை என்று சொல்லுகின்றார். பௌத்த மதத்திற்கு ஒரு அங்குலம் கூட விட்டுக் 'கொடுக்காமல், பௌத்த மேலாதிக்கத்தோடு இருப்போம் என்ற செய்தியை அவர்கள் சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள்.

பௌத்தம்தான்முதன்மை, பௌத்த மேலாதிக்கம்தான் தேவை, வடக்கு, கிழக்கு இணைப்பில்லை என்ற நிகழ்ச்சி நிரலில்தான் அரசாங்கம் தன்னுடைய செயற்பாடுகளை கொண்டுவருமாக இருந்தால், 13 இற்குள் தான் தீர்வு என்றால் அது இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கும், யார் இந்த இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்களோ அவர்களுக்கு தீர்வு இல்லை என்பதைத்தான் அவை கோடிட்டுக் காட்டுகின்றன.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், எமது தலைமையும் தமிழ் மக்கள் எமக்கு தந்த ஆணையின் பிரகாரம் எங்களுடைய நல்லெண்ணங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தி வருகினறோம். குறிப்பாக முழுமையான நல்லெண்ணத்தை கொடுத்திருக்கின்றோம் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார் 2018 இற்குள் தீர்வு என்று. இவரைத் தொடர்ந்து அடுத்த வருடம் இன்னுமொரு அமைச்சர் சொல்லுவார் 2019 இற்குள் தீர்வு என்று.

இப்படியே ஒவ்வொருவரும் ஆண்டுகளை சொல்லி, காலங்களை இழுத்தடிக்கின்ற விடயங்களைத்தான் செய்கின்றார்களே தவிர தீர்வுகளை தருகின்ற எண்ணம் அவர்களிடம் இல்லை.

பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபாலவுடைய கருத்தும் கூட ஒரு சமஷ்டி அடைப்படையிலேயோ அல்லது 13 இற்கு அப்பால் எந்த விடயத்தினையும் நீங்கள் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்பது போல தமிழ் மக்களை நோகடிக்கின்ற விடயங்களை தான் அவர் சொல்லியிருக்கின்றார்.

தமிழர்களை பொறுத்தவரையில் வடக்கு கிழக்கு இணைந்த தாயக மண்ணில் அவர்களுடைய இறைமையின் அடிப்படையில் தீர்வு முன்வைக்காத வகையில் தமிழர்கள் தொடர்ந்து இந்த கோரிக்கைகளை வெல்வதற்கான அரசியல் தீர்வினை பெற்றுக் கொள்வதற்கான முழு முயறசிகளையும் சர்வதேச அங்கீகாரத்துடன் முன்னெடுப்பார்கள்.

அரசாங்கம் இதிலே நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவில்லை என்றால், சிங்களவர்களோடு தமிழர்கள் சேர்ந்து வாழ முடியாது என்ற நிலைப்பாட்டில்தான் தமிழர்கள் இருக்கின்றார்கள்.எனவேசிங்களவர்களோடு வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் சேர்ந்து வாழ முடியுமா? என்ற பொதுஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக வேண்டும்.

பிரச்சினைக்குரியவர்கள் தான் தங்களுக்கான தீர்வினை முன்வைக்க வேண்டும். யார் பிரச்சினையை கொடுத்தவர்களோ? யார் துன்பங்களை கொடுத்தார்களோ? யார் எங்களை அடக்கி ஆண்டார்களோ? அவர்கள் தீர்வு சொன்னால் அது உரிய தீர்வாக அமையாது.

பிரச்சினையால் பாதிக்கப்பட்டவன், இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டவன்தான் தனக்கு வேண்டிய தீர்வினை கேட்பதற்கு உரிமை உடையவன். அதனை இந்த அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியல் கைதிகளின் விடுதலை, நில விடுவிப்பு தொடர்பில் எமக்கு தந்த வாக்குறுதிகளை அரசாங்கம் மீறியுள்ளது.

குறிப்பாக பொருத்து வீட்டை கொண்டுவந்து தமிழர்களையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினையும் பிரிக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இதுமட்டுமல்லாமல் கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் வடக்கு மாகாண சபையினை இயங்க விடாமல் அரசாங்கம் முடக்குகின்றது.

இவற்றை வைத்து பார்க்கும் போது பிரச்சினையை தீர்க்காமல் மேலும் வெவ்வேறு பிரச்சினைகளை தோற்றுவிப்பதில் அரசாங்கம் முனைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளிலும் அப்போது இருந்த அரசாங்கம் பயன்படுத்திய யுத்திகளை இந்த அரசாங்கமும் கையாண்டு வருகின்றது.

தீர்வினை முன்வைக்காமல் காலத்தை இழுத்தடிக்கும் முழு முயற்சியில்தான் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இதிலும் நாங்கள் தோற்றுப் போனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திர தோல்வியை அடைந்திருக்கன்றதுஎன்பதுதான்உண்மை.

நாங்கள் தோல்வியை எதிர்கொள்ள முடியாது.வெல்வதற்கான முழு முயற்சி களையும் மேற்கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# ஐரோ. ஒன்றியத்தின் இரு நிபந்தனைகளை ஜனாதிபதி நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளப் பெற்றுக் கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 6.1.1 மற்றும் 6.1.8 ஆகிய இரண்டு பரிந்துரைகளுக்கும் எவ்வாறான தொரு சூழ்நிலையிலும் இணங்க முடியாதென உறுதியாக மறுப்புத் தெரிவித்துள்ள ஜனாதிபதி அவற்றை செயற்றிட்டத்திலிருந்து நீக்கிவிடுவதற்கு தீர்மானித்துள்ளார்.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு முன்வைக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பரிந்துரைகள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் பைசர் முஸ்தபா தலைமையில் விசேட குழுவொன்றை ஜனாதிபதி நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது நியமித்துள்ளார்.

செயற்றிட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் நேற்று முன்தினம் இலங்கையின் நிலைப்பாட்டினை அறிவிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் கோரியிருந்தது.

எனினும் இலங்கை இன்னும் நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. ஜனாதிபதி நியமித்த குழுவின் இறுதி முடிவுக்கமைய இணங்கக் கூடியவை மற்றும் இணங்க முடியாதவை பற்றி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தெளிவாக எழுத்து மூலம் அறிவிப்போம் என்று அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.(இ-3)

# இடையூறுக்கு வருந்துகிறோம் மகிந்தவிடம் கவலை வெளியிட்ட அதிகாரிகள்

மலேசியாவில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொள்ளச்சென்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக புலம் பெயர் தமிழர்களினால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளுக்காக மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் நேரில் சந்தித்து கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த மாநாட்டின்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யுத்தத்திற்கான உத்திகள் மற்றும் பொருளாதார மேம்பாடு குறித்து தெரிவிக்கப்பட்ட யோசனைகளை கையாளப்போவதாகவும்குறித்த குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஆசிய வலய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் சர்வதேச சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் சுங் ஈ யோங் மற்றும் கொரியா நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரான லீ ஹை ஹுன் ஆகிய இருவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் காலை கொழும்பு - விஜேராமவில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம் பெற்றது.

மலேசியாவில் ஆசிய வலய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் சர்வதேச சம்மேளனத்தின் கடந்த மாதம் 9 ஆவது மாநாடு நடைபெற்றது.

இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவர் தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த குழுவினர் கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்த போது வெளியேறல் பகுதியில் புலம்பெயர் தமிழர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போது மலேசியாவில் ஏற்பட்ட இடையூறுக்கு குறித்த பிரதிநிதிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை குறித்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கையும் இதன்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான ஜீ.எல்.பீரிஸும் கலந்து கொண்டிருந்தார். (இ-3)

# இலங்கையிலும் இந்தியப் பெருங்கடலிலும் பாதுகாப்புக் கரிசனைகளை ஆபத்துக்குள்ளாக்கக்கூடாது



## அமைச்சர் பொன்சேகா வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கையிலும் இந்தியப் பெருங்கடலிலும் இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகளை ஆபத்துக்குள்ளாக்கக் கூடாது என்று அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

டில்லியில் நடைபெறும் இரண்டாவது ரைசினா கலந்துரையாடலில் பங்கேற்க இரண்டு நாள் பயணமாக இந்தியா சென்றுள்ள சரத் பொன்சேகா நேற்று ஏஎன்ஐ செய்திச் சேவைக்கு கருத்து வெளியிடுகையில்,

"இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் புவிசார் அரசியலை ஆபத்துக்குள்ளாக்கக் கூடாது. இந்தியா ஒரு பிராந்திய சக்தி. முக்கியமான வல்லரசு.

பாதுகாப்பு விவகாரங்கள் என்று வரும் போது, இந்தியா இந்தப் பகுதியின் பிராந்திய சக்தியாக விளங்குகிறது.

இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகளையும், உணர்வுகளையும் ஆபத்துக்குள்ளாக்க முடியாது. இலங்கை இதனை உணர்ந்துள்ளது.

எனவே, ஏனைய நாடுகளுடன் இலங்கை இணக்கப்பாடுகளை எட்டும் போது, இந்தியாவை இக்கட்டான நிலைக்குள் இட்டுச் செல்ல வேண்டாம் என்று உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தியா பிராந்திய சக்தியாகவும், முக்கியமான வல்லரசாகவும் இருக்கிறது. எனவே, உலகின் ஏனைய சக்திவாய்ந்த நாடுகள் இந்தப் பகுதிக்கு நகரும் போது, இந்தியா தனது பாதுகாப்புக் குறித்து மிகவும் கரிசனை கொள்ளும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அம்பாந்தோட்டை விடயத்தில் ஒரு விசித்திரமான நிலை உள்ளது. அந்த திட்டங்களினால் எமது நாடு சீனாவுக்கு மிக மோசமான கடனாளியாகி விட்டது. அந்த திட்டங்களால் நாட்டுக்கு நன்மை கிடைக்கவில்லை. ஏனென்றால் அதில் நிறைய ஊழல்கள் இடம்பெற்று விட்டன.

எமது பக்கத்தில் சீனாவுடன் உடன்பாடு செய்தவர்கள், தமது பணியை உண்மையுடன் செய்யவில்லை. பெருமளவு பணம் விளையாடி விட்டது. இதனால் தேசிய நெருக்கடி எமக்கு ஏற்பட்டது.

எல்லா நாடுகளுடனும் நட்புறவை பேணிக்கொள்வதே இலங்கையின் எண்ணம். நாம் ஒரு சிறிய நாடு. வரலாற்று ரீதியாக எல்லா நாடுகளுடனும் சுமுகமான உறவுகளை பேணி வந்திருக்கிறோம். பெரிய நாடுகள் எமது நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# சீன ஜனாதிபதியுடன் பிரதமர் சந்திப்பு இலங்கையில் சீன முதலீடுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினாராம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நேற்று முன்தினம் உலக பொருளாதார மாநாட்டின் தொடக்க நிகழ்வுக்கு முன்னதாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது இலங்கையில் சீனாவின் முதலீடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறிப்பாக, அம்பாந்தோட்டை துறைமுகம், கைத்தொழில் முதலீட்டு வலயம் மற்றும், கொழும்பு நிதி நகரத் திட்டம் என்பன தொடர்பாகவும், இவை தொடர்டபாக எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தும், சீன ஜனாதிபதியிடம் பிரதமர் பேச்சு நடத்தினார்.

எதிர்கால முதலீடுகள் தொடர்பாகவும் சீன ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக பிரதமர் செயலகத் தகவல்கள் கூறுகின்றன.

இதற்கிடையே டாவோசில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய உலக பொருளாதார மாநாட்டில் 40 நாடுகளின் .3000 பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள பல்வேறு உலகத் தலைவர்களையும் பிரதமர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்த திட்டமிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை டாவோசில் சந்திக்க பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் திட்டமிட்டுள்ளதாக, பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-3)

# சிறைக்குள் இரவிரவாக நூல் எழுதுகிறார் விமல்

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச நூல் ஒன்றை எழுதி வருகின்றார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அமைச்சராக விருந்த போது அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக விமல் வீரவன்ச மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அண்மையில் கைது செய்யப்பட்ட விமல் வீரவன்ச தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நாள்தோறும் நள்ளிரவு 12 மணி வரையில் கண் விழித்து நூல் எழுதும் பணிகளில் விமல் வீரவன்ச ஈடுபட்டு வருகின்றார்.

கிடைத்துள்ள ஓய்வில் தாம் நூல் எழுதி வருவதாகவும் இதுவரையில் 24 பக்கங்கள் எழுதி முடித்துள்ளதாகவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். சிறையிலிருந்து விடுதலையானதும் தாம் இந்த நூலை அச்சிட்டு வெளியிட



தீர்மானித்துள்ளதாக வீரவன்ச தெரிவித்தார். (இ-3)

## இன்று ஒரு தகவல்

### ஹொஸ்டலாவது

ஹொஸ்டலில் பிள்ளைகளைக் கொண்டு போய்த் தள்ளுவதில் சில பெற்றோருக்கு ஏனோ பரம ஆனந்தம். விட்டது பிரச்சினை என்று நினைக்கிறார்கள்.

நல்ல கல்விக்காகவும் குடும்பத்தில் ஏற்படும் சில நிர்ப்பந்தச் சூழ்நிலைகளின் காரணமாகவும் ஹொஸ்டலில் சேர்க்கப்பட்டால் அதில் தவறு இல்லை.

மிகச்சிறந்த ஹொஸ்டல்களும் மிகச்சிறந்த வார்டன்களும் எங்கும் உண்டு. மறுக்கவில்லை. ஆனால் ஹொஸ்டலைக் கூடிய வரை தவிர்ப்பது நல்லது.

பல ஹொஸ்டல் மாணவ–மாணவியின் பெற்றோரையும் உடன் பிறந்தவர்களையும் பாசத்துடன் தேடிக்கொண்டாலும் பொதுவான குடும்பப்பற்று என்பது குறைந்து போகிறது. நண்பர்கள் அல்லது தோழிகள் தாம் சிறந்தவர்கள். அவர்கள் மத்தியில் வாழ்வதுதான் சுவையானது என்ற எண்ணம் இவர்களுக்குள் படிந்துவிடுகிறது.

இதனால் இவர்கள் உடலால் மட்டுமல்ல, உணர்வாலும் பிரிந்தே வாழ்கிறார்கள்.

வேண்டாவெறுப்பாக ஹொஸ்டலில் போய்ச் சேரும் ஆண்கள் அல்லது பெண்கள்கூட நாளடைவில் ஹொஸ்டல் சூழ்நிலை பிடித்துப் போய்விடவே ஏதோ படிப்புக்காகவே ஹொஸ்டலில் தங்கிப் படிக்கிறேன் என்று காண்பித்துக்கொள்வதுண்டு. கொஞ்சம் கிளறிப் பார்த்தால் தான் இவர்கள் ஹொஸ்டலுக்காகவே படிப்பைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்ற உண்மை தெரியவரும். ஹொஸ்டலில் தங்கிப் படித்தவர்கள் திரும்ப ஹொஸ்டலுக்குப் போவதற்குத் தயங்குவதே இல்லை.

ஹொஸ்டலில் சுதந்திரமாக இருக்க முடிகிறது. பெரும்பாலும் கட்டுப்பாடு இல்லை. அதட்டவும் கண்டிக்கவும் குறைகளைச் சுட்டிக்காட்டவும் ஆள்குறைவு. இந்தச் சுதந்திர உணர்வில் இவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். வீட்டுக்குத் திரும்பியதும் யார் எதைச் சொன்னாலும் அது அவர்களுக்கு வேம்பாக இருக்கிறது. சுதந்திரம் பறிபோகிறது என்று நினைக்கிறார்கள், வெறுக்கிறார்கள், விலகுகிறார்கள். கைநிறையக் காசு கிடைக்கிறது. சம்பாதிக்கத் தொடங்கு முன்னே இஷ்டத்திற்குச் செலவழிக்க முடிகிறது. அருமை தெரிந்து செலவழிப்பவர்கள் சிலரே. குறிப்பாக ஆண்கள் விரும்பியோ, விரும்பாமலோ தீய வலைகளில் விழுந்துவிட ஹொஸ்டல்களில் தாம் வாய்ப்பு அதிகம்.

தன்னம்பிக்கை வளரும். சுயமாய் இயங்க முடியும் என்ற சப்பைக்கட்டுகள் கட்டப்பட்டாலும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் பிள்ளைகள் பெற்றோரின் கண்ணெதிரில் வளர்வதுதான் அவர்களது எதிர்காலத்திற்கு நல்லது என்று படுகிறது. பிள்ளைகள் எனும் கறிவேப்பிலைக் கன்றுகளைச் சூழ்நிலை மாடுகள் மேய்ந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது பெற்றோர் பொறுப்பு.

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புகள்






## 'அமைச்சரை நீக்குங்கள்... ஆட்சியை கலையுங்கள்!'- ஜெயலலிதா!

நாவலாசிரியர் ஸ்காட் இவ்வாறாகச் சொல்வார், "ஒரு தோல்வியை யாரும் இறுதித் தோல்வியாக நினைத்துக் குழப்பிக்கொள்ளக் கூடாது" என்று. புத்தகப் புழுவான ஜெயலலிதா, ஸ்காட்டின் நாவல்களைப் படித்தாரா அல்லது அதில் இந்த வார்த்தைகளைக் கடந்துவந்தாரா என்றெல்லாம் தெரியவில்லை. ஆனால், இந்த வார்த்தைகளை மனதில் நிறுத்தினார். "தோற்று இருக்கிறோம்... அதுவும் அவமானம் தரும் படுதோல்வி. ஆனால், நிச்சயமாக மீண்டும் எழுவோம்" என்று நம்பினார். அந்த நம்பிக்கையில் காய்களை நகர்த்தினார். சூழலும் அவருக்குச் சாதகமாக அமைந்தது. ராஜீவ் படுகொலையைப் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட எம்.சி.ஜெயின் கமிஷனின் அறிக்கை 1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கசிந்தது. அதில் தி.மு.க. அரசின் அஜாக்கிரதையால்தான் ராஜீவ் படுகொலைக்குக் காரணம் என்பது போன்ற வாசகங்கள் இடம்பெற்று இருப்பதாக செய்திகள் பரவின. இது, தி.மு.கவை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அ.தி.மு.கவை குதூகலம் கொள்ளச் செய்தது. அந்தச் சமயத்தில் ஐக்கிய முன்னணியின் ஆட்சி மத்தியில் இருந்தது. ஐ.கே.குஜரால் பிரதமராக இருந்தார். அமைச்சரவையில் தி.மு.கவும் இருந்தது. காங்கிரஸ் வெளியிலிருந்து ஐக்கிய முனணிக்கு ஆதரவளித்து வந்தது. ஜெயின் கமிஷன் அறிக்கை கசிந்ததுமே... காங்கிரஸ் கட்சி, 'மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.கவை நீக்கவேண்டும்' என்றது. மெலிதாக எழுந்த குரல்... ஓரிரு நாட்களில் உஷ்ணமாகியது. 'தி.மு.கவை நீக்காவிட்டால், ஐக்கிய முன்னணி அரசுக்கு நாங்கள் அளித்துவரும் ஆதரவை வாபஸ் பெறுவோம்' என்ற அளவுக்குச் சென்றது. ஜெயலலிதா உற்சாகமானார்... தமிழகத்திலிருந்து அவரும் இதற்காக உரக்கக் குரல் கொடுக்கத் தொடங்கினார். ஆனால், கருணாநிதி அமைச்சரவையிலிருந்து வெளியே வரவில்லை. "நாமாக வெளியே வந்தால், ஜெயின் கமிஷன் அறிக்கையை ஒப்புக்கொண்டதுபோல் ஆகிவிடும். வேணடுமானால், அவர்களே நம்மை வெளியே அனுப்பட்டும்" என்று அமைதி காத்தார். ஆனால், காங்கிரஸ் விடுவதாக இல்லை. அழுத்தம் மேல் அழுத்தம் கொடுத்தது. குஜரால், நான்கு நாட்கள் காத்திருந்து பார்த்தார்... நிலைமை சீராகும் என்று நினைத்தார். ஆனால், எதுவும் நிகழ்வதுபோலத் தெரியவில்லை. அவர், தன் பதவியை இராஜினாமா செய்தார். அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கு இந்தியாவே தயார் ஆனது.

**'கூட்டணி கணக்கு!'**

"தமிழகத்தில் நாம் ஆட்சியில் இல்லை... ஆட்சி, இல்லாமல் போனாலும் பரவாயில்லை... சொல்லிக் கொள்ளும் எண்ணிக்கையில் எம்.எல்.ஏக்களும் இல்லை. தன்னை வீழ்த்துவதற்காக தி.மு.க. அனைத்து அஸ்திரங்களையும் ஏவுவதற்குத் தயாராக இருக்கிறது. மத்தியில் ஒரு வலுவான ஆட்சி... அந்த ஆட்சியில் அமைச்சர் பதவி. இது இருந்தால்தான் தன்னைக் தற்காத்துக் கொள்ள முடியும்" என்று நினைத்த ஜெயலலிதா, கூட்டணிக்காகத் தேர்ந்தெடுத்தது பா.ஜ.கவை.

"திராவிட அரசியலாவது... சித்தாந்தமாவது? எம்.ஜி.ஆர். தோற்றுவித்த கட்சியைக் காக்க வேண்டாமா..." - யாராவது கேள்வி எழுப்பினால்... இந்தப் பதிலை சொல்வதற்குத் தயாராகத்தான் இருந்தார். ஆனால், இந்தக் கேள்வியைக் கேட்கும் தைரியம் கட்சியில் யாருக்கும் இல்லை. பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்து சூறாவளி பிரசாரம் மேற்கொண்டார். மக்களைச் சந்தித்தார். "பாருங்கள்... என் மீது பொய் வழக்குப் போட்டு, என்னை அலைக்கழிக்கிறார்கள். என்னை 28 நாட்கள் கொடுஞ்சிறையில் வைத்தார்கள்..." என்று சிறை அனுபவத்தைச் சொல்லி வாக்குக் கேட்டார். மக்கள் 10,000 புடைவைகள், 250 ஜோடி செருப்புகள் என அனைத்தையும் மறந்தார்கள். மக்களுக்கு மீண்டும் ஜெயலலிதா மீது இரக்கம் ஏற்பட்டது.

பெப்ரவரி மாதத்திலும் சூடு பறக்க பிரசாரம் நடந்து கொண்டிருந்தது. தேசிய அளவில் பி.ஜே.பியும், விஸ்வரூபம் எடுத்து நின்றது. 1998ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி.. லால்கிஷன் அதவானி, கோவைக்கு பிரசாரத்துக்குத் தாமதமாக வந்தார். ஆம்... நல்ல வேளையாக தாமதமாக வந்தார். அத்வானி பேசுவதாக இருந்த இடத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில், அவர் வருவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு ஒரு குண்டு வெடித்தது. மக்கள் சுதாரிப்பதற்குள் அடுத்தடுத்து காந்திபுரம், பெரியகடைத் தெரு, ரயில்வே ஸ்டேஷன் என குண்டுகள் வெடித்தன. ஏறத்தாழ 50 பேர் இறந்தனர். குண்டுவெடிப்பு சம்பவம் தி.மு.கவை ஆட்டம் காணச் செய்தது. ஏற்கனவே நிகழ்ந்த குண்டுவெடிப்புதான், இப்போதைய தேர்தலுக்குக் காரணம். மீண்டும் குண்டு வெடிப்பா என தி.மு.க., இதை எதிர்கொள்ள முடியாமல் தவிக்க... ஜெயலலிதா கோவைக்கு வந்தார்... தி.மு.கவை சரமாரியாக விமர்சித்தார். தன ஆட்சியில், 'அமைதிப் பூங்காவாக' இருந்த தமிழகத்தை... கருணாநிதி 'தீயவர்களின் புகலிடமாக' மாற்றிவிட்டார் என்று பிரசாரம் செய்தார். இது, நன்றாக வேலை செய்தது. அந்தத் தேர்தலில் அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணி 30 இடங்களைக் கைப்பற்றியது.

**'மூச்சடைக்கும் அழுத்தம்!'**

ஜெயலலிதா கைப்பற்றியது 18 இடங்கள். பா.ஜ.கவுக்கு, மத்தியில் ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும



பான்மையில்லை. பா.ஜ.க., அ.தி.மு.கவை நம்பி ஆட்சி அமைத்தது. அ.தி.மு.க கேட்ட அமைச்சர் பதவிகளைக் கொடுத்தது. இது, ஜெயலலிதாவுக்கு புதுத்தெம்பைக் கொடுத்தது. பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் வரை பொறுமை காத்த ஜெயலலிதா... சில தினங்களில் பிரதமர் வாஜ் பாய்க்கு நிர்பந்தம் கொடுக்கத் தொடங்கினார். அவர் கொடுத்த முதல் அழுத்தம் கருணாநிதி ஆட்சியை கலைக்க வேண்டுமென்பது. பா.ஜ.க. வாயடைத்துப் போனது. என்ன செய்வதென்று தெரியாமல், பா.ஜ.க தலைமை திணறிக்கொண்டிருக்க... ஜெயலலிதா எதைப் பற்றியும் யோசிக்காமல், வரிசையாக கோரிக்கைகளை அடுக்கிக்கொண்டே போனார். ராமகிருஷ்ண ஹெக்டேவை... பூட்டா சிங்கை... ராம் ஜெத்மலானியை... ஜார்ஜ் ஃபெர்னாண்டஸை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும். நான் சொல்லும் ஆட்சிப் பணியாளர்களைத்தான் தமிழகத்தில் நியமிக்க வேண்டும் கடற்படைத் தலைமை அதிகாரியை மாற்றக்கூடாது என மூச்சடைக்கும் அளவுக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டே போக... பா.ஜ.கவுக்கு மூச்சு முட்டியது. ஜெயலலிதா, "லக்ஷ்மண ரேகையைத் தாண்டுகிறார்" என்றனர் சங் பரிவாரங்கள்.

ஜெயலலிதா, அது குறித்தெல்லாம் கவலைப்படவில்லை. பா.ஜ.க. இறங்கிவந்து பூட்டா சிங்கை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியது... அவர் கேட்ட ஆட்சிப் பணியாளர்களைத் தமிழகத்துக்கு அனுப்பிவைத்தது. பா.ஜ.க. கீழே இறங்கி வரவர... ஜெயலலிதா உச்சாணிக் கொம்புக்கே சென்றார். ஃபெர்னாண்டஸை நீக்க வேண்டும்... கருணாநிதி ஆட்சியை கலைக்க வேண்டும் என்று மீண்டும் அழுத்தம் கொடுக்கத் தொடங்கினார். ஆனால், வாஜ்பாய் உறுதியாக மறுத்துவிட்டார்.

பா.ஜ.கவை அச்சுறுத்த வேண்டும் என்பதற்காகவே.... சுப்பிரமணிய சுவாமி ஒருங்கிணைத்த தேநீர் விருந்துக்குச் சென்றார். அதில், முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரும் கலந்துகொண்டனர். குறிப்பாக சோனியாவும். அதன் பின்பும் பா.ஜ.க. இறங்கி வர மறுத்தது.

1999ஆம் ஆண்டு... ஜெயலலிதா, வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க கட்சிக்கு அளித்துவந்த ஆதரவை வாபஸ் வாங்கினார். நம்பிக்கை வாக்கெடுப்பு கொண்டு வரப்பட்டது. அதில், ஒற்றை வாக்கு வித்தியாசத்தில் பா.ஜ.க. தோல்வி அடைந்தது. இதைப் பயன்படுத்தி காங்கிரஸ், ஆட்சியைக் கைப்பற்றத் துடித்தது. ஆனால், அதற்கும் போதுமான இடங்கள் இல்லை.

மீண்டும் ஒரு பாராளுமன்றத் தேர்தலுக்குத் தமிழகம் தயாரானது!

(தொடரும்)

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு சுதந்திரக்கட்சி அஞ்சுகிறது

## கூட்டு எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு அஞ்சுகின்றது என கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைக்கும் தேவை ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாது.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சித் தரப்பே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைக்க வேண்டுமென விரும்புகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் நடத்தப்பட வேண்டுமென விரும்புகின்றது.

எனினும் சுதந்திரக் கட்சி தோல்வியடையும் என்பதனை நன்கு உணர்ந்து கொண்டுள்ளது. எந்த தரப்பு வெற்றியீட்டினாலும் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி தொடர்ச்சியாக போராட்டம் நடத்துவோம். உள்ளூராட்சி மன்றத்தேர்தலை ஒத்தி வைப்பது இந்த நாட்டு மக்களுக்கு இழைக்கும் பாரிய அநீதியாகும்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சில உள்ளூராட்சி மன்றங்களை ஆணையாளர் அல்லது செயலாளர் நிர்வாகம் செய்து வருகின்றார். அரசியல் நிர்வாகத்திற்கு உட்பட்ட நிறுவனங்கள் இவ்வாறு நிர்வாகம் செய் யப்படுவது நியாயமற்றது.

இது தொடர்பில் நாடு முழுவதிலும் கூட்டங்கள் நடத்தி மக்களை தெளிவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். (இ-3)

## தடை செய்யப்பட்ட சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

ஹற்றன் நகரத்தில் கடை ஒன்றில் தடை செய்யப்பட்ட சிகரெட்டுகளை சட்டவிரோதமாக விற்பனை செய்த நபர் நேற்று முன்தினம் இரவு 7.40 மணியளவில் ஹற்றன பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தடை செய்யப்பட்ட சிகரெட்டு களை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலையடுத்து ஹற்றன் பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பரிசோதகர் எம்.பிரதீப் தலைமையிலான குழு ஒன்று இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில இவை கைப்பற்றப்பட்டுள்ளன. இதன் போது 682 தடை செய்யப்பட்ட சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.(இ-3)

## ரயர் உற்பத்திச்சாலை நிர்மாணப் பணிகள் ஜனாதிபதியின் உத்தரவால் இடைநிறுத்தம்



ஹொரணை ரயர் உற்பத்திச்சாலை நிர்மாணப் பணிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுவிட்சர்லாந்துக்கு விஜயம் செய்துள்ளார்.

பிரதமர் நாடு திரும்பும் வரையில் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு அமைய ஹொரணையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பாரியளவிலான ரயர் உற்பத்திச்சாலையின் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த ரயர் உற்பத்திச் சாலைக்கான காணி வழங்குதல் நடைமுறைகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள சில சலுகைகள் தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இதன் காரணமாக நிர்மாணப் பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இந்த ரயர் உற்பத்திச் சாலைக்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## உயிராபத்து உள்ள காரணத்தால் தான் பொது வேட்பாளரை அறிவிக்கவில்லை

### வெளிப்படுத்தினால் உலகமே பைத்தியமாகும்; உதய கம்மன்பில கூறுகிறார்



அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது வேட்பாளரை தாம் முன்வைக்கவுள்ளதாகவும், அவ்வாறு முன்வைப்பதனால் அவருடைய பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லாது போகும் என்ற அச்சம் காரணமாகவே தாமதித்து வருவதாகவும் தூய ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எம்மிடம் ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது வேட்பாளர் ஒருவர் தீர்மானமாகியுள்ளார். தேர்தல் அறிவிக்கப்படும் வரையில் அவரை நாம் வெளிப்படுத்தமாட்டோம். உலகமே பைத்தியமாகும் ஒரு பொது வேட்பாளர் எம்மிடமுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-3)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 962

Search for people, places and things Nagendram Home

ராதை





வானுசா




ரதன்




வினிதா



கிரிசாந்




நதி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வெள்ளை மாளிகையை விட்டு வெளியேற ஆயத்தமாகுங்கள்

## ஒபாமாவுக்கு வடகொரியா அறிவுறுத்து



மனித உரிமை தொடர்பாக பேசி பொழுதை கழிக்காமல் மூட்டை முடிச்சை 'பேக்' செய்துகொண்டு வெள்ளை மாளிகையை விட்டு புறப்படுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை வடகொரியா அறிவுறுத்தியுள்ளது.

உலக நாடுகளின்தடையை மீறி அணு ஆயுதங்களையும், கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் தயாரித்தும், பரிசோதித்தும் வரும் வடகொரியா மீது பொருளாதாரம், ஏற்றுமதி - இறக்குமதி, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு தடைகளை விதித்துள்ளது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் இன் சகோதரி யோ ஜாங் உட்பட 7 தனிநபர்கள் மீது அமெரிக்க நிதி அமைச்சகம் கடந்த வாரம் பொருளாதார தடை விதித்தது. உலகிலேயே மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதற்காக இந்த தடை விதிக்கப்படுவதாக அமெரிக்க அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு பதில் அளிக்கும் வகையில் வடகொரியா அரசால் நடத்தப்படும் பிரபல செய்தி நிறுவனம் அமெரிக்க ஜனாதிபதியை கேலி செய்யும் விதமாக ஒரு கருத்தை நேற்றுப் பதிவு செய்துள்ளது.

'மற்றவர்களின் மனித உரிமை தொடர்பாக பேசி பொழுதை கழிக்காமல்மூட்டை முடிச்சை 'பேக்' செய்துகொண்டு வெள்ளை மாளிகையை விட்டு புறப்படும் வேலையில் கவனம் செலுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு யாராவது அறிவுரை கூற வேண்டும்.

தனது ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவில் மிக மோசமான மனித உரிமை மீறல்களை உருவாக்கிய ஒபாமா, ஏராளமான அமெரிக்கர்களுக்கும் உலகில் உள்ள பிற மக்களுக்கும் ஏற்படுத்திய வலிக்காகவும், துரதிர்ஷ்டத்துக்காகவும் வருத்தப்பட வேண்டும்' என அந்த செய்தி நிறுவனம் வெளியிட்ட ஒரு கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

## போராட்டங்களால் போக்குவரத்து பாதிப்பு



(சென்னை)

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக ஏராளமான இளைஞர்கள் சென்னை மெரினா கடற்கரையில் ஒன்றிணைந்து போராடுவதால் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால், வாகன சாரதிகளும், பொது மக்களும் அவதிப்பட்டனர்.

கடற்கரையைச் சுற்றியுள்ள சாலைகளான திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, பைகிராப்ட்ஸ்சாலை, சிவானந்தாசாலை, வாலாஜா சாலை, பெல்ஸ்சாலை, ஐஸ்ஹவுஸ் ரோடு உள்ளிட்ட சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல்காணப்பட்டது. முதன்மைச் சாலைகள் மட்டுமல்லாமல் கிளைசாலைகளிலும் நெரிசல் ஏற்பட்டது.

இதனால், கடற்கரை சாலையை நோக்கி வரும் பேருந்துகளும், அண்ணா சதுக்கத்தில் இருந்து செல்லும் பேருந்துகளும், கார், பைக் உள்ளிட்ட வாகனங்களும் நீண்ட வரிசையில் நின்றன. இதனால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அப்பகுதியைக் கடந்து செல்லவே சுமார் ஒரு மணி நேரம் காலதாமதம் ஏற்பட்டது.

குறிப்பாக காமராஜர் சாலையில் நீண்ட தூரத்துக்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன. வாகனங்கள் ஊர்ந்து சென்றதால் வேலைக்கு சென்று வீட்டுக்குத் திரும்புவோர் அவதிப்பட்டனர். சில இடங்களில் வாகன சாரதிகள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டனர். (இ-3)


## ஒபாமாவின் கடைசி பரிசு-209 கைதிகளுக்கு தண்டனை குறைப்பு - 64 பேருக்கு மன்னிப்பு

அமெரிக்க ஜனாதிபதி பதவியில் இருந்து விலகும் பராக் ஒபாமா சிறையில் அடைக்கப்பட்டுள்ள 209 கைதிகளின் தண்டனை காலத்தை குறைத்தும் 64 பேருக்கு மன்னிப்பு வழங்கியும் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கவுள்ள 20 ஆம் திகதிக்குள் வெள்ளை மாளிகையை விட்டு ஒபாமா வெளியே செல்ல வேண்டும் என்ற நிலையில் பல்வேறு குற்றங்களில் கைதாகி சிறையில் தண்டனை கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ள 209 கைதிகளின் தண்டனை காலத்தை குறைத்தும் 64 பேருக்கு மன்னிப்பு வழங்கியும் நேற்று ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறை பதவி ஏற்ற பராக் ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் இதுவரை 1385 கைதிகளின் தண்டனை காலத்தை குறைத்தும், 212 பேருக்கு மன்னிப்பு வழங்கியும் அவர் உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜல்லிக்கட்டை நடத்த வலியுறுத்தி பாம்பன் பாலத்தில் ஆர்ப்பாட்டம்



தமிழகத்தில் ஜல்லிக்கட்டை நடத்த வலியுறுத்தி பாம்பன் ரயில் பாலத்தில் நேற்று புதன்கிழமை திடீர் ரயில் மறியலில் ஈடுபட்ட தமிழக வாழ்வுரிமை கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடைபெற வேண்டும். பல்வேறு ஊர்களில் போராட்டம் நடைபெற்று வருகிறது. இளைஞர்கள் பலரும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டு வருகிறார்கள். இளைஞர்கள் ஒன்றுகூடி நடத்தும் இப்போராட்டத்துக்கு தமிழ் திரையுலகினர், விளையாட்டு வீரர்கள் பலரும் ஆதரவு தெரிவித்து வருகிறார்கள்.

நேற்று புதன்கிழமை காலை 8 மணியளவில் பாம்பன் ரயில் பாலத்தில் தமிழக வாழ்வுரிமை கட்சியின் மாநில இளைஞர் அணிச் செயலாளர் ஜெரோன்குமார் தலைமையில் முருகானந்தம், செல்வா திருமுருகன், மன்மதன், குட்டிமணி, பாலு ஆகிய ஏழு பேர் கட்சியின் கொடிகளுடன் திடீர் ரயில் மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் மதுரையிலிருந்து ராமேஸ்வரத்திற்கு இயக்கப்படும் பயணிகள் ரயில், மண்டபம் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. பின்னர் ரயில் மறியலில் ஈடுபட்டோரை பாம்பன் பொலிஸார் கைது செய்ததும் அரை மணி நேரம் தாமதமாக பயணிகள் ரயில் மண்டபம் ரயில் நிலையத்தில் இருந்து ராமேஸ்வரம் புறப்பட்டுச் சென்றது.

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி ராமேஸ்வரத்தில் முற்பகல் 11 மணியளவில் தமிழர் தேசிய முன்னனியின் பொதுச் செயலாளர் கண். இளங்கோ தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. (இ-3)

## வீடியோவை பார்த்து 'ஜெ' ஐ பின்பற்றும் தீபா



ஜெயலலிதா மறைவுக்குப் பின் அவரைப் போலவே உடையணிவது, பொட்டுவைப்பது, இரட்டை விரலை உயர்த்திக் காட்டுவது, அவர் பயன்படுத்திய காரை பயன்படுத்துவது, நாற்காலியைப் பயன்படுத்துவதுஎனசசிகலாதன்னை, அச்சு அசலான ஜெயலலிதாவாக மாற்றிக் கொள்ளும் முயற்சியில் இறங் கியுள்ளார்.

ஆனால், தோற்றத்தில் வேறுபாடுகள் இருப்பதால், சசிகலாவுக்கு அது முழுமையாகப் பொருந்தவில்லை.

இருந்தாலும் அவர்தன்னை ஜெயலலிதாவாகவே நினைத்துக் கொண்டு, அதை செய்து வருகிறார். இதற்காக, தனியாக மேக்கப் பெண்களை நியமித்துக் கொண்டிருக்கும் சசிகலா, தினந்தோறும் அவர்களை வைத்து, மேக்கப் போட்டுக் கொண்ட பின்பே, கட்சி அலுவலகம் உள்ளிட்ட வெளியிடங்களுக்கு செல்கிறார்.

இந்நிலையில், ஜெயலலிதாவின் உருவத்தை ஒத்து இருக்கும் அவரது அண்ணன் மகள் தீபாவும், இதே பாணியை செயற்படுத்தத் தொடங்கி இருக்கிறார்.

இதற்காக, ஒரு வார காலமாக, சென்னை தி.நகர் இல்லத்தில், ஜெயலலிதாவாக தீபாவை மாற்றும் தீவிரத்தில் அழகு நிலையங்களில் பணியாற்றும் பெண்கள் களம் இறங்கினர்.

ஜெயலலிதா போலவே சேலை அணிந்து, கொண்டை போட்டு அவரைப் போலவே கையை உயர்த்தி இரட்டை இலையை காண்பிக்கும் உடல் அசைவை எல்லாம் ஜெயலலிதாவின் பழைய வீடியோ தொகுப்புகளைப் போட்டுப் பார்த்து, அதைப் போலவே கண்ணாடி முன் நின்று செய்து பார்த்துள்ளதாக அறியமுடிகின்றது. (இ-3)

## பிரதமருக்கு நடிகர் விஷால் கடிதம்

(சென்னை)

ஜல்லிக்கட்டு விவகாரம் தொடர்பாக நடிகர் விஷால் பிரதமர் மோடிக்கு திடீரென கடிதம் எழுதி உள்ளார்.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்க கோரி போராட்டங்கள் வலுத்து வருகிறது. மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என அனைவரும்தாமாக முன்வந்து போராட்டங்களில் கலந்து கொள்கின்றனர். இவர்களின் போராட்டங்களுக்கு நடிகர்களும் தங்களது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் தென்னிந்திய நடிகர் சங்க பொதுச்செயலாளர் விஷால் ஜல்லிக் கட்டு தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று கடிதம் எழுதியுள்ளார். அதில், ஜல்லிக்கட்டு தமிழர்களின் உரிமை என்று கூறியுள்ள விஷால், தடையை நீக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், இது சம்பந்தமாக நேரில் பேச தனக்கு நேரம் ஒதுக்கித் தர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மன்னாரில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளுக்கு நேற்று முதல் தடை விதிப்பு

## மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை - கடற்றொழில் திணைக்களம் அறிவிப்பு

(மல்லாவி )

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி மீன் பிடிக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் நேற்று புதன் கிழமை முதல் தடை செய்யப்பட்டு உள்ளதாக மன்னார் கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் மாவட்டத்தில் கட்டு வலை, சுருக்குவலை உள்ளிட்ட பல்வேறு தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி மீனவர்கள் தொடர்ச்சியாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலையில் மீனவர்களின் நலனை கருத்தில் கொண்டு தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி மீன் பிடிப்பதை நிறுத்துவதற்கு கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கால அவகாசம் வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் கடற்றொழில் திணைக்களத்தின் உத்தரவிற்கு



அமைய நேற்று புதன்கிழமை முதல் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி மீன் பிடிக்க தாங்கள் அனுமதிக்காத சட்டத்தை இறுக்கமான முறையில் கடைப்பிடிக்கவுள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளார்கள்.

இதனை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கடற்படை அறிவித்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் தமக்கு மேலும் கால அவகாசத்தை வழங்கினால் நாங்கள் மாற்றுத் தொழிலை கையாள முடியும் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வீடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரியுடன் தொடரபு கொண்டு வினவிய போது,

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி மீன்பிடிக்கும் மீனவர்களை குறித்த தொழிலை கைவிட இம்மாதம் 15 ஆம் திகதிவரை மீனவர்களின் நலனை கருத்தில் கொண்டு கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் நேற்று புதன் கிழமை முதல் மன்னார் மீனவர்களுக்கு தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமைகளை பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு கடற்படையும் தடை விதித்துள்ளதாக அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார். (2- 15)




# பாடசாலையின் தேவை பூர்த்தி



மடு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மன்/இரணை இலுப்பைக் குளம் கிராமத்தில் அமைந்துள்ள மடு கல்வி வலயத்திற்குட்பட்ட சின்னவலயன்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் நிழல் பிரதியிடும் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த பாடசாலையில் நிழல் பிரதியிடும் இயந்திரத்தின் தேவையே அதிகமாக இருந்தது. ஒரு வினாத்தாள் பிரதியிட வேண்டுமானால் பல கிலோ மீற்றர் பயணம் செய்து வவுனியா மாவட்டத்திற்கு சென்றே இதுவரை நிழல்பிரதிகளை எடுத்திருக்கின்றனர்.

இது தொடர்பாக வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சருக்கு எடுத்துக்கூறிய சந்தர்ப்பத்தில் மாணவர்களது கல்வி பாதிக்கப்படாமல் இருக்கவும் அதேநேரம் ஆசிரியர்களது சிரமங்களை குறைக்கும் நோக்கோடும் தனது 2016 ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து ஒதுக்கி நிழல் பிரதியிடும் இயந்திரம் நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர் சமூகத்திடம் உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார். (2)

# தனியார் காணியில் பொதுக்கிணறு அமையப்பெற்றமையால் மக்கள் விசனம்

## விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக வவுனியா நகரசபை செயலாளர் தெரிவிப்பு

வவுனியா, கோவில்குளம் கிராம மக்களுக்கு வழங்கப்பட்ட பொதுக்கிணறு தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியில் கட்டப்பட்டுள்ளதாக கிராம மக்கள் விசனம் வெளியிட்டனர்.

வவுனியா நகரசபையினரால் கோவில்குளம் கிராம மக்களுக்கு மாதர்சங்கத்தினூடாக வழங்கப்பட்ட 8 இலட்சம் ரூபா பெறுமதியான கிணறே தனியொருவரின் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த கிராம மக்கள், வவுனியா நகரசபையால் கோவில் குளம் கிராம மக்களுக்கு ஒரு பொதுக கிணறு தேவையென கோரிக்கை விடப்பட்டிருந்த நிலையில் நகர சபை செயலாளர் கிராமத்திற்கு கிணறு ஒதுக்கித்தருவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

அதன் பிரகாரம் மீண்டும் கிராம மக்கள் நகரசபை செயலாளரிடம் பொதுக்கிணறு வழங்குமாறு கோரியபோது கோவில்குளம் கிராமத்திற்கு மாதர் சங்கத்தினூடாக பொதுக்கிணறு வழங்கப்பட்டு விட்டது என பதிலளித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து மாதர் சங்கத்தை தொடர்புகொண்டு கிணறு குறித்து விசாரித்தபோது கிணறு தனியாருக்கு சொந்தமான காணியில் கட்டப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

இச்செயற்பாடு குறித்து கிராம மக்கள் கோவில்குளம் கிராம உத்தியோகத்தர் மறறும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் முறையிடப்பட்ட போதும் அதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென கிராம மக்கள் குற்றஞ்சாட்டினர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

எங்கள் கிராமத்திற்கான பொதுக் கிணறை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

இது தொடர்பில் வவுனியா நகர சபை செயலாளர் தெரிவிக்கையில்,

குறித்த கிணறு எம்மால் அமைக்கப்படவில்லை. இது தொடர்பில் எதுவித தகவலும் எமக்கு முன்னர் தெரியாது.

தற்போது தனியார் காணியொன்றில் குறித்த கிணறு அமைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. இது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (2-250)

# கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பழைய தரவுகளால் சலசலப்பு

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வறுமை தொடர்பில் ஆராயப்பட்ட போது மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 2012 ஆம் ஆண்டுக்குரிய புள்ளி விபரத் தகவல்களினால் சலசலப்பு ஏற்பட்டது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரதிநிதியுமான வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

தற்போது நாட்டில் நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக எதிர் வரும் மாதங்களில் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும் என்பதனால் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தினால் வரட்சியினால் ஏற்படும் பிரச்சினைகள், சவால்கள் மற்றும் அதனை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் அறிக்கை ஒன்றை அனுப்புவதற்காக விசேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தின் வறுமை தொடர்பில் ஆராயப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்ட புள்ளிவிபரத் தரவுகளில் கிளிநொச்சி மாவட்டத்தின் வறுமை 12.8 வீதம் எனவும், ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் போசாக்கு மட்டத்தில் இலங்கையில் கிளிநொச்சி மாவட்டம் 25 ஆவது இடத்தில் இருக்கிறது எனவும் வெளிப்படுத்தப்பட்ட போது கேள்வி எழுப்பிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் இந்தக் கணிபீடுகள் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது என வினவினார்.

அதற்கு பதிலளித்த மாவட்ட புள்ளிவிபரவியலாளர் பி.பாலச்சந்திரன்,

இங்கு காட்டப்பட்டுள்ள புள்ளி விபரங்கள் பழையது. அது 2012 ஆம் ஆண்டிக்குரிய தகவல்கள். தற்போது இதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் தகவல்களின்படி கிளிநொச்சி மாவட்டத்தின் வறுமை வீதம் 20.8 வீதமாக காணப்படுகிறது என்றும் குறிப்பிட்ட அவர்.

பிரதேச செயலக பிரிவுகளின் படி கரைச்சியில் 20.36 வீதமும், பச்சிலைப்பள்ளியில் 18.64 வீதமும், பூநகரியில் 22.71 வீதமும், கண்டாவளையில் 21.13 என வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வீதம் காணப்படுகிறது எனத் தெரிவித்தார். (2-312)







கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:-கிளிநொச்சி செய்தியாளர்)




# இரண்டு பாறைகள்!


ஒரு காட்டில் இரண்டு பெரிய பாறைகள் அருகருகே கிடந்தன.

பல வருடங்களாக ஒரே இடத் தில் மழையில் ஊறி, வெய்யி லில் வாடிக் கிடந்த அந்தக் கற்க ளுக்கு ரொம்பச் சலிப்பாக இரு ந்தது. 'நாம் எப்போதாவது இங் கிருந்து நகர்வோமா?' என்று மிகவும் ஏக்கத்தோடு பேசிக் கொண் டன.

அந்தக் காட்டுக்குப் பக் கத்தில் ஒரு நகரம். அங் கிருந்த மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கோவில் கட்டத் தீர்மானித்தார்கள்.

புதுக் கோவிலுக்கு மூல வர், உற்சவர், மற்ற சிலை கள் எல்லாம் வேண்டும ல்லவா? அதற்காக ஏழெட்டு சிற்பிகள் நியமிக்கப்பட்டா ர்கள். அவர்கள் சிற் பங் களைச் செதுக்குவதற்கான கற்களைத் தேடிக் காட்டுக்குள் வந்தார்கள்.

அவர்களில் ஒரு சிற்பி இந்தப் பாறைகளைக் கவ னித்தார். மற்றவர்களிடம் அவற்றைக் காண்பித்துச் சொன்னார். 'இந்தப் பாறைங்க ரெண்டும் சரியான அளவில இருக்கறமாதிரி தெரி யுது. நாளைக்கே ஆள் வெச்சுத் தூக்கிட்டுப் போயிடலாம்!'



சிற்பிகள் திரும்பிச் சென்ற பிறகு முதல் பாறை பேசியது. 'ஹையா ஜாலி ஜாலி! நம்ம பல நாள் கனவு நிறைவேறப் போகுது! நாளைக்கு நாம நகரத்துக்குப் போறோம்!'

இரண்டாவது பாறை கோப மாகச் சீறியது. 'அட மக்குப் பயலே! அவங்க உனக்கு நக ரத்தைச் சுத்திக்காட்டற துக்கா கூட்டிகிட்டுப் போறாங்க ன்னு நினைச்சே? உன்னை அடிச்சு உடைச்சு செதுக்கி, சிலையா மாத்திப்புடுவாங்க. தெரி யுமா?'

'அதுக்கு என்ன பண்றது? ஒண்ணைப் பெறணும்ன்னா இன்னொண்ணை இழந்து தானே ஆகணும்?' என்றது முதல் பாறை. 'நான் வலி யைப் பொறுத்துக்குவேன். பிரச்னையில்லை!'

'என்னால அது முடியாது!' தீர்மானமாகச் சொன்னது இர ண்டாவது பாறை.

'நாளைக்கு அவங்க வரும் போது நான் இன்னும் ஆழ மாப் போய் உட்கார்ந்துக் குவேன். அவங்க எல்லோ ரும் சேர்ந்து எவ்ளோ கஷ்ட ப்பட்டாலும் என் னைத் தூக்க முடியாது.'

மறுநாள் அந்தச் சிற்பிகள் மீண்டும் வந்தார்கள். முதல் பாறையைக் கட்டித் தூக்கி வண் டியில் வைத்தார்கள். இரண்டா வது பாறையை அவர்களால் அசைக்கக்கூட முடியவில்லை.

'சரி விடுங்க. அதான் ஒரு பாறை கிடைச்சுடுச்சே. அதுவே போதும்.' அவர்கள் வந்த வழியே திரும்பிச் சென்றார்கள்.

இப்போது அந்த முதல் பாறை அற்புதமான கடவுள் சிலையாக எல்லோராலும் வணங்கப்படுகிறது. இரண் டாவது பாறை இன்னும் காட் டுக்குள்தான் கிடக்கிறது.




- 1806 - நன்னம்பிக்கை முனையை பிரித்தானியா பிடித்தது.
- 1817 - சிலி மற்றும் பெருவை விடுதலை செய்ய ஜோஸ் டெ சான் மார்ட்டின் தலைமையில் 5.423 போர் வீரர்கள் கொண்ட படை, அர்கெந் தீனாவிலிருந்து அன்டெஸ்சைக் கடந்தது.
- 1829 - யொஹான் வூல்ப்காங் ஃபொன் கேத்தாவின் பவுஸ்ட் பகுதி 1 பிரமர்தமான பாராட்டுகளைப் பெற்றது.
- 1839 - பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனி யேமனின் ஏடென் நகரைக் கைப்பற்றியது.
- 1853 - ஜூசெப்பே வேர்டியின் ஆப்பெரா இல் ட்ரவடோர் ரோமில் பிரமாதமான பாராட்டு களைப் பெற்றது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: மில் ஸ்பிரிங்ஸ் சண்டையில் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு தனது முதல் பெரிய தோல்வியை பெற்றது.
- 1899 - ஆங்கிலோ-எகிப்திய சூடான் அமைக்க ப்பட்டது.
- 1903 - ஐக்கிய அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே முதலாவது வானொலி ஒலிபரப்பு ஆரம்பமாயிற்று.
- 1917 - லண்டனில் ஆயுதக் களஞ்சியம் ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 73 பேர் கொல்லப் பட்டும் 400 பேர் காயமும் அடைந்தனர்.
- 1920 - அமெரிக்க மேலவை உலக நாடுகள் சங்க த்தில் சேறுவதிற்கு எதிர்ப்பாக தீர்மானம் நிறைவேற்றியது.
- 1927 - பிரித்தானியா சீனாவுக்கு படைகளை அனுப்பியது.
- 1937 - ஹோவார்ட் ஹியூஸ் லாஸ் ஏஞ்சலஸ் இலி ருந்து நியூ யார்க் நகரத்திற்கு 7 மணிநேரம், 28 நிமிடங்கள், 25 நொடிகளில் பறந்து சாதனைப் புரிந்தார்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் இத்தாலி வசமிருந்த எரித்திரியா வைத் தாக்கினர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் பர்மாவை முற்றுகையிட்டனர்.
- 1949 - கூபா இசுரேலை கண்டுகொண்டது.
- 1966 - இந்திரா காந்தி இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1981 - ஈரானில் 14 மாதங்களுக்கு முன்னர் பணயக கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 52 அமெரிக் கர்களை விடுவிக்க ஐக்கிய அமெரிக்காவும் ஈரானும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.
- 1983 - நாசி போர்க் குற்றவாளி கிளவுஸ் பார்பி பொலிவியாவில் கைது செய்யப்பட்டான்.
- 1986 - முதற் கணினி நச்சுநிரலான பிரெயின் ((c)Brain) பரவத் தொடங்கியது.
- 1993 - வேதி ஆயுத உடன்படிக்கை (CWC) கையொப்பமிடப்பட்டது.
- 1993 - ஐபிஎம் நிறுவனம் 1992 ஆண்டிற்கான அறிக்கையில் கூ4.97 பில்லியன் நட்டத்தை அறிவித்தது. இன்றுவரையில் அமெரிக்கா வில் வேறொரு நிறுவனம் இந்த அளவில் நட்டம் அடைந்ததில்லை.
- 1997 - 30 ஆண்டுகளுக்குப் பின்னர் யாசர் அரபாத் ஹெப்ரோன் திரும்பினார்.
- 2006 - சிலவாக்கியாவின் விமானப்படை விமாணம் ஹங்கேரியில் வீழ்ந்து நொருங் கியது.
- 2006 - புளூட்டோவுக்கான முதலாவது நியூ ஹரைசன்ஸ் என்ற விண்ணுளவியை நாசா விண்ணுக்கு ஏவியது.
- 2007 - இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட் டுப்பாட்டில் இருந்த வாகரையைத் தாம் கைப்பற்றிவிட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்தது.

**பிறப்புகள்**

- 1736 - ஜேம்ஸ் உவாட், கண்டுபிடிப்பாளர். (இ. 1819)
- 1807 - ராபர்ட் ஈ. லீ, அமெரிக்கப் பொறியியலாளர். (இ. 1870)
- 1809 - எட்கார் அலன் போ, அமெரிக்க எழுத்தாளர், கவிஞர் . (இ. 1849)
- 1839 - பால் செசான், பிரெஞ்சு ஓவியர் .(இ. 1906)
- 1912 - லியோனிட் கண்டரோவிச், நோபல் பரிசு பெற்ற இரசியப் பொருளியலாளர். (இ. 1986)
- 1933 - சீர்காழி எஸ். கோவிந்தராஜன், கருநாடக, திரையிசைப் பாடகர் . (இ. 1988)
- 1948 - வானம்பாடி யோகராஜ், ஈழத்து வில்லிசைக் கலைஞர் . (இ. 1999)

**இறப்புகள்**

- 1597 - மகாராணா பிரதாப், இந்திய மன்னர். (பி. 1540)
- 1990 - ஓஷோ, இந்திய ஆன்மிகவாதி .(பி. 1931)
- 2014 - ஸ்டான்லி ஜெயராஜா தம்பையா, ஈழத்து மானிடவியலாளர், பேராசிரியர். (பி. 1929)
- 2015 - ரஜினி கோத்தாரி, அரசியல் அறிஞர். (பி. 1928)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 50 | 60 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 95 | 100 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 100 | 280 | 170 | 300 | 180 |
| தக்காளி | 100 | 120 | 120 | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 | 60 | 80 | 80 | 70 |
| கோவா | 30 | 20 | 20 | 30 | 30 | 40 | 30 |
| கரட் | 100 | 40 | 60 | 60-120 | 70 | 120 | 50 |
| பூசணி | 60 | 40 | 35 | 50 | 60 | 60 | 80 |
| புடோல் | 80 | 40 | 50 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 80 | 40 | 50 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 80 | 80 | 70 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 90 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 250 | 100 | 150 | 200 | 220 | 300 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 120 | 80 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 150 | 100 | 90 | 120 | 140 | 160 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 20 | 80 | 120 | 80 |
| பீற்றூட் | 60 | 100 | 80 | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 170 | 200 | 170 | 300 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 500 | — | 600 | 600 | 700 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 100 | 90 | 100 | 90 |
| கத்தரித்தம்பளா | 30 | 20 | — | 30 | — | 50 | 40 |
| கீரை - 1பிடி | 20 | 06 | 20 | 30 | 20 | 40 | 15 |
| தேசிக்காய் | 200 | 200 | 220 | 300 | 220 | 400 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 50 | 50 | 40 | 50-60 | 40 |
| இராசவள்ளி | 200 | 200 | 220 | 200 | 200 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 200 | 160 | 200 | 140 | 140 | 200 | 100 |
| முள்ளங்கி | 60 | 60 | 60 | 80 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 20 | 25 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | — | 60 | 60 | 100 | 70 |

சொல்லியபடி செய்வது கடினமல்ல; மிக எளிது. ஆனால், அதற்கு முன் சொல்லும்பொழுது யோசித்துச் சொல்லப் பழகிக்கொள். ‑கி.ஆ.பெ.விசுவநாதம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தேர்தல் பேரிகை கேட்கிறது மக்காள் இன்னும் துயிலுதியோ

மாணிக்கவாசகர் திருவெண்ணாமலையில் இருந்து திருவெம்பாவை பாடுகிறார். ஏலோர் எம்பாவாய் என்று அதிகாலைப் பொழுதில் மக்களைக் கூவியழைத்து இன்னும் துயிலுதியோ என்று கேட்கிறார்.

இறைவனின் திருவருளை பெறாமல் நித்திரை துயின்று காலத்தை அவமே கழிக்கின்றாயோ? நீ இப்பிறவி எடுத்ததன் பயனை மறந்து உறங்குகின்றாயோ? என்ற கருத்துக் கொண்டு துயில் எழுப்புவதாக திருவெம்பாவை அமைகின்றது. இஃது இறைஞானம் பெறுவதற்கான அழைப்பு.

துயிலுதல் என்பது காலத்தை வீணாக்குவதாக – சந்தர்ப்பத்தை இழப்பதாக இருந்துவிடக்கூடாது என்பதே இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயம்.

மாணிக்கவாசகர் கூறும் துயிலுதல் என்பதன் பொருள் வெறும் உறக்கம் மட்டும் என்று யாரும் நினைத்துவிடக்கூடாது. ஒரு விடயத்தில் கவனம் செலுத்தாமல் விடுவது அக்கறைகொள்ளாமல் தவிர்ப்பது கவனக்கலைப்பில் இருப்பது, பொறுப்பற்று நடப்பது இவையெல்லாம் துயிலுதலுக்கு ஒப்பானது தான்.

ஆக, மாணிக்கவாசகர் கூறும் துயிலுதல் என்ற பொருள் பல தளங்களில் தமிழினம் தடம்புரள்வதற்கு காரணமாக அமைந்துள்ளது.

அதாவது எதையும் பொருட்படுத்தாமல் விட்டுவிடுவது, மற்றவர்களுடன் சேர்ந்து பேரணியில் திரண்டு கோசம் எழுப்புவதில் இருந்து ஒதுங்குவது மற்றவர் பார்க்கட்டும் நமக்கென்ன என்ற நினைப்பில் இருப்பது போன்ற உறங்கு நிலைகள் எங்கள் இனத்தின் சாபக்கேடு என்று சொல்லும் அளவிற்கு நிலைமையை ஆக்கியுள்ளது.

எனவே இதிலிருந்து நாம் விடுபட வேண்டும். அதிகாலை துயில் எழுந்து இறைஞானம் வேண்டுவது போல நாமும் எம் இனம் சார்ந்த விடயத்தில் விழிப்படைந்து செயற்பட வேண்டும்.

ஆம்! எங்களின் தூர நோக்கற்ற தன்மையும் எதையும் ஆறப்போடும் பழக்கமும் சிந்தித்து முடிவெடுக்கா தன்மையும் எங்களுக்கான அரசியல் தலைமையைக் கூட பலவீனமாக்கி விட்டது.

எங்களுக்கான அரசியல் தலைமை எப்படியாக இருக்கவேண்டும், அவர்களின் பணி என்ன? தமிழ் மக்களின் வாக்குப்பெற்று பதவிக்கு வந்துவிட்டு மக்கள் நலன்பற்றி சிந்தியாதவர் தொடர்பில் மக்கள் வழங்கும் தீர்ப்பு யாது என்பது பற்றியெல்லாம் நினைக்கவேண்டும் அப்போதுதான் எங்கள் இனத்திற்கான உரிமைக்குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

ஆனால் தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிப்பதோடு தங்கள் பணி முடிந்து விடுவதாக நினைக்கின்றனர். இந்த நினைப்பு தமிழ் அரசியல்வாதிகளிற்கு மக்களை ஏமாற்ற நல்ல வாய்ப்பாகிறது.

உதாரணத்திற்கு கடந்த உள்ளூராட்சி தேர்தலில் நாம் தெரிவு செய்தவர்கள் என்ன செய்தார்கள். அவர்களின் செயலால் எங்களுக்கு ஏதேனும் நன்மை நடந்ததா? என்றால் எதுவும் இல்லை என்று அடித்துக் கூறமுடியும்.

அப்படியானால் எதிர்வரும் மாதங்களில் உள்ளூராட்சி தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்படவுள்ளது. இது தொடர்பில் நாம் சிந்தித்தோமா? சேவையாற்றக்கூடிய நேர்மையானவர்களை தேர்தல் காலத்தில் நிறுத்த நாம் ஆயத்தம் செய்தோமா? செய்கிறோமா? எதுவும் இல்லை என்றால் உறவுகளே! நீவிர் துயிலுதியோ என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை.

உள்ளூராட்சி தேர்தலுக்கான பேரிகை கேட்கிறது. தயாராக எழுந்திடுக! பலமான உள்ளூராட்சி சபையை அமைக்க அருள் புரிந்திடுக என்பதே நம் அழைப்பாகும்.

## பொதுக்கூட்டம்

வலி.தென்மேற்கு பிரதேச செயலக பிரிவுச் சங்கத்தின் பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 11 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் நாளை 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

எம்.எக்ஸ்.சர்வானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி யசோதா-உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக வலி. தென்மேற்கு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி என். செல்வகுமாரி. வலி. தென்மேற்கு பிரதேச செயலக கணக்காளர் எம். சிவகுமார், யாழ்.மாவட்ட பகிரங்க ஓய்வூதிய நம்பிக்கை நிதியத் தலைவர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# மாணவர்கள் இருவர் தீக்குளிக்க முயற்சி

(சென்னை)

ஜல்லிக்கட்டு போட்டிக்கு ஆதரவாக சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என சுமார் 3000 பேர் திரண்டு நேற்றும் போராட்டம் நடத்தினர்.

ஜல்லிக்கட்டு போட்டிக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் இளைஞர்கள், மாணவர்கள், பொது மக்கள் உள்ளிட்டோர் கடந்த 4 நாட்களாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே சுமார் 3000 பேர் திரண்டு போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

'காலை 9 மணிக்கு திரண்ட இளைஞர்கள் கூட்டத்தில், கல்லூரி மாணவர்கள், மாணவிகள் வகுப்புகளைப் புறக்கணித்து விட்டும், விடுப்பு எடுத்துக் கொண்டும் தன்னெழுச்சியாக போராட்டத்தில் பங்கேற்று வருகின்றனர்.

தனியார் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் பூபாலன், ராஜ்குமார் ஆகிய இருவரும் ஜல்லிக்கட்டு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த தோடு. தங்கள் மீது மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு தீக்குளிக்க முயற்சி செய்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. உடனிருந்த சக மாணவர்களும், பொலிஸாரும் அதைத் தடுத்து நிறுத்தினர். (இ-7)

## மெய்வல்லுநர் போட்டி

யா/இடையாணன்அ.த.க. வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 20 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த மெய்வல்லுநர் போட்டியில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் பங்கேற்பார். (இ)

# குடிநீர் சேவைக்கட்டண அறவீடு நடைமுறை குறித்த அறிவித்தல்

யாழ். மாநகர சபை பொது மக்களின் குடிநீர் விநியோகத்தின் கட்டண அறவீட்டை இலகுவாக்கும் முறைமைக்கு அமைவாக பொதுமக்களின் நன்மைகருதி 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் குடிநீர் சேவை பெற்றுக் கொள்ளும் பொதுமக்களின் சேவையிடங்களில் கட்டணம் அறவிடும் நடவடிக்கை மேற்கொள்ள என்னால் அங்கீகரிக்கப்பட்ட சபை ஊழியர்கள் ஊடாக மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனால் தங்களிடம் வருகின்ற குடிநீர் சேவைக்கான அறவீட்டாளர்களிடம் பாவித்த குடிநீருக்கான கட்டண அறவீட்டை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை சரி பார்த்துப் பெற்றுக் கொள்ளுமாறும் அதற்கான ஒத்துழைப்பை நல்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன் என யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார். (இ)

# சரஸ்வதி சிலை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவியும் ஓய்வுநிலை உப அதிபருமாகிய சுசீலாதேவி திருச்செல்வம் தம்பதியினரின் முழு அனுசரணையுடன் நிர்மாணிக்கப்பட்ட "கலைத்தாய் சரஸ்வதிதேவி அங்குரார்ப்பணம்" இன்று வியாழக்கிழமை காலை 8.05 மணி முதல் 9.35 மணி வரை கல்லூரி வளாகத்தில் இடம்பெறும்.

பாடசாலையின் அதிபர் சொ.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக திருச்செல்வம் சுசீலாதேவிதம்பதியர், கௌரவ விருந்தினர்களாக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) அ.அகிலதாஸ், கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் வே. ஞானகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில** இளமருதங்குளம், மூன்றுமுறிப்பு, புதுக்குடியிருப்பு, கோம்பாவில், இரணைப்பாலை, மூங்கிலாறு, உடையார்கட்டு, கைவேலி, **Hydramani** ஆடைத் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கொக்கெலியவிலிருந்து புளியங்குளம வரை, தாண்டிக் குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, ஓமந்தை வீட்டுத் திட்டம், **ICT** கல்லூரி, **Union Alliance Ltd, AMP** ஓமந்தை, ஓமந்தை மீன்பிடி வலைத்தொழிற்சாலை, பறயனாலங்குளத்திலிருந்து முகததாங்குளம் வரை, மனிக்பாம 02, 03 மற்றும் 04 ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** தரவன கோட்டை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# 'வல்வையின் முதுசொம்' நூல் வெளியீடு நாளை

வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையின் வெளியீடான "வல்வையின் முதுசொம்" (தமிழர்களின் வரலாற்று ஆவணம்) நூல் வெளியீட்டு விழா நாளை 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும். (இ-3)

# சத்திய தரிசனம்



## உண்மை பேசவேண்டும்

❖ தெய்வம் எங்கோ இல்லை. பத்ரிநாத்திலோ, கேதார்நாத்திலோ, திருப்பதியிலோ மட்டுமே தெய்வத்தைக் காண முடியும் என்பது வெறும் மூர்க்கபக்தியாகும். தெய்வம் எங்கிருக்கிறது என்றால் நம் இதயத்தில் இருக்கிறது. உன் இதயமே தெய்வத்தின் இருப்பிடம். நிலையற்ற உலகத்தில் அதிகம் படித்து விட்டதாகச் சிலர் கர்வப்படுகின்றனர். சிலர் செல்வம் படைத்து விட்டதாக அகங்காரம் கொள்கின் றனர்.

❖ இவையெல்லாம் இறைவன் நமக்கு கொடுத்திருப்பதே இல்லாதவர்களுக்குக் கொடுக்கத்தான். அதை உணர்ந்து மற்றவர்களிடம் பணிவுடன் நடந்து கொள்ளுங்கள். சத்தியமாகிய உண்மையைப் பேச வேண்டும். தர்மவழியில் நடக்க வேண்டும். இவ்விரண்டு மட்டுமே பக்திக்கு அடிப்படையானவைகளாகும். இவற்றைக் கொண்டு வாழ்பவன் இறைவழியில் நடப்பவனாகிறான். தெய்வம் எங்கே இருக்கிறது தெரியுமா? சத்யம் இருக்குமிடம் தெய்வம் இருக்கும் இடம். சத்தியமே கடவுள். அன்பே கடவுள்.

❖ அமைதியே கடவுள் ஆகும். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் மனிதன் தெய்வத்தை தேடி அலைகிறான். நீயே கடவுள்! உனக்குள்ளே இறைவன் உறைந்திருக்கின்றார்! எது நடந்தாலும் இது என் நன்மைக்கே என்ற உயர்ந்த சிந்தனையை மனதில் உருவாக்கிக் கொள்ளுங்கள். எது கிடைத்தாலும் அதை இறைவனின் பிரசாதமாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

# சாஸ்திரங்கள்

✦ சூரிய அஸ்தமனத்திலிருந்து ஒரு மணி நேரம் (மாலை 6-7) இறைவனும் இறைவியும் இணைந்திருக்கின்ற காலமாகும். சுபகாரியங்களுக்கு இது உத்தமமான காலமாகும். கிழமை தோஷம், நட்சத்திர தோஷம், திதி தோஷம் எதுவும் கிடையாது.

- ஜோதிட கணிதாமிர்தம்

✦ தாய், தந்தை, உடன்பிறந்தோர், மனைவி, மக்கள், ஏவலாள், ஆசிரியர், தன்னை அண்டியவர், குழந்தைகள், முதியவர், நோயாளிகள் ஆகியவரோடு சண்டையிடக் கூடாது. அவர்களோடு முரண் பாடில்லாதவர்க்குப் பாவங்கள் இல்லை. அவர் பிழைகளை மன்னிப்பவர்க்குப் புண்ணியம் வரும்.

-மனுசாஸ்திரம்

✦ இறந்தவர்களின் உடலை பொதுமக்கள் பார்வைக்காக வீட்டின் ஈசான திசையில் (வடகிழக்கு மூலையில்) வைக்க வேண்டும்.

-காசி காண்டம்

✦ இறந்தவர்களின் உடலை பொதுமக்கள் பார்வைக்காக வீட்டின் ஈசான திசையில் சப்த ரிஷிகள் நட்சத்திரப் பதம் பெற்று அமர்ந்துள்ளனர். நம்வீட்டில் ஈசான திசையில் இறந்தவர்களின் உடலை கிடத்தி வைத்தால் அவர்களுக்கு இறைபதம் கிட்டும்.

-காசி காண்டம

✦ பெருமைப்படுத்தி தரப்படும் பிச்சையை தானத்தை வேண்டாம் என்று சொல்க. இது மோட்ச வாயிலின் அருகிலும் கூட பிறவிப் பிணியை வருவிக்கும்.

-மனு சாஸ்திரம்

✦ ஒரு டம்ளர் நீரில் ஆணின் இந்திரியத்தை விட்டவுடன் நீரில் கரைந்து விட்டால் அந்த ஆண் மலடு ஆவான். இந்திரியம் நீரில் கலந்து விடாமல் மிதந்து கொண்டிருந்தால் அது புத்திர உற்பத்திக்கு உரியதாகும்.

-சந்தானரத்தினம்

✦ குத்து விளக்கு நான்கு முகம் ஏற்றினால் பசு, பால், பூமி சேர்க்கை உண்டாகும்.

-ஸ்ரீ காரணம்

# நல்லூர் பிரதேச செயலகத்தின் சதுரங்கப் போட்டி முடிவுகள்






(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான சதுரங்கப் போட்டியானது 12.01.2017 கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான போட்டியில்,

1.மோ.அஜித்குமார் - கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம்

2.ப.மோகரூபன் - மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம்

3.க.கௌரிதாசன் - அரியாலை ஸ்ரீ கலைமகள் விளையாட்டுக்கழகம்

4.கி.கஜன் - நொதேன் வாரியஸ் விளையாட்டுக்கழகம்

5.கி.கிருசாந்தன் - நொதேன் வாரியஸ் விளையாட்டுக்கழகம்

6.அ.அகிந்தன் - அரியாலை ஸ்ரீ கலைமகள் விளையாட்டுக்கழகம் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

பெண்களுக்கான போட்டியில்

1.ந.தனுஸ்பிரியா - நண்பர்கள் விளையாட்டுக்கழகம்

2.உ.சுமித்ரா தேவகி - நண்பர்கள் விளையாட்டுக்கழகம்

3.ரூ.அபிராமி- நண்பர்கள் விளையாட்டுக்கழகம் ஆகியோர் வெற்றி பெற்றனர். (க)

# விளையாட்டுக்கழகங்களுக்கு விந்தன் கனகரத்தினம் நிதியுதவி





வடக்கு மாகாண சபையின் யாழ். மாவட்ட உறுப்பினரான கே.என்.விந்தன் கனகரத்தினம் தனது நிதி ஒதுக்கீட்டின் மூலம் விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களுக்காக ரூபா ஒரு இலட்சத்து பத்தாயிரம் (110000.00) ஒதுக்கியிருந்தார்.

புங்குடுதீவு நண்பர்கள் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கு ரூபா இருபத்தையாயிரமும் (25000.00), சரவணை மேற்கு திருவள்ளுவர் விளையாட்டுக்கழகத்திற்கு ரூபா முப்பதாயிரமும் (30000.00), புங்குடுதீவு ஊரதீவு சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்திற்கு ரூபா இருபத்தையாயிரமும் (25, 000.00) மற்றும் ஊர்காவற்றுறை கரம்பொன் ஹீரோ விளையாட்டுக் கழகத்திற்கு ரூபா முப்பதாயிரமும் (30000.00) பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை 13.01.2016 அன்று வட மாகாண விளையாட்டு திணைக்களத்தில் வைத்து அந்தந்த கழக நிர்வாகிகளிடம் வழங்கியதை படங்களில் காணலாம். (க)

# கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலானகுழுநிலைப் போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் பெண்களுக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியுடன் காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 28,29 ஆகிய திகதிகளில் கரணவாய் கொலிஸ் இமையாணன் மத்தி மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானங்களில் ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

கிரிக்கெட் தொடரில் கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட 32 கழகங்கள் கலந்து கொள்ளும் அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் தொடரில் மாலுசந்திமைக்கல் அணி இமையாணன் இளைஞர் அணியுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் மாலு சந்திமைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் மோதவுள்ளது.

இதில் வெற்றிபெறும் அணி அன்றையதினம் வதிரி டயமன்ஸ் எதிர் உடுப்பிட்டி யூத் அணிகளுக்கிடையில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் மோதவுள்ளது. (க)

# றெயின்போ அணியை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்தது ரேவடி







(யாழ்ப்பாணம்)

வல்வை றெயின்போ விளையாட்டுக்கழகம் வல்வைக்குட்பட்ட கழகங்களிடையே நடத்திய 7பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம்(15.01.2017) அன்று நடைபெற்றது.

இதில் ரேவடி அணி றெயின்போ அணியை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்தது.

ஆட்டநேரமுடிவின் இறுதி நிமிடத்தில் றெயின்போ அணி பெற்ற ஒரு கோலினால் போட்டி 1:1 என்ற கோல்கணக்கில் சமநிலையில் முடிவுற்றது.

இதனையடுத்து நடுவர்களினால் தண்ட உதையில் வழங்கப்பட்டது. தண்ட உதையில் ரேவடி விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகன் சுபேஸ் (ரேவடி விளையாட்டுக்கழகம்) ,சிறந்த கோல் காப்பாளர் ருதேசா (றெயின்போ விளையாட்டுக்கழகம்), தொடர் நாயகன் நகுலேஸ்வரன் (ரேவடி விளையாட்டுக்கழகம்)ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இன்றைய போட்டி

மயிலங்காடுஞானமுருகன்விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மாலை 4 மாலை மணிக்கு நடைபெறும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் திக்கம்இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# பார்த்தீபன், கேசிகன் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுத்தொடர்

## மாதனை சம்பியன்



(யாழ்ப்பாணம்)

வல்லியானந்த விளையாட்டுக் கழகத்தினால் அமரர் பார்த்தீபன், கேசிகன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட போட்டியில் இமையாணன் மத்தி அணியை வீழ்த்தி மாதனை அணி வெற்றி வாகை சூடியது.

இவர்களுக்கு வெற்றிக் கேடயமும் பதக்கங்களும் பணப்பரிசும் கொடுத்து கௌரவிக்கப்பட்டனர். (க-60)

# ஜல்லிக்கட்டு மீதான தடையை...




ங்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இந்திய அரசாங்கமானது ஜல்லிகட்டு நடத்துவதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் யாழ்.நல்லூரில் இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி பாரிய கவனயீர்ப்பு போராட்டமொன்றை நடாத்தியுள்ளார்.

சமூக வலைத்தளங்களினூடாக இளைஞர்களது ஆதரவினை பெற்று நடத்தப்பட்ட இப் போராட்டமானது நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய முன்றலில் மாலை நான்கு மணியளவில் ஆரம்பமாகியிருந்த நிலையில் இப் போராட்டத்திற்கு யாழ்ப்பாணம் மற்றும் வெளி மாவட்டங்களிலும் இருந்து வருகை தந்திருந்த பெருந்திரளான இளைஞர்கள் ஒன்றுகூடி உணர்வுபூர்வமாக இப் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

தமிழகத்தில் பீட்டா அமைப்பினால் இந்திய உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் காரணமாக ஜல்லிக்கட்டு காளை மாடுகளை துன்புறுத்தும் செயலாகும் என கூறி இந்திய உச்ச நீதிமன்றம் ஜல்லிக்கட்டு மீது தடை விதித்திருந்தது. எனினும் இந்த தடையுத்தரவை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாமல். காளைகளை நாங்கள் துன்புறுத்த வில்லை. மாறாக அவைகளை எமது பிள்ளைகள் போன்று பராமரித்து வளக்கின்றோம்.

ஜல்லிக்கட்டு எமது பாரம்பரியம் அதனை தடுத்து நிறுத்த யாருக்கும் உரிமையில்லை. என தெரிவித்து சமூக வலைத்தளங்கள் ஊடாக போராட்டங்களை முன்னெடுக்கப்பட்டன. இவை விஸ்தரிப்பு அடைந்து மிகப் பெரிய போராட்டங்களாக வெடித்தன. குறிப்பாக தமிழக கல்லூரி மாணவர்கள் கல்லூரிகளை புறக்கணித்து போராடி வருவதுடன் இளைஞர்கள் இலட்ச கணக்கில் திரண்டு ஆதரவு தெரிவித்து போராடி வருகின்றனர்.

இதற்கும் மேலாக பல இடங்களில் தடையை மீறி ஜல்லிக்கட்டு நடைபெற்றது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி ஜல்லிக்கட்டு நடைபெற்றமையால் பொலிஸார் அவற்றை தடுப்பதற்கு தீவிரமாக செயற்பட்டனர். போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியமையால் போராட்டக்காரர்களும் பொலிஸார் மீது தாக்குதலை தொடுத்தனர். இதனால் தமிழகமே கொந்தளித்துள்ள நிலையில், நூறுக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளிலும் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையிலேயே தமது தமிழ் மரபினை காக்க போராடும் தமிழக உறவுகளுக்காக ஆதரவு தெரிவிப்பது நேற்றைய தினம் மாலை யாழ்.நல்லூரில் இந்த போராட்டமானது சமூக வலைத்தள போராளிகளாலும் இளைஞர்களாலும் பல நூற்றுக்கணக்கானவர்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தெரிவிக்கையில், ஜல்லிக்கட்டு என்பது காலம் காலமாக தமிழ் மக்களால நடத்தப்பட்டு வந்த ஓர் பாரம்பரிய வீரவிளையாட்டு. இதனூடாக காளைகளை நாம் துன்புறுத்தவில்லை. அவற்றை அன்போடுதான் அடக்குகின்றோமே தவிர துன்புறுத்தி அடக்கவில்லை. இவ்வாறான நிலையில் இவ் பாரம்பரிய நிகழ்வை நிறுத்த வேண்டும் என்பதில் ஆர்வமாக செயற்படும் பீட்டா எனும் அமைப்பானது சர்வதேச நாடுகளுடைய அரசியலோடு தொடர்புபட்ட ஒன்று. இவ்வமைப்பினூடாக வழக்கு தாக்கல் செய்து இவ் பாரம்பரியத்தை நிறுத்துவதனூடாக தமிழகத்தில் இருக்கும் காளை மாடுகளது இனப்பெருக்கத்தை நிறுத்தி வெளிநாட்டு மாடுகளை தமிழகத்தில் சந்தைபடுத்துவதற்கான வழியாகவே இதனை செய்கின்றார்கள்.

தற்போதே வெளிநாடிகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற மாடுகளானது உள்ளூர் மாடுகள் கொடுக்கின்ற பாலினை விடவும் அதிகமாக பால் கொடுக்கின்றது. இது எப்படி சாத்தியமாகின்றது என்றால் அவை உருவாக்கப்பட்ட அவற்றுக்கு கொடுக்கப்பட்ட இரசாயன உரங்களாலேயே ஆகும். இந் நிலையில் இவ் மாடுகளால் கொடுக்கப்படும் பாலினை அருந்தும் மக்களுக்கு பல்வேறு உடலியல் கோளாறுகள் ஏற்படுகின்றன. இவ்வாறு உடலியல் கோளாறு ஏற்பட்டதும் அதற்கான மருந்தையும் அந்த மாட்டை விற்பனை செய்த நாடே வழங்கப்போகின்றது.

இத்தகைய செயற்பாட்டால் அந்த வெளி நாட்டுக்கு இரட்டிப்பு வருமானமும் இலாபமும் கிடைக்கப்போகின்றது. இத்தகைய பின்புலங்களை வைத்துக்கொண்டே வல்லரசு நாடுகள் இத்தகைய அமைப்புகளை பயன்படுத்தி அந்த நாடுகளில் உள்ள பாரம்பரியமான செயற்பாடுகளை இல்லாமல் செய்து தமது வியாபார நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கின்றன. உண்மையில் பீட்டா அமைப்பானது மிருகங்களை வதை செய்வதற்கு எதிராக போராடும் அமைப்பானால் உலகில் எத்தனை நாட்டில் எந்தனை உயிர்கள் தினம் தினம் கொல்லப்படுகின்றன ஏன் அவை அனைத்தும் உயிர் வதையாக அவ் அமைப்புக்கு தெரியவில்லையா? எனவே வல்லரசு நாடுகளும் சர்வதேச அரசியல் பொருளாதாரத்தை இலக்காக கொண்டு எமது பாரம்பரியத்தை அழிக்க முயற்சிப்பவர்களது செயற்பாடுகளுக்கு இடம் கொடுக்காமல் எமது பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கு நாம் எப்போதும் போராட வேண்டியதுடன் தமிழகத்தில் இடம்பெறுகின்ற இவ் ஜல்லிக்கட்டு தடை நீக்கல் போராட்டத்திற்கு ஈழத்தவர்களும் எப்போதும் துணையிருப்பார்கள் எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். (செ-4)

## அமைச்சர் கபீர்...

ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இந்த முறைப்பாட்டை செய்துள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மேலும் இது சம்பந்தமாக இலஞ்ச ஆணைக்குழுவிடமும் முறைப்பாட்டை செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் கொள்வனவு செய்யவிருந்த A350/900 ஏயார் பஸ் விமானங்கள் மூன்றின் கொள்வனவை இரத்துச் செய்ததன் மூலம் அரசுக்கு 98 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பை ஏற்படுத்தியமை, அந்த கொடுக்கல் வாங்கலில் அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் 10 மில்லியன் டொலர் தரகு பணத்தை பெற்றமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் சம்பந்தமாக ஜனாதிபதி எடுக்க போகும் நடவடிக்கை குறித்து கூட்டு எதிர்க்கட்சி உன்னிப்பாக அவதானித்து வரும் எனவும் மகிந்தானந்த அளுத் கமகே ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## சிகிச்சை பலனின்றி...

வராவார்.

மேசன் தொழிலாளியான இவர் கடந்த 12ஆம் திகதி யாழ் நகர் பகுதியில் கட்டிட வேலை ஒன்றுக்காக வந்துள்ளார். அப்போது கட்டிடமொன்றில் முதலாம் மாடியில் இருந்து இரண்டாம் மாடிக்கு கம்பி இழுத்துக்கொண்டிருந்த போது கால் தவறி பிரஸ்தாப நபர் கீழே விழுந்துள்ளார்.

கீழே விழுந்ததில் தலையில படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இவர் நிலையில் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்திய சாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாய பிரேமகுமார் மரண விசாரணையை மேற்கொண்டதுடன் பிரேதபரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)

## ஜி.எஸ்.பி பிளஸ்...

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை இலங்கை மீளப் பெற்றுக்கொள்ளவதாயின் ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ள 58 நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என அண்மையில் கூட்டு எதிர்க்கட்சி குற்றச்சாட்டொன்றை முன்வைத்திருந்த நிலையில், ஐரோப்பிய ஒன்றியம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும் சர்வதேச மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றச்சூழல் நியமங்கள் மற்றும் நல்லாட்சி ஆகியவை தொடர்பிலேயே அரசாங்கம் சர்வதேச சாசனங்களில் கைச்சாத்திட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல், வர்த்தக மற்றும் தொலைத்தொடர்பு பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சாசனங்களின் அமுலாக்கத்தில் மேலதிக முன்னேற்றமே அரசாங்கம் ஜி. எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை பெறுவதற்கு ஏதுவாக அமையும் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## நிறைவேற்று...

ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருக்கின்றார்.

நிறைவேற்று அதிகாரத்தை தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறவில்லை.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு பெரும்பான்மை பலம் கிடைத்ததன் காரணமாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அரசாங்கத்தில் இருக்கின்றனர்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுக்கும் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும் என்றே கூறியுள்ளதாகவும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## புதிய அரசியல...

மாகாண சபைகளுக்குரித்தான 13வது திருத்தச் சட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்லத் தேவையான அனைத்து சட்ட மற்றும் அரசியல் நடவடிக்கைகளையும் நல்லாட்சி அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் இராணுவத்தளபதியும் பீல்ட் மார்ஷலும் அமைச்சருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து கூறுகையில்,

வடக்கிலுள்ள பெரும்பாலான மக்கள் 13வது திருத்தச் சட்டத்தை எதிர்க்கவில்லை. நாட்டிலுள்ள அனைவரும் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழக்கூடிய பின்னணி உருவாக்கப்பட வேண்டும். அரசியலமைப்பு விடயங்களில் ஒரு தடவை இழைத்த தவறுகளை மீளவும் செய்யக்கூடாது. அரசியல் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வது மற்றும் அரசியல் அமைப்பு மாற்றம் குறித்து முறையாக கலந்துரையாடப்பட வேண்டும். அனைத்து விடயங்களும் சரியான முறையில் முன்னோக்கி நகர்த்தப்படும் என நான் எண்ணுகிறேன்.

13 ஆவது திருத்தம் சட்டம்.குறிப்பாக சிங்கள தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதற்காகவே உருவாக்கப்பட்டது. ஆகவே தற்போது அரசியல் பிரச்சினைகள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு அரசாங்கம் 13ஆம் திருத்தத்தை மேம்படுத்தபடுத்த செயற்பட்டு வருகின்றது.

இதற்காக குறிப்பிட்ட சில சட்ட மற்றும் அரசியல் பிரச்சினைகள் தற்போது உள்ள நிலையில் அனைவருக்கும் ஏற்ற வகையில் நாட்டில் எல்லா மக்களுக்கும் சம உரிமையை பெற்று கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசியலமைப்பு தொடர்பான சட்டரீதியான பிரச்சினைகள் மற்றும் வாக்கெடுப்பு போன்ற விடயங்கள் ஆராயப்படுகின்றது.

13 திருத்த சட்டத்திற்கு அமைவாக வடக்கு கிழக்கு சிறுபான்மை மக்களுக்கு சமமான அதிகாரம் வழங்குவது தொடர்பில் கூறபபட்டுள்ளது.

ஆனாலும் அது பெரும்பான்மையான சிங்கள அரசாங்கத்தினால் இவர்களுக்கான முழு அதிகாரம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறே 1987 ஆண்டு இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை ஜனாதிபதிக்கு இடையில் ஒப்பந்தம் கைச்சாத்தப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினை ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சமாதானத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டனர். அதற்கு புலிகளும் ஒப்புக்கொண்டனர். எனினும் அதன் பின்னரான நிலைமைகள் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டுவிட்டன என சரத்பொன்சேகா தனது செவ்வியில் குறிப்பிட்டிருந்தார். (செ-11)

## வாகனங்களுக்கான குத்தகை வீதங்கள் நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

வாகனங்களுக்கான கடன் அடிப்படையிலான குத்தகை திட்ட பெறுமதி வீதங்கள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட பரிந்துரைகளுக்கு அமையவே இந்த அறிவிப்பை நிதியமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி, முச்சக்கர வண்டிகளுக்கு கடன பெறுமதி 25 வீதமாக இருக்கும்.

மோட்டார் கார்கள் மற்றும் வான்களுக்கு 50 வீதமாக அது அமைந்திருக்கும்.

லொறி மற்றும் பஸ்களுக்கு இந்த கடன் பெறுமதி 90 வீதமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வட்டி வீதங்கள், சுற்றுலாத்துறையின் போக்குவரத்துக்காக வாகனங்களை குத்தகைக்குபெறுவோருக்கு பொருந்தாது. அவர்கள் 100 வீத குத்தகைக் கடனை பெற முடியும். (செ-11)

## வாகன விபத்து; இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் அச்சுவேலி சந்திப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த இ.சுகிர்தன் (வயது 28) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(செ-30)

## மயங்கி வீழ்ந்த...

ராக இருந்த பஸ் வண்டியில் ஏறிய மூதாட்டி ஒருவர் சிறிது நேரத்தில் மயங்கி வீழ்ந்துள்ளார்.

இதனை அவதானித்த பஸ்சில் இருந்த பயணிகள் பஸ் நடத்துநரிடம் விடயத்தை தெரிவித்ததை அடுத்து உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் ஏற்கெனவே மரணமடைந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அடையாளம் தெரியாத அந்த மூதாட்டியின் கைப்பையை பரிசோதித்த வைத்தியசாலையில் பணிபுரிவோர் அப்பையில் இருந்த தொலைபேசி எண்ணுக்கு அழைப்பை எடுத்து அவர் இறந்தமையை கூறியதை அடுத்தே அவர் மீசாலையை சேர்ந்தவர் எனவும் தற்போது கல்லூரி வீதி பருத்தித்துறையில் வசித்து வரும் சி.தங்கம்மா (வயது-76) எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்மரணம் தொடர்பில் நேற்று வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.(செ-60)

## மோ.குண்டால்...

வெளியில் தென்பட்ட மோட்டார் குண்டினால் அம்பன் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி அம்பன் பகுதியில் உள்ள வி.அருந்தவராசா என்பவரது வீட்டில் சிறுதானியப் பயிர் செய்கையினை மேற்கொள்வதற்காக நேற்றுப் புதன்கிழமை நிலத்தினை பண்படுத்திய போது 81 மில்லிமீட்டர் மோட்டார் குண்டு ஒன்று வெளிக்கிளம்பின அது புதிய குண்டு போன்று தோற்றமளிப்பதனால் இப்பகுதியில் மேலும் குண்டுகள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இதற்கு அருகில் உள்ள மற்றுவருடைய காணியில் சிறிய மோட்டார் குண்டு ஒன்று முன்பகுதி அற்ற நிலையில் காணப்பட்டது. அது செயழிழந்த குண்டாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்றதுடன் விசேட அதிரடிப்படையினர் வந்தத்ன் பின்னரே இக் குண்டுகள் மீட்கப்படுவதுடன் மேலும் அப்பகுதியில் குண்டுகள் இருக்கலாம் என சந்தேகிப் படும் இட்த்திலும் சோதனையிடவுள்ளனர். யுத்த காலத்தில் அப்பகுதியில் படை முகாம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-60)


வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

100% SATISFACTION GUARANTEED

070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் (C-7257)

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்


## 27,162 குடும்பங்...

இதன்படி யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வெளியிட்டு கடும் வரட்சி தொடர்பான புள்ளிவிபரத்தில், வேலணை பிரதேச செயலக பிரிவில் 940 குடும்பங்களும அக் குடும்பங்களை சேர்ந்த 3ஆயிரத்து760 அங்கத்தவர்களும், ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் 482 குடும்பங்களும் ஆயிரத்து 590 அங்கத்தவர்களும், காரைநகர் பிரதேச செயலகத்தில் 3ஆயிரத்து 539 குடும்பங்களும் 10 ஆயிரத்து 544 அங்கத்தவர்களும் நல்லூர் பிரதேச செயலகத்தில் 346 குடும்பங்களும் ஆயிரத்து 349 அங்கத்தவர்களும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 242 குடும்பங்களும் 4 ஆயிரத்து 347 அங்கத்தவர்களுமாக வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று சங்கானை பிரதேச செயலக பிரிவில் 8ஆயிரத்து 200 குடும்பங்களை சேர்ந்த 31 ஆயிரத்து300 பேரும், சண்டிலிப்பாய், பிரதேச செயலக பிரிவில் 5ஆயிரத்து 838 குடும்பங்களை சேர்ந்த 17 ஆயிரத்து 514 பேரும், நெல்லியடி பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 213 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 647 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 420 குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரத்து 852 பேரும், கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் 2ஆயிரத்து 830 குடும்பங்களை சேர்ந்த 9 ஆயிரத்து 622பேரும், பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 255 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 52 பேரும், மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் 430 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 635 பேருமாக மொத்தமாக 27 ஆயிரத்து 162 குடும்பங்களை சேர்ந்த 93 ஆயிரத்து 917 பேர் இவ் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு வெளியிட்டுள்ள புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வரட்சியான சுழலினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் நெடுந்தீவு மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள எவரும் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என அவ் புள்ளிவிபர தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை இவ் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காரைநகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள யாழ்.அனர்த்த முகாமைத்துவ பிரிவானது பொது மக்கள் நீரினை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் எனவும் அவற்றை வீண் விரயம் செய்யக் கூடாது எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

## "எழுக தமிழ்"...

பேரவையினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை கூடி இலங்கை தொடர்பிலான விடயங்களை ஆராய இருப்பதற்கு முன்னரும் இலங்கையில் புதிய அரசியல யாப்பு ஆக்கப்படுவதற்கு முன்னரும் கிழக்கிலே எழுக தமிழ் நிகழ்வு நடத்தப்படல் வேண்டும் என கடந்த வருடம் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி தமிழ் மக்கள் பேரவை கூடி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தது.

அம்முடிவு ஊடகங்கள் வாயிலாக பொது மக்களுக்கும் ஏனையவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர், எழுக தமிழ் நிகழ்வு நடைபெறவிருக்கின்ற தினத்துக்கு மிக அண்மித்த தினத்தில் தமிழர் விழாவான பொங்கல் விழாவினை நடத்துவதற்கு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் அவ்விழா சிறப்புற நடைபெறுவதற்கு இடமளிக்கின்ற வகையிலும், கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கான பதில் பாடசாலையினை எழுக தமிழ் நிகழ்வு நடைபெறவிருக்கின்ற அதே தினத்தில் நடத்த கிழக்கு மாகாண கல்வி அமைச்சு முடிவெடுத்திருக்கின்ற நிலையில் எழுக தமிழ் நிகழ்வு பாடசாலை நடவடிக்கைகளுக்கு குந்தகத்தை ஏற்படுத்திவிடக்கூடாது என்ற வகையிலும்,

எதிர்வரும் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி நடத்தவென தமிழ் மக்கள் பேரவையினால் திட்டமிடப்பட்டிருந்த எழுக தமிழ் நிகழ்வை தமிழ் மக்கள் பேரவை எதிர்வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதிக்கு பிற்போட்டுள்ளது என்பதை, பேராதரவை தந்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் ஆர்வம் உள்ள அனைவருக்கும் அறிவித்துள்ளதாக மேற்படி ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)


கனடாவில் உயர்கல்வி

A/L சித்தியெய்தி விட்டீர்களா? குறைந்தளவு கட்டணத்துடன் கனடாவில் (வெளிநாட்டில்) படிக்க, உழைக்க, நிரந்தரமாக குடியேற ஆசையா? இன்றே, இப்பொழுதே தெளிவாக திட்டமிடுங்கள் காலத்தினை, பணத்தினை விரயமாக்காது உடனடியாக எம்மை நாடுங்கள். எம்மிடம் வருபவருக்கு பிரத்தியேகமான தனித்துவமான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் அனுமதிகளும் வழங்கப்படும்.



சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர் கல்வி, குடியேற்ற ஆலோசகர்கள்

V4 EDUCATIONAL CONSULTANCY

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226236 (இ-7256)

ESWARRAN

Traders, Transport Service, Courier Service & Passenger Service

25 வருட கால நம்பிக்கையான ஸ்தாபனம் Trusted 25 Years Old Company

ESWARRAN EXPRESS

தினசரி பஸ் சேவை கொழும்பு - யாழ்ப்பாணம் / யாழ்ப்பாணம் - கொழும்பு

Daily Service Colombo - Jaffna, Jaffna - Colombo



ஈஸ்வரன் பயணிகள் போக்குவரத்துச் சேவை, பிறந்திருக்கும் 2017 புத்தாண்டில் புதுப்பொலிவுடன் புத்தம் புதிய அதிநவீன சொகுசு பஸ்களுடன், பாதுகாப்பும், சௌகரியமானதுமான தனது சேவையை காரைநகர் - யாழ்ப்பாணம்-வெள்ளவத்தை - யாழ்ப்பாணம்-காரைநகர் வரை தினசரி மீண்டும் ஆரம்பித்துள்ளது.



Hot Line : 0777 674119
Booking Hot Lines
Colombo : 0777 806583,
Jaffna : 0777 806 573, 0777 806574



Bus Fare
பஸ் கட்டணம்
1300/=



★ முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட அதி சொகுசு பயணிகள் போக்குவரத்து சேவை.
★ போக்குவரத்து ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட பஸ் போக்குவரத்து நிறுவனம்.
★ முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட பொதிகள் போக்குவரத்து சேவை.
★ பாதுகாப்பு, சௌகரியம், நம்பிக்கை, துரித சேவை.
★ கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதையினூடாக யாழ்ப்பாணத்தை சென்றடையும்.
★ வாடிக்கையாளர்களுக்கு அவசர பொதிகள் அனுப்புவதற்கு எமது (Courier) சேவையூடாக இலவச கட்டணம்.
★ 24 மணி நேரமும் எமது தலைமை காரியாலயத்தில் பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
★ புறப்படும் முன் தெய்வ தரிசனம்.

வாடிக்கையாளர்களின் அனைத்து தேவைகளுக்கும் 24 மணி நேரமும் நிரந்தர முகவரியில்

201B, Dam Street, Colombo 12, Sri Lanka, Tel : +94 112 433 889, +94 115 232 331, +94 115 232 334, Fax : +94 112 435 247
Branch : No.69,115, Kasthuriyar Road, Jaffna, Sri Lanka. Tel : +94 21 222 4317
No.1, Kandy Road, Karadipoku, Killinochchi, Sri Lanka. Tel : +94 21 228 5306, Fax : +94 21 228 5307 (இ-7287)

FREE HOME DELIVERY

யாழ்.நகரம், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்கு, நிறுவனங்களுக்கு 20 லீற்றர் குடிநீர் குறைந்த விலையில் வீட்டிற்கு கொண்டு வந்து தரப்படும்.

T.P: 077 338 4838, 077 634 7258 (7534)

நாய் விற்பனைக்கு



Graden Dog விற்பனைக்குண்டு. (Female) 01 வயதும் 4 மாதமும். விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

T.P: 076 618 0406

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (இ-7283)

IMS Diploma in Nursing
[Approved by Ministry of Health Sri Lanka]

புதிய தாதியர்களுக்கான கற்கை நெறிகள் ஆரம்பம் 2017 / 2019
அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தாதியர் பயிற்சிப் பாடசாலை

* தகைமை: க.பொ.த (உயர்தரம்) - எந்த துறையாயினும் 3 பாடங்களிலும் சித்தி.
அல்லது
க.பொ.த (சாதாரண தரம்) அடிப்படை 6 பாடங்களில் சித்தியுடன் குறைந்தது ஒருவருட அடிப்படை (Certificate level) சுகாதார கற்கை
அத்துடன்
எம்மால் ஒதுக்கப்படும் சிசிச்சை நிலையங்களில் பணிபுரியும் ஆர்வம்.
* பயிற்சிக்காலம் : மூன்று வருடம்.
* தெரிவுப்பரிட்சையின்அடிப்படையில் புலமைப்பரிசில் வழங்கப்படும்.



எம்மால் வழங்கப்படும் ஏனைய சேவைகள்
நரம்பு நோய்கள் தொடர்பான புணர்வாழ்வு சிகிச்சை மையம்.
சுகாதார உதவியாளருக்கான பயிற்சிகள்.
தொழில் வழிகாட்டல் பயிற்சி பட்டறைகள்.

விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் முகவரி மற்றும் எமது இணையத்தளத்திலும் பெற்றுப் பூரணப்படுத்தி எதிர்வரும் 23.01.2017ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும்

INSTITUTE OF MEDICAL SCIENCES
Green Memorial Hospital, Manipay.
Email: theimsjaffna@gmail.com Web site: www.theims.net
Tel: 0213203970/0212256335 Office time – 8.00am to 4.00pm (இ-7280)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.